M 1803. Vol II—No. 7

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 MAR 1925
MADRAS

லக்ஷ்மி



சொந்தக்காரர்கள் :
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

குஞ்சம் கட்டின

பட்டு லேஞ்சிகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தன கலர் முதலிய பல கலர்கள்.

5 மு × 40 1-க்கு ரூ. 12, 14, 16, 18.

ஷை ஜரிகை கரைகள் போட்டது ரூ. 16 முதல் 20 வரை.

இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளைப் பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப் போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர் :—அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு × 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 15, 18, 20.

எங்களிடம் சேலம், மதுரை, கோரநாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களி லிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

வலைப் பனியன்

போத்தானில்லாதது நைஸானது

பனியன் 1-க்கு ரூ. 1, 1-4, 1-8.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

188, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

சென்னை.



கயாவிலுள்ள புத்த கயா ஆலயம்.

OFFICE OF THE REGIST
26 MAR 192
MADRAS

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் உ. | ரக்தாட்சிஸு மாசிமீ 1925 பிப்ரவரி | இதழ் எ

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	327
2.	தமிழ் மொழி வாழ்த்து	328
3.	பெண்களின் நிலைமையும் கல்வியின் மேன்மையும்	329
4.	கடவுள்	335
5.	கீழோர் யாவர்?	338
6.	ஹிந்து மதத்தின் மறுமலர்ச்சி ...	340
7.	சுதேசி தர்மம்	345
8.	சூரிய விஞ்ஞான ஆராய்ச்சி ...	351
9.	சித்திரப் பத்தி	356
10.	விடுதலை	358
11.	"நடையுடை பாவனை"	362
12.	தியாகத்தின் மேன்மை	364
13.	பத்திராதிபர் குறிப்பு	370
14.	மதிப்புரை	373
15.	உலகப் போக்கு	375

சித்திரப் படங்கள்.

1. கயாவிலுள்ள புத்த கயா ஆலயம்.
2. ஸ்ரீமதி பாண்டுரங்கராவ்.
   ,, மங்களாம்பாள் (லேடி சதாசிவய்யர்)
   ஸ்டான் போடு அம்மையார்.

21034
சென்னை-600 008

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 2 0
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு சிங்கப்பூர், பிணங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2 8

தனிப்பிரதி அணா 4.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாதம் முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக! பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10உக்குள் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் கவனிக்கப்படமாட்டா.

மானேஜர்.

உங்கள் புத்தகசாலை பூர்த்தி யாகாது!

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட்டு எழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. புஸ்தகம் வைத்துக் கொள்வதற்கு அழகான பெட்டியுடன்விலை ரூ. 3. தபாற்செலவு வேறு. சொற்ப காபிகளே கைவச முள்ளது; முந்துங்கள்.

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99, சென்னை.

ஓம்

லக்ஷ்மி துதி

பொருளற்றவர்க் கிவ்வுலகில்லை
யென்று புவிபுகழும்
தெருளுற்ற ஞானியப்பொய்யா
மொழியில் தெரிந்துரைத்தான்
மருளுற்றமாந்தரும் வற்றுதசெல்வ
மிவ்வையகத்துன்
அருளுற்றலாதடைவாரோ
செந்தாமரை ஆண்டவளே.

தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே. (1)

வான மளந்த தனைத்து மளந்திடும்
வண் மொழி வாழியவே. (2)

ஏழ் கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே. (3)

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே. (4)

சூழ் கலி நீங்கத் தமிழ் மொழி யோங்கத்
துலங்குக வையகமே. (5)

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே. (6)

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே. (7)

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே. (8)

பாரதி.

பெண்களின் நிலைமையும் கல்வியின் மேன்மையும்

ஸ்ரீமதி கா. அலர்மேல் மங்கைத்தாயாரம்மாள் எழுதியது.

பெண்கள் நிலைமையும், கல்வியும், ஆதரவும், அனுதரவும் தற்காலமும், முற்காலமும் என்று இப்படி விஷய ஆராய்ச்சிக்கு எடுத்தக் கொண்டால் விஷயம் பெரிதும் விரிந்து விடுமென நினைக்கிறேன். சுயானுபவத்தை யொட்டிப் பார்ப்பின் கிறிஸ்தவப் பாதிரிமார்கள், சுதேசப் பிரபுக்கள், தேசாபிமானிகள் பெண் கல்வி வியாபகத்திற்காக மிகவும் வேலை செய்துள்ளார்கள். உண்மையில் தேசாபிமானிகளின் உழைப்பின்றேல் ஒன்று மில்லை. ஏறக்குறைய அறுபது வருடங்களுக்கு முன் பிரம்ம சமாஜத்தார்கள் பெண் கல்வி வியாபகத்திற்கு வெகுவாய்ப் பாடு பட்டார்கள். இரண்டாவது விண்ணப்பமென்று ஓர் புத்தகத்தை வெளியிட்டார்கள். இவ்விண்ணப்பத்தில் பெண் கல்வி மிகவும் அவசிய மென வற்புறுத்தப் பட்டிருக்கின்றது. மாயூரம். ச. வேதநாயகம் பிள்ளையவர்கள் பெண்கல்வி யென்று மிக அருமையான புத்தக மொன்று ஐம்பத்தைந்து வருடங்களுக்கு முன் எழுதினார். இதன் அருமை பெருமையை எவ்வளவு மெச்சினும் மெச்சத் தகும். பெண்கள் சார்பில் உதித்த அப்பெரியோரை எவரும் மறப்பதற்கில்லை. பின்னும் பலரும் பெண்களுக் கென்றே பல புத்தகங்களும் எழுதிப் பிரசுரித்தார்கள். சுகுணபோதினி, மகாராணி, பெண் மதி போதினி, பெண் கல்வி, மாதர் மனோரஞ்சினி, சக்ரவர்த்தினி, முதலிய பல சஞ்சிகைகளும் வெளி வந்துலாவின. பெண்களை ஆதரித்துப் பேசாத பத்திரிகைகளில்லை. பிரசங்கியாத பெரியோர்களு மில்லை. இத்தகைய பலவித நன் முயற்சிகளால் பெண்கல்வி ஒரு வாறு நம் நாட்டில் இப்பொழுது விர்த்தியடைந்து வருகிறதெனினும் போதுமான வழியில் இன்னும் விர்த்தி யடையவில்லை என்பது வெளிப்படை. இன்னும் அதிகமாய் வியாபிக்கவேண்டு மென்றால் ஜனாசார சீர்திருத்த மகாநாடுகள், ஜாதிச் சங்கங்கள் மற்றைய சபைகள் செய்யும் தீர்மானங்கள் எல்லாம் இனிமேல் காரியத்தில் நடக்கவேண்டும். பெண்களுக்குள்ளே போதுமான படிப்பு வியாபிக்கும் வரை விடாது வேலையுஞ் செய்யவேண்டும். சீர்திருத்த வேலைகளும் இப்போது சரியாய் நடப்பதில்லை. உண்மைக்கு உயிர்கொடுத்து உழைப்போ ரில்லை. செய்கையில் செய்துகாட்டாத வீண் பேச்சுகள் அதிகரித்துவிட்டன. சுமார் 96 வருடங்களுக்கு முன் ராஜா ராம மோகன ராயர் உடன்கட்டை யேறும் வழக்கத்தை நிறுத்தினார். உண்மையில் பாடுபடப் பார்த்தார். தம் வாழ்நாளில் பெண் கல்வியைப் பரவச்செய்ய மிகவும் வேலைசெய்ய வேண்டுமென்று

நினைத்தார். நினைத்தபடி நிறைவேற வில்லை. லண்டனை அடுத்த பிரிஸ்டல் நகரத்தில் அவர் மரணத்தருவாயிலுங் கூட அருகிலிருந்த பெண்களிடம் இந்திய மாதர்களின் தாழ்ந்த நிலைமையைப்பற்றிச் சொல்லி மனம் வருந்தினார். பெரியோர் மனம் வருந்துவதைக் கேட்டிருந்த மிஸ் மேரி கார்ப்பெண்டர் என்னும் மாதுசிரோமணி, இந்து மாதர்கள் கல்வியின் நிமித்தம் தமது தேசத்தை விட்டு, நமது தேசத்திற்கு வந்தார். விக்டோரியா மகாராணியாரின் ஆளுகைக் காலமாதலாலும் போதிய சிபார்ஸுகளுடன் வந்தமையாலும் அருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்புடன் போதிய உதவியு மிருந்தது. முக்கிய பட்டணங்களில் இறங்கிப் பெண் கல்வி வியாபகத்திற்குப் பெண்கள் போதனு முறைப் பாடசாலைகள் மிகவும் முக்கிய மென்று சொன்னதுவு மன்றி ஒவ்வொரு ராஜதானியிலுள்ள கல்வித்தலைவரிடம் பல புது யோசனைகளையும் சொல்லிப் போயினர். தன் கருத்தின்படி நடக்கிறதா வென்பதை அறிய ஆவலோடு நான்கு தடவை இந்தியாவிற்கு வந்து போனார். நேஷனல் இண்டியன் அஸோஸியேஷன் என்றொரு புதுச் சங்கம் ஆரம்பித்தார். அதன் பின் பல கிளைச் சபைகளும் உண்டாயின. பெண்கள் வேலை செய்ய முக்கிய மூலகாரணம் மிஸ் மேரி கார்ப் பெண்டர் அம்மையார் என்பதற் கையமில்லை. இத்தகைய பல நன்முயற்சிகள் நடந்தேறி அரை நூற்றாண்டிற்கு மேலாகியும் நம் தாய் தேசம் இன்னும் அதேகதியில் இருக்கிறதே யன்றித் தீவிரகதியில் எழுந்திருக்க வில்லை. எப்பொழுதும் போல் இப்பொழுது மிருந்தால் நாம் எப்படிக் கடைத் தேறுவோம்? இந்தியா கவர்ன்மெண்டாரும் பல சந்தர்ப்பங்களில் இத்தேசப் பெண்களுக்கு எந்தமுறையில் கல்வி போதிப்பதென்று அறியாதவர்களாய் நமது ஜனத்தலைவர்களை அவ்வப்போது ஆலோசனை கேட்டுமிருக்கின்றார்கள். நமது பாஷை நடை யுடை பாவனைகள் வேறு; அவர்கள் பாஷை நடை யுடை பாவனைகள் வேறு. பொதுவாய் எவர்களும் உறங்கினார்களே யன்றி விழிப்புடன் எழுந்து வேலை செய்யவு மில்லை. நமக்கே அதிக அக்கரை இருக்க வேண்டும். இப்படி யிருப்பினும் மகா யுத்தம் முடிந்தபின் எல்லாம் ஏக காலத்தில் நன்கு முடியுமென்று சிலர் நம்பி எதிர் பார்த்தார்கள் என்பதையும் ஒழிப்பதற் கிடமில்லை. நாம் எதிர் பார்த்தபடி வெகு சுறுவில் சுயராஜ்ஜியப் பேற்றைப் பெற்றுப் பல வழிகளிலும் தேசம் முற்பட்டுவிடவும் முடியாது. பெண்கள் அடிமைப் பட்டிருக்கும் தேசத்திற்கு எவர் சுராஜ்ஜிய மளிப்பர். ஆகையால் பெண்களுக்குப் போதுமான கல்வி கொடுத்து அவர்களையுஞ் சரியான பதவியில் இத்தேசத்துப் பொது ஜனங்கள் வைக்க வேண்டும். துரைத்தனத்தார் செய்வார்க ளென்று எண்ணி எதிர் பார்த்தபடியே யிராமல் எல்லாரும் ஒத்துழைத்து வேலை செய்ய வேண்டும். தற்சமயம் பல வழிகளிலும் பெண்கள் நிலைமையில் சிறிது மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆயினும் நமது தென்னிந்திய மகம்மதிய சகோதரர்கள் தங்கள் பெண்களுக்குக் கட்டாயக் கல்வி வேண்டாமென்று சொல்லாமலு மிருக்கவில்லை. இந்து

மாதர்களின் மாறுதல்களை அவர்களும் பார்ப்பதால் மாறாமலிருக்க அவர்களாலும் முடியாது. முனிஸிபல் கௌன்ஸிலர்கள், கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள், தாலூக்கா போர்ட், டிஸ்டிரிக்ட் எடுகேஷனல் கௌன்ஸல், மெடிகல் அட்வைஸரி சமிட்டி, யூனியன், செனட், ஸிண்டிகேட் முதலிய சபைகளில் அங்கத்தினர்களாய்ச் சில கௌரவமான பெண்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் பாலிகா பாடசாலைகளில் படிக்கிற பெண்களும் அதிகரித்து வருகின்றனர். முக்கிய பட்டணங்களில் பெண்களுக்கென நடுத்தரப் பாடசாலைகளும் சென்னை நகரிலே உயர்தரக்கலாசாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன. வனிதையர்கள் வயித்தியப்படிப்பிலேயும் படிக்க வசதிகள் உண்டாய் வருகின்றன. சென்னைச் சட்டகலாசாலையில் அத்தி பூத்ததுபோல ஓர் பெண்பால் படிக்கின்றார். அடுத்த வருஷத்தில் அதிகமாய்ச் சேரலாம். இந்தியாவிலே இரண்டொரு பெண்மணிகள் வக்கீல்களாயும் அமர்ந்துள்ளார்கள். புதிய முறையில் பெண்கள் ஓட்டுரிமையும் தற்சமயம் பெற்றிருக்கின்றனர். பெண்களுக்குக்கட்டாயப்படிப்பு பற்பல விடங்களிலும் பரவிவருகின்றது. இதுதான் எல்லாவற்றிலும் மிகவும் முக்கியமானதென்று கூற வேண்டும். அந்தஸ்துள்ள பெண்களுள் சிலருக்குப் பதவிப்பெருமைகள் வந்திருப்பினும் பெண்கள் சமூகத்திற்கே விசேஷ நன்மைகள் வந்து விட்டதாய்ப் பாவிப்பதற்கில்லை. அப்பதவிப் பெருமைகள் எல்லாம் பெரும்பாலும் அந்தஸ்துள்ளவர்களையே சார்கின்றது. சமுத்திரத்தில் மழை பெய்வது போலத் துரைத்தனத்தார் இயல்புமிருக்கின்றது. பெருமையுள்ள பெண்களைப் பின்னும் பெருமைப்படுத்துவதினால் ஊக்கம் ஒருபோதும் உண்டாய்விடாது. உண்மையில் வேலை நடக்க வேண்டுமானால் ஊக்கமாய் உழைப்பவர்களைப் பார்த்து ஊக்கப்படுத்த வேண்டும். அந்தஸ்தே பிரதான மல்ல. பெண்கள் ஓட்டுரிமையைப்போலச் சொத்துரிமையும் பிறவும் பெற வேண்டும். நியாயமான வழியில் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் எல்லா உரிமையும் பெருமையும் இருக்கவேண்டும். படிப்பு இரு பாலார்க்கும் இருக்க வேண்டும். ஆணுக்கும் பெண்ணுக்கும் யாதொரு பேதமு மிருக்கலாகாது. கால மாறுதலிலே பெண்கல்வி விரோதிகளும், வீண் தர்க்க வாதிகளும் குறைந்து வருகின்றார்கள்.

1872௵ல் ஜப்பான் சக்கிரவர்த்தி அவர்கள் "இன்று முதற்கொண்டு என்னுடைய தேசத்தில் கல்வி யில்லாதவர்கள் ஒருவர் கூட இருக்கலாகாதென்று" விளம்பர மென்றை வெளியிட்டார். நம்முடைய ஜார்ஜ் சக்கரவர்த்தியும் அப்படியே தீர்மானித்து நம் நாட்டிற்கும் அத்தகைய விளம்பரத்தை விடுக்கும் நற்காலம் எக்காலமோ தெரியவில்லை. அக்காலமே நமக்கெல்லாம் நற்காலமாகும். சுமார் நாற்பது வருடங்களுக்கு முன் ஜப்பானியர் இருந்தவிடமே எவர்க்குமே தெரியாமலிருந்தது. இப்போது மலைமேல் வைத்த தீபம் போல் அத்தேசத்தின் பெயர் பிரகாசமாய்த் தெரிகின்றது. காரணம் கல்வியே அல்லவா? மற்றவை பிரதானமல்ல. பிரிட்டிஷாரின் சகவாசத்தினாலே தாங்கள் இப்போதிருக்கும் உன்னத நிலை

ஸ்மையை அடைந்ததாக ஜப்பான் சக்கரவர்த்தி மகுடாபிஷேக தினக்கொண்டாட்டத்தின் பொழுது வெளிப்படையாய்ச் சொல்லிக் கொண்டார். பிரிடிஷ் பிரஜைகளாகிய நமக்கு அவர்களிலும் ஆயிரமடங்கு விசேஷப்பெருமை கிடைக்கவேண்டியது நியாயமா யிருக்க, கிடைக்காமலிருப்பது ஆச்சரியமே. சுற்றிலும் பிரகா சமாய் ஒளிவீசி நிற்கும் தீபஸ்தம்பமானது தீபத்தைத் தாங்கி யிருந்தும் தன் மேலிருளை மூடி நிற்பதுபோல நமது பிரபத் துவமும் ஆட்சி புரியும் நம் சொந்த இடத்தை இருட்டில் வைத்தி ருந்து வெளிநாட்டிலே பிரகாசிப்பதுபோ லிருக்கிறது. குற்றம் குடிகளின் பேரிலா? ராஜாங்கத்தின் பேரிலா? "ராஜா எப்படி குடிகளும் அப்படி" என்பது ஒரு பழமொழி யல்லாவா?" ஆயினும் ஒரு சார்பிலே மட்டும் குற்றஞ் சொல்லிப் பயனில்லை. நம் பேரி லேயே நாம் முதலிற் சொல்லிக்கொள்ள வேண்டும். ஜாதி மதத் திலே சம்பந்த மில்லாத அன்னியர் பேரிலே குற்றஞ்சொல்லிக் காலம் போக்கும் காலம் இதுவல்ல. உண்மையில் வெளியில் வந்து வேலை செய்யும் கால மிது. எவருமே இப்பொழுது சும்மா யிருக்கலாகாது. பூர்வீக காலத்திலே நம் தேசத்தில் பெண்கல்வி எங்கும் வியாபித்தி ருந்தது. தமிழ் நாடு மற்றைய நாடுகளிலும் விசேஷமென்று பூர்வீ கப் பெண்களின் நன்னிலைமையை நினைவு கூர்ந்தாவது முற்பட லாமே. மத்திய காலத்திலும் கூட கிராமங்கள் தோறும் வாத்தியார் மானியங்கள் விடப்பட்டிருந்தன. குழந்தைகளுக்கு எவரும் ஐந்து வயதில் அக்ஷராப்பியாஸம் செய்துவிடுவார்கள். எல்லா ஜாதிப்பெண் களுக்குள்ளும் கல்வி அபிவிர்த்தியா யிருந்ததென்பதற்குச் சந்தேக மில்லை. உதாரணமாக நாம் வசிக்கும் தென்னிந்தியாவின் பூர்வீகப் பெண்கள் நிலைமையைப் பார்ப்போம்.

"புறநானூறு" என்னும் பூர்வீக கிரந்தத்திலும், வேறு பல தமிழ் நூல்களிலும், விசேஷமாய்ப் படித்த பெண்களின் பெயர்கள் பலவும் வருகின்றன. பேர்களை விரிக்கிற் பெருகுமென விடுக்கின் றேன். படிக்காமலா பெண்களின் பெயர்கள் இருக்கின்றன. சைவ வைணவப் பெண்களிலே படித்தவர்கள் பலருண்டு. தேசபக்தியுள்ள வீரத் தாய்மார்களின் பெயர்களை வெகுவாய் வியந்து கொண்டாட உரி மை யிருக்கின்றது. அக்காலத்திலே பால்ய விவாகமென்பது மருந்திற் கும் கிடையாது. கால மெல்லாம் கன்னிய மாயிருக்கவும் ஓர் பெண் ணிற்கு உரிமையுண்டு. ஓர் பெண் ஒருவனை மணக்க இஷ்டப்படா விட்டால் கன்னிகையாகவே இருக்கலாம். இஷ்டப்பட்டால் மணந்து கொள்ளலாம். ஒருவன் பல வித முயற்சி செய்தாலும் பெண் இணங் காவிடின் சும்மா யிருக்கவேண்டியதே. காதல் மேலிட்டவன் மலை மேலேறித் தலை கீழாய் விழுந்து உயிர் விடுவானே யன்றிப் பெண்ணை நிர்ப்பந்தத்திலே ஒன்றுஞ் செய்யமுடியாது. என்னே அக்காலத்துப் பெண்களின் பெருமை! அக்காலத்துப் பெண்களின் நிலைமை இக் காலத்துப் பெண்களின் நிலைமையிலும் மேன்மை என்பதற் கைய மொன்று மில்லை. கற்றோ ரேத்தும் கலித் தொகையிலே மடலேறு

தல் என்று இது பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஏறு தழுவல் என்னும் காட்சியிலே பெண்களும் ஆண்களும் ஓரிடத்தில் கூட்டமாய்க் கூடுவார்கள். வேலிக்கு நடுவிலே உள்ள உயர்ந்த மேடையில் பெண்கள் வீற்றிருந்து வேடிக்கை பார்ப்பார்கள். அச்சமயத்தில் சுற்றிலும் பலர் துஷ்டக் காளைகளைத் துரத்தி விடுவார்கள். காளைகள் குதித்துமிரண்டு ஓடியும் எவரையும் முட்டித் தள்ளவும் ஆரம்பிக்கும். கொம்புகளினால் குத்துண்டு குடல் சரிந்து அலரி வீழ் வோரும், அபாயத்திலே அகப்பட்டு அவஸ்தைப் படாமல் தைரியம் காட்டுவோரும், உயிருக்குத் துணிந்து மூர்க்கமாக ஓடி வரும் எருதுகளின் கொம்புகளைப்பிடித்து நிறுத்தி விடுவோருமா யிருப்பர். இத்தகைய வீரர்களைத் தெரிந்து கொண்டு சில வீரமதிகள் பலர் முன்னிலையில் மணமாலை சூட்டி மணஞ் செய்து கொள்ளவதுவு முண்டு. ஆடவரும் பெண்டிரும் கைகோர்த்து ஆங்கிலேயர்களைப் போல ஆடுவது முண்டு. இதைக் "குரவைக் கூத்து" என்பர். ஆடல் பாடல் பலருக்கும் இப்பொழுது வேண்டிய தில்லை யெனினும் கல்வி வேண்டிய தில்லை என்பதற் கில்லையே. கல்வியின்றி விவேகம் எப்படி உண்டாகும்? நமது நாட்டிலே முன் பெண்களிலே அரசிகளும், கவிஞரும், படித்தவரும் மிகவும் அதிகம். அப்பெண்களுக்கு ஒப்பாய் இப்பொழுது ஒருவரையும் சொல்வதற்கு மில்லை, இக்காலத்திலும் ஔவையாருக்கு ஒப்பாருமில்லை. மிக்காரு மில்லை. ஒட்டுரிமை வந்த தற்காலத்திலே பொதுவாய் இந்துப் பெண்கள் யாவருமே கல்வியிலும் ஞானத்திலும் முற்படவேண்டியது பின்னும் அவசிய மென்பேன். சௌகரியமுள்ள பெண்கள சுயபாஷையுடன் பல பாஷைகளையும் படிக்கலாம். ஆனால் தன் சொந்த பாஷையைப் படிக்காதவர்கள் மற்றெந்த பாஷையைப் படிக்கப் போகிறார்கள்.? எவ்வளவோ நாகரீகப்பட்ட இக்காலத்தில் சற்றேறக் குறைய நூற்றில் தொண்ணூற்றொன்பது பெண்கள் சுத்தத் தற்குறிகள் (கீறல் பேர்வழிகள்) என்று சிலர் சொல்வதிலே என்ன பிழை யிருக்கின்றது.? சரியாய்ப் படித்த பெண்கள் ஆயிரத்தில் ஒருவர் கூட இல்லை யென்பது உண்மையே. நன்றாய்ப் படித்தறிந்த ஐம்பது ஆடவர்களுக்குள் ஒருவருக்கு நல்ல கல்வி வாசனையுள்ள உத்தம மனைவி கிடைப்பது இன்னும் அரிதா யிருக்கிறது. இதுவே இத்தேசத்தின் பெருமை. நாற்பத் தொன்பது பேர்கள் வெட்க மின்றிக் கல்விஞான மில்லாத மூட ஸ்திரீகளையே விவாகஞ் செய்து கொள்ளுகிறார்கள். இந்நாட்டில் அநேகமாய் ஆடவர்க்கு ஸ்திரீகள் சமூக சிநேகத்திலேயுள்ள தாய், தாரம், தமக்கை, தங்கை, அத்தை, பாட்டி, அண்ணி, மாமி, மைத்துணி, மகள் மருமகள் பேத்தி முதலிய யாவருமே படியாதவர்களே. நமது நாட்டிற்குள் மூட சகவாசமே ஆடவர்களுக்குள் வெகு நன்றாய் வேரூன்றி நிலைத்து விட்டது. இக்காரணத்தினாலேயே ஆடவருள்ளும் அதிமேதாவிகள் அதிகம் கிடையாது. ஒரு காலை மடக்கி ஒரு காலில் குதித்து நொண்டி அடித்துத் தடுமாறி நிற்பவன் இரண்டு காலோடு வெகு வேகமாய் ஓடுகிறவனை

எப்படி ஜெயிக்க முடியும்? ஒருபோதும் முடியவே முடியாது. அது போலவே இத்தேசத்து ஆடவரும் நாகரீக உலகில் ஏமாந்து நிற்கின்றார்கள். மற்ற தேசவாசிகளைப் பல விதத்திலும் பார்த்துப் பெரு மூச்சுவிட்டுப் பயனில்லை. ஒரு குளக்கரையில் ஒரு தவளையையும் எலியையும் ஒரு கயிற்றிலே இரு முனைகளிலும் இறுக்கிக் கட்டிப் பிணைத்து வெளியே விட்டு விட்டால் தவளை தண்ணீருக் கிழுக்கும் எலி மேட்டுக் கிழுக்கும். அதைவிட வேறென்ன செய்யும்.? அப் படிப்போல இத்தேசத்தில் ஆண் பெண் இருவருமே ஒரு கயிற்றில் கட்டுண்ட நிலைமையி லிருக்கின்றார்கள். ஆயிரஞ் சொல்லிப் பயனில்லை, சுருக்கிச் சொல்கின்றேன். இத்தேசத்துப் பெண்கள் யாவருமே சரியான நிலையில், நல்லவழியில், தாய் பாஷையிலே, கட்டாயப் படிப்பிலே, சுதந்தர உணர்ச்சியிலே, கற்றுக் கடைத்தேராத வரையில் தேசம் ஒருபோதும் முற்பட முடியாதென உறுதிமொழி கூறி முடிக்கின்றேன்.

என்றோ?

பிராமண-பிராமணரல்லாதார் சண்டை சென்னையில் மிகுதியாயும், மஹராஷ்டிரத்தில் அதற்கு அடுத்தபடியாயும் இருப்பதாய்த் தெரிகின்றது. கல்கத்தாவில் உள்ள "பிராமண சங்கத்தார்" வெளியிட்டிருக்கும் அறிக்கையைப் படித்தால் வங்காளத்தில் இச் சண்டை மிகுதியாய் இருப்பதாகத் தோன்றுகிறது. சர். பி. சி. ரே. பிராமணர்களை வங்காளக் குடாக்கடலில் தூக்கி யெறிய வேண்டு மென்று சொன்னா ரென்பதையும், தேசபந்து தாஸ் சுயராஜ்யம் வந்தவுடன் பிராமணப் பெண்களைச் சண்டாளர்களுக்கும், வண்ணார்களுக்கும் கொடுக்கக் கட்டாயப் படுத்த வேண்டு மென்று கூறினாரென்பதையும் அறிவுள்ளவர்கள் நம்ப மாட்டார்கள். ஆனால் இவர்கள் இவ்வாறு சொன்னார்க ளென்பதை நல்ல நிலையிலுள்ள பொறுப்புள்ள, பிராமணர்கள பலர் நம்புவதால், வங்காளத்தில் சண்டை மிகக் கடுமையாய் இருக்கின்றதென்று தெரிகின்றது. தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுதற்குப் பிராமணர்கள் தங்களுக்கென ஒரு பாதுகாப்புச் சங்கம் நிலை நாட்டிக் கொள்ளல் நன்றன்று! தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுதற்கு அவர்களுக்கு மற்ற வகுப்பாரைக் காட்டினும் வேறு பட்ட உரிமைகள் இல்லை. அவர்கள் ஒன்று செய்ய வேண்டும். அவர்கள் மற்றச்சாதியார் அல்லது வகுப்பாரைக் காட்டிலும் தாம் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதையும் பாவித்துக் கொள்வதையும் விட்டொழிக்க வேண்டும்.

"இந்தியன் சோஷல் ரிபார்மர்"

கடவுள்

ஸ்ரீமான் அ. ச. அருணசல ரெட்டியார் எழுதுகிறார்.

அகன்ற நீர்ப் பரப்பும் நிலப் பரப்பும் பொருந்திய இவ்வுலகத்தைப் படைத்தவர் கடவுளே என்பது யாவரு மறிந்த உண்மை யாகும்.

" ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானிடம்
நீர், பறவை, நாற்காலோர் பப்பத்தாம்—சீரிய
பந்தமாந் தேவர் பதினான்கு அயன் வகுத்த
அந்தமில்சீர் தாவர நாலைந்து.'

அதாவது—உலகத்தில் வாழும் பிராணிகளில் ஊர்வன வற்றில் பதினொரு லக்ஷமும், மக்களில் ஒன்பது லக்ஷமும், நீர் வாழ்வனவற்றில் பத்து லக்ஷமும், பறப்பன வற்றில் பத்து லக்ஷமும், நாற்கால் பிராணிகளில் பத்து லக்ஷமும், தேவர்களில் பதினாலு லக்ஷமும், மரஞ் செடி கொடிகளா கிய தாவரங்களில் இருபது லக்ஷமுமாகக் கூறப்பட்ட எண்பத்து நான்கு லக்ஷம் பிராணிகளும் அவராலேயே படைக்கப் பட்டன என்பதும் அனைவரும் அறிந்த உண்மை யாகும்.

பழத்தில் சாறும் பாலில் நெய்யும் எவ்விதம் விளங்கு கின்றனவோ அது போல் கடவுள் எல்லாப் பொருள்களி லும் விளங்குகிறார். அதனால் எல்லா உயிர்களும் அவரது அமிசமே யாகும். நாம் உலகினில் காணும் யாவும் இறைவ னது அகண்டா கார சொரூபமே யாம். நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் அவருக்குத் தெரியும். "அவ னன்றி ஓர் அணுவும் அசையாது" என்றபடி அக் கட வுளையின்றி உலகத்தில் ஒன்றுமே நடைபெறாது.

கடவுள் ஒருவராயும், என்றும் உள்ளவராயும், பரி சுத்த முடையவராயும், சூரியன் சந்திரன், அக்னி என்ற மூன்றிலும் மேன்மையான ஒளி பொருந்தியவராயும், பிணி, மூப்பு, உறக்கம், முதல், நடு, இறுதி, விருப்பு,

வெறுப்பு என்பன இல்லாதவராயும், ஆண் பெண் அலி என்பன வற்றில் எதுவு மல்லாதவராயும், குறி குணங்கள், உருவம், அருவம், உருவாருவம் அற்றவராயும், எங்கும் நிறைந்தவராயும், இன்ன நிறமுடையவர், இப்ப டிப் பட்டவர் என்று அறிய முடியாதவராயும், தம்மை வழி படுபவர்களுக்கு அருள் புரிபவராயும், தமது அடியார்க் கடியராய், அவர் மனம் போல நடப்பவராயும் உள்ளவர். அவரையே வேதம் "ஓம்" என்று கூறும். வேதத்தின் உச்சியில் இருப்பவரும் அவரே. அவரையே நாம் கடவுள், இறைவன், ஆண்டவன், தெய்வம், தேவன், பரம்பொருள், பிரமன், திருமால், சிவன், இயேசு, மகம்மது, புத்தர் எனப் பலவாருகப் பெயரிட்டுக் கூறுகிறோம், எனவே கடவுள் எல்லா மதத்தினருக்கும் பொதுவானவ ராவர்.

அஞ்ஞான மென்னும் மாயையாகிய இருளில் அகப் பட்டு (அதாவது பனியில் வைத்திருக்கும் விளக்கு ஒளி வீசியும் அது அப்பனியினல் மூடப்பட்டு மறைந் திருப்பது போல) மறைந்திருந்த உயிர்களின் மேல் கட வுள் தாம் கொண்டுள்ள பேரருளால் அவ்வுயிர்களை மிகுந்த ஒளி பொருந்திய—எப்பொழுதும் இன்ப மயமாயுள்ள தமது திருவடி நீழலிற் சேர்த்துக் கொள்ளும் பொருட்டு அவ்வுயிர்களுக்குத் தநுகரண புவன போகங்களைத் தந்து உலகில் மக்களாகப் பிறப் பித்து, வேதத்தை அருளிச் செய்து அதில் அம்மக்கள் இன்னபடி நடக்க வேண் டும், இன்னபடி நடக்கக் கூடாது எனத் தெளி வாய்க் காட்டி யிருக்கிறார். அதன்படி விலக்கத்தக்க வற்றை விலக்கி, விதித்த வற்றைச் செய்து தம்மீது அன்பு செலுத்து கின்றவர்களுக்குப் பேரின்பம் அளித்து, தாம் அருளிய அவ்வேதத்திற்கு மாறுக நடப்பவர்களுக்கு அப்பேரின்பத்தை (மோக்ஷத்தை) அளிக்காமல் அவர்கள் நல்வழிப்படும் பொருட்டு அவர்களுக்குத் தண்டனை யளித்து அவர்கள் திருந்திய பிறகு தம்மிடம் சேர்த்துக் கொள்கிறார். உயிர்களின் மேல் தமக்குள்ள அன்பினு லேயே அவர் அவ்விதம் தண்டனை யளித்து அவ்வுயிர் களைத் திருத்துகிறார். இவ்விதம் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலையும் அவரே நடத்துகிறார். இத்தகைய பல விவகாரங்களைச் செய்யும் அக்கடவுளுக்கு

அவற்ருல் எவ்வித பாவமாவது புண்ணியமாவது சேர்வ தில்லை.

மூற் கூறிய முத்தொழிலைச் செய்வதற்கே நாம் கட வுளை மூன்று பிரிவாகப் பிரித்துப் படைக்குந் தொழிலுக் குப் பிரமன் என்றும், காக்குந் தொழிலுக்குத் திருமால் (மகா விஷ்ணு) என்றும், அழிக்குந் தொழிலுக்குச் சிவன் (ருத்திரன்) என்றும் கூறுகிறேம். உண்மையான கட வுள் ஒருவரே மூன்று தொழில்களையும் இயற்றுகின்ருர். இதனை "மூ வுருவும் ஓ ருருவாய் நின்ற முதல்வா" என்ற நம் முன்னோர் வாக்கால் அறியலாம். எனவே கடவுள் ஒரு வர்தா னென்பதும், அவர் இம் முத்தொழில்களைப் புரிவ தால் ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு பெயர் அமைந் திருக்கிறதேயன்றி மூன்று கடவுள் தனித்தனியாக இல்லை என்பதும் இதனல் நன்குணர லாம். இதை அறியாத சிலர் இந்துக்கள் பல தெய்வங்களை வைத்து வணங்கு கின்றன ரென்று கூறி இடர்ப் படுவர்.

சிலர் எங்கள் தெய்வம் வேறு, உங்கள் தெய்வம் வேறு எனப் பிரித்துக் கூறி உழல்வர். இவர்கள் அறியாமையி ஞலேயே இவ்விதம் கூறுகின்றனர். உலகத்திலுள்ள எல்லாச் சமயத்தினருக்கும்—உயிர்களுக்கும் கடவுள் ஒரு வரே யாவர். ஒவ்வொரு சமயமும் அவ்வொரே கடவுளையே அடையக் கண்டு பிடித்த ஒவ்வொரு வழி யாகும். ஒரு ஊருக்கு வெவ்வேறு வழிகள் சென்ருலும் முடிவில் அவ் வழிகள் அனைத்தும் அவ்வூருக்கே வந்தடைவது போலப் பல சமயங்க ளிருப்பினும் அவை அவ்வொரே கடவுளையே சேர்வதாகும். எல்லாச் சமயத்தாரும் அவரிடமே போய்ச் சேர்கின்றனர். இவ்வுண்மையை நாம் அறிந்து நல் வழிப்பட்டு இறைவன் திருவடி நீழலாம் பேரின்ப வீட்டை அடைய முயலுவோ மாக.

ஓம் தத் சத்.

கீழோர் யாவர்?

(ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசன் எழுதியது.)

ஓர் உயிர்க்குத் துயர் நேர்ந்தவிடத்து அதனை யொழிக்கப் பரிதவ மூரு திருத்தலும், யாதொரு காரணமு மின்றிக் கோழிப்பகை கொண்டு நல்லோரைப் பகைத்துப் போராடப் புகுதலும், பிறரது பொருள் தாரங்களைச் சிந்தித்து, விட்டிற் பறவை விளக்கைக் கனியெனக் கருதுமாபோல் தனக்கு இன்பங் கொடுப்பன வென அவற்றின் மேல் பேரவர்க் கொள்ளுதலும், மனத்தின் கண்ணே நிறைவு கொள்ளலை யொழித்தலும் பெரியவரிடத்தும்சுற்றத்தாரிடத்தும் செல்வங்கண்டுழிப் புழுங்குதலும் "அடல் வாழ்ந்தால் ஐந்து நாள் பட்டினி" என்பது போல் அழுக்காறு கொள்ளுதலும் ஆகிய இத்தகைய தீய குணங்களே கீழோர்க்குப் பிறப்பிலேயே உண்டான முக்கிய குணங்களாம். இத்தகைய தீக்குண முடையான் கல்வியிற் சிறந்தவனே ஆயினும், அவனது சிநேகத்தை விலக்க முயலுவது நன்றே. பாம்பு என்ருல் படையும் கலங்கும் என்ற முது மொழியைக் கேட்டிருக்கிரும். இன்னும் துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்று நம் பெற்ருேர் நம் சிறு பிராயத்தி லிருந்தே நமக்குச் சொல்லி வருகிருர்கள். வெட்க முடையான் ஒருவனை அவன் ஏதோ கால வித்தியாசத்தினல் தகாத கருமத்தைச் செய்து வெட்கி யிருக்கிருனென்று கூறுவதும், நன்னெறிப் பட்டா னெருவனை இடம்ப னென்று இயம்பிக் களிப்பதும், உள்ளும் புறமுமொத்த தூய்மை யுடையா னெருவனை, குழைத்திடு கள்ள னென்றும், மாயவேடத்தா னென்றும் இகழ்ச்சி செய்வதும்,சூரனை ஒருவனை இரக்கமின்றி உயிர்க்கொலைபுரிவோ னென்று கொடுமை கூறுவதும், தன் மனத்திற் பட்டதைச் செவ்வனே வரையுந் திறமை யமைந்த ஒருவனை நாவல னென்று மதியாது அவன் பயனற்ற விஷயங்களில் வெற்றெனச் சொற ெருடுக்கும் வீணனென்று பறைவதும் ஆக இவ்வாறு பிறரிடத்திற் குற்றங் காண்பதே கீழோர் தன்மை. ஆகவே இகழப் படாத நற்குண மேது? ஒரு வரிடத்து நற்குணங்க ளிருப்பினும் அவற்றை விட்டுத்

கீழோர் யாவர்?

தீக்குணங் தேடுவதே இவாது தொழில். ருசியுள்ள் மாங்கனியைக் காக்கை தின்னுமோ? அதற்கு வேப்பம் பழத்தின் பேரில்தான் விருப்பம். காக்கைக்கும் கீழோர்க் கும் என்ன வேற்றுமை?............துஷ்டரின் தன்மையை இச்சிறு கதையால் அறியலாம்.

ஒரு குன்றினின்று வரும் ஒரு சிற்ருற்றின் மேட்டுப் பாகத்தில் நீர் பருகிக் கொண்டிருந்த ஓநா யொன்று அந் நீரோட்டத்தின் கீழ்ப்புறத்தில் தண்ணீர் குடித்து நின்ற ஓர் ஆட்டுக் குட்டியைக் கண்டு அதனைக் கொன்று தின்னக் கருதி அதனை நோக்கி "அடா! துஷ்டா! யான் பருகும் நீரினைக் கலக்கும் நினது துணி வென்னே!" என்றது. அதற்கு ஆட்டுக் குட்டி 'ஐயனே! இவ்வருவி உமதிடத்தி லிருந்து என்பால் வருகிறது. நீர் பருகும் நீரையான் கலக்கி னேன் என்பது யாங்ஙனம் கூடும்?" என்று பணிந்து கூற, ஓநாய் "அது இருக்கட்டும்; ஓராண்டு முன்னர் என்னை நீ இகழ்ந்தா யல்லவா?' என்று சீற, அச் சிற்ருடு, ஸ்வாமி! அடியேன் பிறந்து இன்னும் ஆறு மாத மாகவில்லையே! அங்ஙனமாகத் தங்களை ஓராண்டு முன்னர் இகழ்ந்தே னென்று கூறுவது வியப்பே' என்று இரங்கிக் கூறலும், அக்கொடிய ஓநாய் பிறிதேது முரையா டாது அதன் மேற் பாய்ந்து அதனைக் கொன்று தின்றது.

———

முற்றற் பவளச் சிலையோன் முகுந்தன்றன்
மொய்ம்பில் வளர்
கொற்றத்திரு மடந்தாய், அடியேன்
கலிக்கோடை யிடை
பற்றற்ற மேலவர் தங்கோலத் தோடு
பதைக்கை நன்ருே!
சற்றற் புதக் கருணைக் கடலாட்டத்
தயை செய்தியே.

ஹிந்து மதத்தின் மறுமலர்ச்சி

(சென்னை லாட் கோவிந்த தாஸவர்கள் எழுதிய வியாசத்தின் சுருக்கம்).

ஹிந்து மதத்தை எங்ஙனம் உயிர்ப்பிப்பது? ஹிந்து மதத்தை உயிர்ப்பிப்பதா, இல்லையா? இந்துக்கள் இந்து மதத்தைத் தம் தேசத்துக்கடுத்த பான்மைகளைச் செவ்வனே கைக்கொள்ளாமல் பராமரிக்கக் கூடுமா? இந்து மதத்தைப் பராமரிக்காமலே தம் தேசத்தின் முற்போக்குகளைப் பராமரிக்கக் கூடுமா? இந்து மத உயிர்ப்பிப்பை, சாஸ்திர வரன் முறைகளின் வண்ணம் இந்துக்களைத் தீக்ஷைகளின்றி ஏற்படுத்தக் கூடுமா. அல்லது கூடாதா? இந்து தேசத்தைப் பிளவு படுத்தியுள்ள சமயக் கருமங்களை நாம் இன்னும் கைக்கொண்டிருக்க வேண்டுமா? கர்மங்களில் நல்லெண்ணங்களை இந்துக்களுக்கு உண்டாக்காமல் இந்துமதத்தை உயிர்ப்பிக்கக் கூடுமா? என்ற கேள்விகள் ஏற் பட்டால் நாம் இவைகளை ஒவ்வொன்ருக ஆராய்ந்து வேண்டியவைகளைச் செய்து கொள்ள வேண்டியவர்களாவோம். கர்மங்கள் சுகாதாரத்தையும் சுவாத்தியத்தையும் மட்டும் கொண்டுள்ளனவா? அல்லது தத்துவ சாஸ்திர ஆராய்ச்சிகளைக் கொண்டுள்ள நடவடிக்கைகளின் ஆவசியகங்களைக் கொண்டுள்ளதா? என்று விசாரித்தால், சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள வைதீக கர்மங்கள்யாவும் மனிதன் மனிதனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும், இந்துக்களின் இல்லறத்திற் கடுத்த வரன் முறைகளையும், விவசாய முற்போக்குகளைப் பெருக்குதல்களுக்குக் குரிய ஏற்பாடுகளையும், ஏனைய படையெடுப்புகளினுல் இந்தியா சீரற்றுப் பஞ்சங்களில் சிக்குதலாகும் சமயங்களில் நல்வழியில் ஊதியங்களைப் பெருகச் செய்து கொள்ள வேண்டிய வரம்புகளையும் கொண்டுள்ளனவெனவே கூறல் வேண்டும்.

***

எனவே கர்மம் விவாகங்களைக் குறித்த முறைகளை இந்து மதத்தில் கவனிப்பாம். பிராமணர்களின் கடமை இந்துக்களின் அனுஷ்டானங்களைப் பெருகச் செய்யப் போதிப்ப தல்லவா? இவைச் கென பிராமணர்களை, அப்பிராமணர்களின் அலுவல்களான உத்தியோகப் பற்றிலும், ராஜ தந்திரக் கிளர்ச்சியிலும் ஈடுபட ஒட்டாது, பிராமணத்துவ முறைகளை நன்கு எழுதி, இந்துக்களை சாஸ்திர முறை அனுஷ்டானங்களில் ஈடுபடத் தகுதியானவர்களாகச் செய்ய, நாம் கடமைப் பட்டவர்க ளல்லவா? இந்துமதத்தின் கொள்கைகளை, அப்பிராமணர்கள் யாவரும் அனுபவ முறைகளில் அப்பியஸிக்கச்

செய்ய வேண்டிய சாதனங்களை, எளியவைகளாகச் செய்து அளிக்கக் கடமைப் பட்டுள்ளவர்களல்லவா? க்ஷத்திரியர்களும் வைசியர்களும் இந்துமதத்தின் நுட்பங்களை நன்குணர்ந்து, சரியாகவும், நேர்மையாகவுமுள்ள பாட்டைகளில் ஒழுகி நடக்கப் போதிக்க வேண்டிய ஆவசியகங்கள் இருக்கின்றன வல்லவா? இம்மக்கள் சாஸ்திரப் பயிற்சியற்ற பிராமணர்களின் மோச வழிகளில், நடந்து கொண்டிருக்கவே வேண்டுமோ? கிருஸ்துவ மதம் அல்லது முகம்மதிய மதத்தைத் தழுவினாலொழிய எவ்வப்பிராமணனும் ஹிந்து மதச் சடங்குகளை முறையாகச் செய்தொழுகுவதிலும் பிற்போக்குகளைக் கொள்ள இச்சிப்பதில்லை. இருப்பினும் அப்பிராமணர்களில்பெரும் சமூகம் இந்துக்களல்லாத வாழ்விலேயே ஈடு பட்டு வருவதைக் காண்கிறோம். இந்து மதத்தில் கட்டுப்பட்டிருக்கும் சிறு சமூகமும் சாஸ்திர வரன் முறைகளில்லாத வகையிலும். தர்ம கிரந்தங்களினால் ஆக்யாபிக்கப் படாத முறைகளிலும், தம் நித்ய நைமித்திய கருமங்களைச் செய்து வருவதையும் நாம் கண் கூடாகக் காண்கிறோம். லட்சத்திற்கு ஒரு அப்பிராமணன் தான் சுயமாக சாஸ்திரப் பயிற்சி கொண்டுள்ளவனாக இருக்கின்றனன். சுபாவீகமாக அப்பிராமணர்கள் சாஸ்திரக் கல்வி பயிலு வதில் முற்படுவதில்லை. சென்னை இராஜதானியின் மூன்று கோடி அப்பிராமண மக்களில் வேத நூல்களைக்கற்றவர்களும் சாஸ்திர அப்பியாஸ முறைகளின் வரம்புகளில் ஈடுபட்டுள்ளவர்களும் சுமார் 300 பேர்கள் கூட இல்லை. அறிஞர்களெனச் சொல்லப்படும் அப்பிராமணர்களும் பிராமணர்களைடபோல ஏன் சாஸ்திரங்கள் கற்கக் கூடாது? தம் மதக் கிரந்தங்களை அறிந்துணர அப்பிராமணர்களின் எதிர்ப்புகளும் பிரரமணர்களின் ஒப்பந்தங்களும். பிராமணர்களின் மோசடிகளும் இவ்விஷயத்தில் ஏன் ஏற்படல் வேண்டும்? தென் இந்தியாவின் சமயாசாரியர்கள் யாவரும். பிராமணர்களில் பெரும் இனமும், சாஸ்திரங்களைத்தம்மின் உயர்விற்கென முத்திரை போட்டு வைத்துக் கொண்டும், அப்பிராமணர்களை அறியாமையிலேயே ஆழ்த்திவைக்க வேணடுமெனவும் முற்பட்டுள்ளார்கள். எவ்வண்ணம் அப்பிராமணர்கள் சாஸ்திரங்களை அறியக் கூடாதவர்களாக இருக்கினவுனரோ, அவ்வளவும் பிராமண் புரோகிதர்களுக்கும், பிராமண ஆசாரியர்களுக்கும் நலம் எனக் கருதியுள்ளார்கள். சாத்திரங்களின் ஆத்மஞானமும். மத விவேகமும் உள்ள விஷயங்களில் எங்ஙனம் பிரரமணர்களினால் அப்பிராமணர்கள் அடிமை வாழ்வில் வீழ்த்தப்பட்டிருக்கின்றன ரென்பதைக் கவனித்தால் அறிஞர்களின் மனம் நடுங்கும்.

***

அப்பிராமணர்கள் லட்டின், கிரீக், பிரஞ்சு முதலிய பாஷைகளைக் கற்று .அக் கலாசாலைகளின் சிறந்த தேர்ச்சிகளையும் பதவிகளையும் பெறக் கூடியவர்களாக இருக்கும் காலத்தில், இந்து

மதத்தின் சமஸ்கிருதக் கல்வியைக் கற்க அப்பிராமணர்கள் தடுக்கப் பட்டிருப்பதும் விநோதமே! இவ்வமயம் அப்பிராமணர்கள் செய்ய வேண்டியவே யாது? அப்பிராமணர்கள் சமஸ்கிருதப் பயிர்சிகளை விட்டு விட்டு, இந்து மதத்தையும், பிராமணர்களின் எதிர்ப்பிற்குப் பயந்து, விட்டு விடுவதா? அல்லது சாஸ்திர முறைகளை நன்கறிந்து அவைகளின்படி நடக்க முறபடுவதா! அல்லது சென்ற பல வருடங்களாக பிராமணர்களினுல் கண்மூடித்தனமாய் நடத்தப் பட்டது போல் இனியும் நடத்தப் படுவதா? அப்பிராமணர்கள் பெரிய லாயர்களாகவும், டாக்டர்களாகவும், இன்ஜினியர்களாகவும், அரசியல் வாதிகளாகவும், முற்பட்டிருக்கும் காலத்தில், தம் ஜாதிக்கும், தம் அறிவுக்கும், தம் மோக்ஷத்திற்கும் வேண்டிய சமஸ்கிருத பயிர்ச்சியைக் கற்கக் கூடாதா? பிராமணர்கள் அப்பிராமணர்களை இப் பயிற்சியில் முற்படச் செய்வதில்லையென விட்டு விடுவது அழகாகுமா? தற்சமயத்தில் பிராமணர்கள் அப்பிராமணர்களுக்கு சாஸ்திரப் பயிற்சி அளிப்பதையும், பரவச் செய்வதையும், கைநழுவ விட்டு விட்டுள்ளார்கள். இவையன்றி அப்பிராமணனுக்கு சாஸ்திரப் பயிற்சி கற்பிப்பது பெரும் பாவமென எண்ணுகின்றனர். இன்னும் அப்பிராமணர்களுக் கென சமஸ்கிருதம் கற்கப் பள்ளிகள் இல்லை. தென் இந்தியாவில் க்ஷேத்திரங்களில் உள்ள சமஸ்கிருத பாடசாலைகள் பிராமணர்களுக்கு மாத்திரம் என ஏற்பட்டுள்ளன. இவ்வித குறைகளைச் செப்பனிட்டுக் கொள்ள நாம் முற்பட வேண்டிய ஆவசியகங்கள் இல்லையா? நம்மதத்தை விட்டு ஏனைய மதங்கள் புகுவோர்களின் போக்குகளை, சாஸ்திர உணர்ச்சிகள் ஏற்படச் செய்து திருப்புதல் ஆவசியக மல்லவா? கிருஸ்துவர்களை இந்து மதத்தி லிருந்து தினம் மதம் மாறும்படி செய்யவும், இன்னும் இதர மதங்களையும் அவ்விதமே இந்து மதத்தி லிருந்து மக்களைக் கைப் பற்றச் செய்ய விட்டுக் கொண்டிருத்தல் வேண்டுமா? இந்தியாவின் அப்பிராமண மக்கள் மதத்தை அறியாதவர்களாகி, பிற மதம் புகும் காலங்களில், மத மக்களென சாஸ்திரத்தை முத்திரைகளிட்டு வைத்திருக்கும் பிராமணப் புரோகிதர்களும் ஆசாரியர்களும் முற்பட்டு சாஸ்திரப் பயிற்சி செய்வித்து அங்ஙனம் பிற மதம் புகவொட்டாமல் செய்யக் கூடாதா?

***

எவ்வளவு பிராமணர்கள் சமஸ்கிருதப் பயிற்சிகளில்லாமலே நமது புரோகிதர்களாகவுள்ளார்கள்? தென் இந்தியாவின் 13 லட்சம் பிராமணர்களில் $6\frac{1}{2}$ லட்சம் பெண்களாகவும், $1\frac{1}{2}$ லட்சம் குழந்தைகளாகவு மிருத்தல் வேண்டும். மிகுதியான பிராமணர்களில் பலர் கவர்ண்மெண்டு உத்தியோகங்களில் உள்ளார். சிலர் அரசியல் வாதிகளாகவும் சிலர் வக்கீல்களாகவும், டாக்டர்களாகவும், இஞ்ஜினியர்களாகவும், வியாபாரிகளாகவு முள்ளார்கள். பிராமண தரகர்கள், பிராமணத் தோல் வியாபாரிகள், பிராமண வண்ணார்களும் உள்

ளார்கள். இவ்வலுவல்களில் மிஞ்சியவர்கள் வைதீகத்தில் சமஸ்கிருத பாஷையில் சிறந்தவர்களாயிருக்கின்றனர். இச்சிறிய கூட்டத்தினர், பெரும் கூட்டமாக சமஸ்கிருத கல்வியில்லாத அப்பிராமணர்களைக் கல்வியில் பெருகச் செய்யக் கூடாதவர்களாகவும், அப்பிராமணர்களுள் சமஸ்கிருத கல்வியைப் பெருகச் செய்யக் கூடாதென்னும் கொள்கையுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர்த்து, ஏனைய பிராமணர்களும் அப்பிராமணர்களைப் போலவே சமஸ்கிருத அப்பியாஸங்களில்லாமலிருக்கின்றனர். எனவே இவர்கள் இந்து மதத்தின் உண்மைகளை அறியார்கள். இவர்களையும் படிப்பிக்கச் செய்தல் வேண்டும். இவர்களைப் போலவே பஞ்சமர்கள் நாட்டின் கல்வியில்லாமலும், சமஸ்கிருத உணர்ச்சியில்லாமலும் இருக்கின்றனர். இவர்கள் ஜாதி வித்யாஸத்தில் எங்ஙனமிருப்பினும் மத அறிவு விஷயங்களில் சாஸ்திரப் பயிற்சி கொண்டுள்ளவர்களாகச் செய்தல் வேண்டும்.

***

இந்து மதம் இந்து மக்கள் யாவருக்கும் பொதுவானதே. இந்துக்கள் யாவரும் இந்துக்கள் ஆக்கப்பட வேண்டும். பெயருக்கு மாத்திரம் நாம் இந்துக்களெனச் சொல்லிக் கொள்வது போதாது. நாம் இந்துக்கள் எனச் சொல்லிக் கொள்ள முற்பட்டால் இந்து மத சாஸ்திரங்களையும் நன்கு அறிந்தவர்களாகி இந்து மதத்தில் ஒழுக வேண்டும். கிருஸ்தவர்களும் முசம்மதியர்களுமல்லாத பெரும்பாலர்கள் தம்மையும் இக்காரணங்களினால் இந்துக்களல்லாதவர்களென்றே சொல்லிக் கொள்ளலாகின்றனர். நாம் இந்துக்களாக பாவிக்கப்பட வேண்டுமானால், இவ்வுரிமை ஆட்சிக்கெனச் சட்டங்கள் வேண்டும்; சாதன உயில்களுக்குச் சட்டங்கள் வேண்டும்: ஏனைய போக்குகளுக்கும் சட்டங்கள் வேண்டும். எனவே இந்துக்கள் இந்து மதத்தை எவ்விதம் கைநழுவ விடலாம்.? இந்துக்களெனக் கூறிக் கொள்ளும் போது, இந்து மதத்தை ஏன் அப்பியஸிக்கக் கூடாது? ஏனைய மதங்களிலிருந்து இந்துக்கள் எனக் கூறிக்கொள்வதற்கு, நமக்குள் சில கர்மங்களுள்ளன. இக்கர்மங்களை வேத முறைப்படியும் சாஸ்திர விகிதப்படியும் ஏன் நடாத்திக் கொள்ளலாகாது? க்ஷத்திரியர்களையும் வைசியர்களையும் இணைத்துள்ள துவிஜர்கள் பலர் தென் இந்தியாவில் உள்ளார். இவர்களுக்கு ஏன் வேதப் பயிற்சி ஏற்படலாசாது? எவ்வித வித்யாசங்களில்லாமல் ஏன் வேதம் கற்பிக்கக் கூடாது?

***

பைபிலேயும், பரிசுத்த ஆவியையும், மற்ற பரிகாச விஷயங்களையும் கற்க இந்த மாணவர்கள் முற்படுங்காலத்தில், சாஸ்திர முறைகளைக் கற்க ஏன் முன்வரலாகாது? அப்பிராமணர்களில் பலர் தம்மை க்ஷத்திரியர்களெனவும், வைசியரெனவும் கூறிக் கொள்கின்றனர். இவர்

கள் க்ஷத்திரியர்களானல் வைசியர்களானல், சமஸ்கிருதம் ஏன் கற்கக் கூடாது? இவர்கள் வேதசாஸ்திரங்களை உணர இச்சை கொண்டவர் களே. அநேக பிராமணர்களும் வைதீக பிராமணர்களும் மந்திரங் களை நன்கு உச்சரிக்க் கூடாதவர்களாகவே இருக்கின்றனர். பிரா மணர்களினல் ஏற்பட்டுள்ள கஷ்ட நிஷ்டூரங்களினல், சிலர் தாம் சாஸ்திர நூலைக் கற்கக் கூடாதவர்களாகி, ஏனையர்களை இவைகளைக்கற்கச் செய்து பிராமணர்களைப்போல வைதீக கர்மங்களை நடாத்த முற்பட்டுள்ளார்கள். இவர்களை சௌராஷ்டிரர்களெனவும், விசுவகர்மாக்களெனவும் கூறலாம். தச்சர்களும்-தட்டார்களும் கரு மார்களும் பிராமணர்களில் வெறுப் புற்று விஸ்வ குல பிராமணர் களாகி வருகின்றனர், இவர்கள் அல்லாத சில அப்பிராமணர்கள் பிராமணர்களை அடியோடு ஒழித்துவிட்டனர். எனினும் சமய, விஷயங்களைத் தாமே நடாத்திக்கொள்ள, இவர்கள் கற்றுக்கொள்ளல் வேண்டும். தெலுங்கர்களில் பலர், சமஸ்கிருதத்தைக் கற்று, இந்து மதத்தை அப்பியசிக்க முயன்றுள்ளர்கள்.

***

இவ்வமயம் பிராமணர்களும் அப்பிராமணர்களும் ஒருங்கு கூடி எவ்விதப் பிரிவினைகளு மில்லாமல், இந்துமதத்தை முன்னேற்றம் அடையச் செய்பல்வேண்டும். கிருஸ்துவர்களின் முன்னேற்றங்களை யும்முகம்மதியர்களின் ஒற்றுமையையும் கவனித்தல் வேண்டும். எங்ங னம் முகம் மதியர்கள் கிருஸ்துவர்களாக்கப்படுகின்றனரோ அங்ஙனம் ஆங்கிலர்கள் முகம்மதியர்கள் ஆக்கப்பட்டு வருகின்றனர். இவ்விதம் நாம் ஏனைய மதத்தினர்களை இந்துக்களாகக முயலாவிடினும், இந்துக் களில் பிளவுகள் ஏர்படாமல், இந்துமதத்தை சாஸ்திரவரன் முறை களில் ஈடுபட்டு, முன்னிலையடைய, மடாதிபதிகளும் மத ஆசாரியர் களும் பிராமணர்களும் அப்பிராமணர்களும் முற்படல்வேண்டும்.

சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிர மாண்புறச் செய்வோம்.

பாரதி.

(By the courtesy of The "Daily Express.")

சென்னை, கௌரவ ஸ்திரீ நீதிபதிகள்.

ஸ்ரீமதி பாண்டுரங்கராவ்
ஸ்ரீமதி மங்களாம்பாள் (லேடி சதாசிவய்யர்)
ஸ்டான்போர்டு அம்மையார்

சுதேசி தர்மம்

(ஸ்ரீமான் எஸ். மஹாதே வய்யர் மொழி பெயர்ப்பு.)

II.

இதுவரையில் நாம் சுதேசி ஸித்தாந்தத்தின் ஒரு புறத்தைக் கவனித்தோம். ஆனுல் இப்பொழுது அதன் மற்ருெரு புறத்தைக் கவனிப்போம். இதைப்பற்றிச் சிலர் நினைத்திருக்கவே மாட்டார்கள். அநேகமாய் எல்லோரும் வேறு தேசத்துப் பொருள்கள் எவ்வளவு நயமாக இருந்தாலும் அவைகளைத் தவிர்த்து, நமது பாரத நாட்டில் உண்டாகும் பொருள்களைத்தான் அவசியமாக உபயோகிக்க வேண்டுமென்று அறிந்து கொண்டு விட்டார்கள். ஆனுல் சில சுதேசி பக்தர்கள் பாரத நாட்டில் செய்யப்படும் பொருள்கள் உலகத்தில் எல்லா விடங்களுக்கும் போய்க் கடைகளில் குவிந்து விட வேண்டுமென்று அவாக் கொண்டிருக்கிருர்கள். ஆனுல் யதார்த்தமான சுதேசி விரதம் பூண்டவன் இக்காரியத்தைத் தவறென்று எண்ணுவான. நம்முடைய சுதேசி தர்மத்தைக் கை விட்டதால் நாம் நிந்தைக்காளாகிறது போல மற்றத் தேசத்தார்களை அவர்களுடைய சுதேசி தர்மத்தைக் கைவிடச் செய்வதால் நாம் நிந்தைக்குள்ளாகிருேம். இக்காரணத்தினுலேயே ஹிந்து மதம் அந்நிய மதத்தாரைத் தனக்குள் கொண்டுவர முயற்சி செய்ததில்லை. ஆனுல் யாராவது தன் சொந்த இஷ்டப்படி ஹிந்து மதத்தைச் சேர எண்ணினுல் அது அவர்களை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தது. இவ்வித சுதேசி தர்மத்தின் காரணத்தினுலேயே ஹிந்து மதம் எப்பொழுதும் அடக்கமாக இருந்தது. நம் நாட்டுச் சாமான்களை வேறு தேசங்களுக்குக் கொண்டு சென்று, அங்குள்ளவர்களுக்கு ஆசை காட்டியோ அல்லது விலையில் பித்தலாட்டம் செய்தோ அவர்கள் கழுத்தில் அவைகளை நாம் கட்டுவது அவர்களுடைய சுதேசி தர்மத்தை அழிப்பதே. சற்று ஆலோசித்துப் பார்த்தால்இது யாவருக்கும் தெரிய வரும். பாரத தேசத்திலுள்ள குழந்தை முதல் கிழவன் வரையில் எல்லோரும் இங்கு செய்யப்படுகிற பொருள்களைக் கொண்டு திருப்திப்படவேண்டும். அதுதான் இப்பொழுது நமக்குச் சுதேசி விரதம். இம்மாதிரி இங்கிலாண்டு தேசத்தினரும் சுதேசி விரதம்பூணுவாராகில்,இங்கிலாண்டிலிருந்து மற்ற நாடுகளுக்குச் சாமான்களைக்கொண்டுபோய் அங்காங்குள்ள கடைகளை நிரட்பி மிக லாபமடையும் வியாபாரத்தை நிறுத்தி விடுவார்கள். கல்வி விஷயத்திலும் பாரததேசம் சுதேசி தர்மத்தை அநுசரிக்குமேயாகில்,எந்த மாதிரிக் கல்வி இந்தியாவின் ஐதிகங்களுக்கு அநுகூலமாயிருக்குமோ அதைப் பெற இந்திபர்கள் விரும்பவேண்டும். இஃது இப்படியிருக்க இங்கிலீஷ்காரருங்கூட சுதேசி தர்மத்தைக் கைப்பற்றின் அந்நிய நாட்டு மத, ஜாதி தேசகாரியம் முதலிபவைகளிலிருக்சும் கஷ்ட நிஷ்டூரங்களை ஆங்கில முறைப்படிக்கு அவர்களுக்கு வசதியாக விலயனஞ்செய்யும் வழக்கத்தை அவர்கள் விட்டு விடுவார்கள். ஐரோப்பியர்களின்

தேசபூஜை தர்மத்தில் (Nationalism) சுதேசி தத்வமில்லை யாகையால் இவ்வளவு காலங் கழிந்துங்கூடச் சண்டைச்சரவு இல்லாமலிருக்கும் காலம் அவர்களுக்கு வரவில்லை. எந்த தர்மத்தில் சுதேசி தத்வ மில்லையோ அது அஸுர தர்மந்தான்—அதர்மமே. அத்தகைய அஸுர தர்மத்தை உபாஸிப்பதிலேயே ஐரோப்பா இதுவரையில் காலத்தைக் கழித்து விட்டது. தற்சமயம் ஆசியாக் கண்டத்திலுங் கூட ஜப்பான் இவ் வஸுர தர்மத்தைப் பேண ஆரம்பித்து விட்டதாகத் தெரிகிறது. நம்முடைய சாஸ்திரம் இத்தகைய அஸுர தர்மத்தின் விஷபத்தைப் பற்றிச் சொல்கிறதாவது :

வர்தத்ய தர்மேண நரஸ்ததோ. பத்ராணி பச்யதி
தத: ஸபத்னன் ஜயதி ஸமூலஸ்து வினச்யதி.

அதாவது : எவனொருவன் அதர்மத்தால் சத்ருக்களை ஜெயிக்கிறானோ அதர்மத்தால் சுகத்தை அனுபவிக்கிறானோ அவன் கடைசியில் வேரோடு நாசமாய்ப்போய் விடுவான்.

களங்கமற்ற சுதேசி தர்ம எண்ணம் ஒவ்வொரு தேசத்தாருடைய மனத்திலும் உதிக்கிறமட்டும், சமாதானத்துடன் ஒற்றுமையாக யாவரும் சுகமாக வாழ எண்ணுவது புகையைக் கை நிறையப் பிடிக்கும் சமாசாரமே தவிர வேறில்லை. ஐரோப்பாவில் சுதேசி தத்வம் ஏற்படுகிறவரையில் 'எல்லோ பெரில்' (Yellow Peril) என்ற பேய் அதன் கண்ணுக்கெதிரே இரவு பகலாக ஆடிக்கொண்டிருக்கும் ; 'வெள்ளையரின் பொறுப்பு' (Whiteman's Burden) என்பது அதிக நுட்ப புத்தியினால் அநேக கஷ்டங்களை உண்டு பண்ணிக் கொண்டிருக்கும் ; மறைவனை, சதி முதலியவற்றை அஸ்திவாரமாகக்கொண்ட 'பாலன்ஸ் அப் பவரு (Balance of Power)ம் தர்மராஜ்யத்தை ஸ்தாபிப்பதாகத்தான் அட்டஹாஸம் செய்து கொண்டிருக்கும். "கறுப்பு மனிதர்களைச் சிருஷ்டிசெய்வது என்காரியம் ஆனால் அவர்களைக் காப்பாற்றுவது உன்காரியமாக இருக்கவேண்டு" மென்று கடவுள் வெள்ளையனோடு உடன் படிக்கை செய்திருக்கிறாரா? சுதேசி ஸித்தாந்தம் கடவுள்மேல் பூர்ண நம்பிக்கை கொண்டது. ஆகையால் சுதேசி தர்மத்தில் எல்லா மனிதர்களுக்கும் எப்பொழுது நம்பிக்கை ஏற்படுகிறதோ அப்பொழுது தான் அவர்களுக்குச் சுகமும் கடவு ளருளு முண்டாகும்.

III

'சுதேசி' இக்காலத்து தர்மமென்றும், ஈச்வரனுடைய அவதாரமென்றும் நாம் முன் சொன்னோம். இப்பொழுது இந்தியா தேசத்தில் இந்த அவதார முண்டா யிருக்கிறது. இதற்குக் காரணம் நம்முடைய நற்குணங்களென்றும், நம்முடைய சத்கிருத்யங்களென்று மெண்ணி நாம் கர்வங் கொள்வதற் கில்லை. ஆனால் பாரத தேசம் காரணமின்றி இந்த ஸ்திதிக்கு வரவில்லை. நாம் நல்லவர்களாயும், நம்முடைய தர்மமும் ஸம்ஸ்காரங்களும் மேன்மையானவைகளாயு

மிருந்துங்கூட,கடவுளின் பக்ஷபாதத்தால் நாம் இக்கதியை யடைந்து விட்டோமென்று நாம் எப்படிச் சொல்லக் கூடும். ஸாமான்ய மனிதர்கள் விதியை நொந்து கொள்வார்கள், அல்லது சகல குற்றங் களையும் கடவுள் மேல் வைத்து விடுவார்கள். ஆனால் நம்மால் அப்படிச் செய்யவொண்ணாது. ஜனங்கள் அவர்களுடைய பாக்கியத் தைத் தங்களது புஜபலத்தாலும் மனச்சுத்தியினாலும் உண்டுபண் ணிக் கொள்கிறார்களென்று நாம் இப்பொழுது தெரிந்து கொள்ள வேண்டும்.

நமது தற்கால கதியை நாம் பண்டு செய்த பாபத்தினால் அடைந்தி ருக்கிறோமேயானால் அப்பாவமென்ன வென்பதை அறிந்துகொள்ள வேண்டியது நமது முதல் கடமையாம். சரித்திரத்தையும் ஸமாஜ சாஸ்திரத்தையும் ஆராய்ச்சி செய்யாமலே பாரததேசம் யதார்த்த மான சுதேசி விரதத்தைக் கைவிட்டதினாலேயே இக்கோலத்திற்கு வந்திருக்கிறதென்று நாம் சொல்லக்கூடும். அந்நிய நாட்டுச் சாமான் களை நாம் வாங்கத்தொடங்கினதிலிருந்து போர்த்துகீஸியர் முதல் ஆங்கிலேயர் பரியந்தம் எல்லா ஐரோப்பியர்களும் இங்கு வந்து சேர்ந்து விட்டார்கள். ஆனால், இதற்கு முன் நாம் சுதேசி தர்மத் திற்கு விரோதமான காரியங்களைச்செய்து பாபத்தைச் சம்பாதித் திருக்கிறோம். எங்கும் நிறைந்த கருணாகரன் நம்முடைய பாவத் திற்காக அந்தந்த சமயத்திலேயே நம்மை தண்டித்தாரில்லை. பண்டு பெண்ணாசையில் ஈடுபட்டிருந்த அரசர்கள் யௌவன ரூபவதிகளை மேல் நாட்டிலிருந்து கொண்டு வந்து அந்தப்புரத்தில் தங்களுடைய தர்ம பத்னிகளுடன் வைத்துஇப்பாபத்தைத் தலையிற் கட்டிக் கொண் டார்கள். பொன்னாசை வெறிகொண்டு பெரும்போகம் நுகருகின்ற சாமான்களையும் வாசனைத் திரவியங்களையும் பாரஸீகம், ரோம், எகிப்து முதலிய தேசங்களுக்கு அனுப்பி நமது முன்னோர்கள் பாபி களாயினர். நமது கடைகளில் வந்து நிறைந்து பாரத நாட்டின் ஜீவ ரத்தத்தை உறிஞ்சுகிற அந்நிய நாட்டுச் சாமான்களைப் பார்க்கையில் நமக்கு துக்க முண்டாகிறதுபோல அபாரமாக இந்தியாவிலிருந்து சென்ற பொருள்களை ரோம் தேசத்தார் வாங்கின பொழுது பிளினி போன்ற ரோம் தேசபக்தர்களுக்குத் துக்க முண்டாயிற்று. அப்படி யிருந்துங் கூட இந்தியாச் சரித்திரக்காரர்கள் முன் சொன்னபடி தங்கள் ஜீவ ரத்தம் உறிஞ்சப்படுகையில், தங்களுடைய பழைய செய லைப் பெரும் புகழென்று மெச்சிக்கொள்கிறார்கள். பண்டு செய்த பாபங்களை மெச்சிக்கொள்வது அவைகளை மறுபடியும் செய்வதே யல்லாமல் வேறென்ன? நாம் போகசுகங்களுக்குரிய வஸ்துக்களைச் செய்து பரதேசிகளின் கழுத்தில் கட்டியது சுதேசி தர்மத்திற்கு மிகவும் விரோதமானது: அது கொடிய பாவமுமாம். நாம் செய்த பாபத்திற்குப் பிராயசித்தம் செய்து கொள்வதற்காகக் கிரேக்கர், ஸிதியன்ஸ், ஹூணர் முதலான அந்நிய நாட்டினரை நம் நாட்டின் மேற் படை யெடுக்கப் பரமேச்வரன் அனுப்பினார்.

ஆனால் அவர்களுடைய படையெடுப்பு நமக்குப் பிராயச்சித்த மாக மாத்திரந்தா னிருந்தது ; நமது அபராதத்திற்குத் தண்டனை யாக இருக்கவில்லை. பிராயச்சித்தமான வுடன் ஆரியர்களுடைய பலம் திரும்பவும் வளர்ந்தது. சரித்திரத்தைப் படித்தாலுங் கூட புத்தி யில்லாதவர்களுக்கு நல்ல வழியில் போக எண்ண முண்டாவதில்லை யென்பதற்கேற்ப நாம் நம்முடைய பழைய தீச் செயலையே செய்து கொண்டிருந்தோம். சில்லாண்டு கழிய அரபியர்கள் வியாபாரத்தில் லாப மடையுமாறு இந்நாட்டிற்கு வந்தார்கள். ஸிந்து மாகாணம் 2500 வருடங்களுக்கு முன் பாரஸீக சக்கிரவர்த்தியான டேரியஸ் ஸுக்கு வருஷம் சுமார் இரண்டு கோடி ரூபாய் கப்பம் கட்டிவந் தது. ஆனால் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் அரபியர்கள் ஸிந்து மாகாணத்தைத் தங்கள் ஆதீனத்திலாக்கிக் கொண்டார்கள். அச்சம யத்திலும் இந்தியா அரசர்கள் கண் விழித்தாரில்லை. முன் போலவே சுதேசி தர்மத்தில் பராமுகமா யிருந்தார்கள். ஸிந்து மாகாணத்தில் நாளுக்குநாள் அதிகமான அரபியர்களுக்கு ஒரு இடையூறும் செய் யாமல், அவர்களிடம் பொருள்களை விற்று வந்த பணத்தினால் மாட மாளிகை கூடகோபுரங்கள் கட்டுவதில் இந்தியா அரசர்கள் கருத்தா யிருந்தனர். அப்படியிருக்க நமது சரித்திர மெழுதுகிறவர்கள் அவ் வரசர்கள் புலிகேசனுக்கும் அசோகவர்ஷனுக்கும் ஸமம், என்றும் அவர்களுடைய காலம் "உத்தம யுக" மென்றும் புகழ்தல் துக்ககர மானது. அம்மன்னர்கள் பிராமணர்களுக்கும் சமணர்களுக்கும் ஏராள மான ஸ்வர்ணபுஷ்பம் சமர்ப்பித்திருந்ததால்தான் அது "தங்கமான காலம்" (Golden Age). அவர்கள் சம்பாதித்துத் தானம் செய்த சொத்து முழுவதும்சுதேசி தர்மத்தை அழித்ததினாலேயே உண்டாயிற்றென்ற எண்ணம் அவர்களுடைய மனத்தில் தோன்றவில்லை. பாரத தேசத் தின் துன்பங்கள் யாவும் அவர்களுடைய அஜாக்கிரதையால் உண்டா யின. அரபியர்கள் சிந்து மாகாணத்தைக் கைப் பற்றின பிறகு 300 வருடங்கள் வரையில் ஒரு வித உபத்திரவமும் உண்டாகவில்லை. முன்னூறுண்டாயினும் பாரத நாட்டின் கண் விழிக்க வில்லை. சுதேசி தர்மத்தைக் கைவிடுகிறவர்கள் தங்களுடைய நாட்டையும் விட்டுவிட வேண்டியதுதான் : இது வேத வாக்கு. பாரத தேசத் தில் முஸல்மான்களுடைய ராஜ்ய மேற்பட்ட பொழுது, சுதேசி தர்மத்தை பங்கம் பண்ணி, மததர்மத்தை மாள்வித்து இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த ஹிந்துக்களுக்கு ஒரு கணக்குண்டோ? மேலும், தில்லி சக்கிரவர்த்தி களுக்குச் சேவகர்களாகி, அவர்களுடைய கிரு பைக்குப் பாத்திரமாக வேண்டு மென்று மஹத்தான பாபங்களைச் செய்த ஹிந்துக்கள் தொகை சிறியதோ? இந்தியர்களுக்கு வரப் போகிற இடுக்கண்களை முன்னறிந்து கொள்ளும் சக்தியில்லை போலும். நம்முடைய சக்தி பண்டைக் காலத்திலே அழிந்து போயிற்று. முஸல்மான்கள் இந்தியா தேசத்தினரான பின் ஹிந் துக்கள் அவர்களுடன் சண்டையிட ஆரம்பித்தார்கள். 'ஐரோப் பியர்கள் இங்கு வந்தால் பாரத சேத்திற்கு எண்ணிலாச் சங்கட முண்டாகு' மென்ற சங்க நாதம் அவர்களுடைய காதில் அப்

பொழுது விழ வில்லை. அச்சமயத்தில் பிரான்சுக் காரர்களும் இங்கிலீஷ் காரர்களும் தங்களுக்கு இந்தியாவில் வியாபாரத்திற்குக் கொஞ்சமிடங் கொடுக்கு மாறு தில்லி பாதுஷாவைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

நமது நாட்டுச் சாமான்களை அந்நிய நாட்டிற்கு அனுப்ப ஆரம்பித்தது முதல் நாம் சுதேசி விரதத்தைக் கெடுத்து விட்டோம். ஆனால் இப்பொழுது பரதேசச் சாமான்களை எவ்வளவு நாம் வாங்குகிறோ மென்றால் பாரத நாட்டுக் கைத் தொழில்கள் யாவும் இருந்த விடந் தெரியாமல் போய்க் கொண்டிருக்கின்றன; நமது வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களுக்குங் கூட நாம் பிறரை எதிர்பார்க்கிறோம். இவ்வளவு கேவலமாயுங்கூட நமது புத்தி திருந்தியதற்கும் நமது நோக்கம் மாறுபட்டிருக்கிற தென்பதற்கும் அடையாளங்கள் காணப்படவில்லை. இங்கிலீஷ்காரர் ராஜ்யம் இங்கு ஸ்திரமாய்ப்போய் விட்டதும் அவர்களுக்கு இங்கே யிருக்க எவ்வளவு வசதிகள் வேண்டுமோ அவ்வளவும் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இனி மேலும் செய்து கொள்ளக்கூடிய விஷயம் ஒன்று மில்லை. அவர்கள் தங்களது பிடியை இப்பொழுது சற்று நழுவ விடுகிறது போலத் தோற்றுகிறது. இது ஒரு சூழ்ச்சி. இதற்குக் காரணம் அவர்கள் எக்காலமும் இங்கேயே இருக்க வேண்டு மென்பது தான். இப்படிப்பட்ட ஸ்திதியிலிருக்கையில் ஐரோப்பிய நாடுகளின் சாமான்களைத் தான் பஹிஷ்காரம் செய்வ தென்று நாம் வைத்துக் கொண்டால், அமெரிக்கரும், ஜப்பானியரும் இங்கே வந்து உட்கார்ந்து விடுவார்கள். இங்கிலீஷ்காரருடன் வியாபாரஞ்செய்து நமக்கு எவ்வளவு நஷ்டமுண்டாக வேண்டியிருந்ததோ அவ்வளவும் உண்டாய்விட்டது. இந்த நஷ்டத்திலிருந்து சுதேசி தர்மத்தால் தான் நாம் முன்னுக்கு வரமுடியும். ஆனால் நாம் தவறுதலாக அமெரிக்கருடனும் ஜப்பானியருடனும் வியாபாரஞ் செய்தால் தேசத்துரோஹிகளுக்குள்ள நரகத்தில் விழும்படி நமது தலைவிதியாகும், நமது பின்னோர்களும் நம்மைக் கொடுமையாகச் சபிப்பார்கள். ஆங்கில தேசத்து வியாபாரம் இந்தியவில் உண்டாகாதிருந்தால் இவ்விடத்தில் இங்கிலீஷ் ஸாம்ராஜயத்தை ஏற்படுத்த வேண்டு மென்கிற எண்ணம் அவர்களுடைய மனதில் உதித்திராதென்பது சத்யம். இங்லீஷ்காரருடைய வியாபாரத்திற்குப் பதிலாக ஜப்பானியருடைய வியாபாரம் இங்கு விருத்தியடையுமேயாகில் அவர்களுடைய ஸாம்ராஜ்யத்தை இங்கே ஸ்தாபிக்க எண்ணம் ஜப்பானியர்களின் மனத்திலுண்டாகாதிருக்கா தென்பதும் சத்யம். இங்கிலாண்டு, ஜப்பான், அமெரிக்கா அல்லது மற்றெந்த நாட்டுச் சாமானானாலும் சரி நாம் அதை வாங்குகிற வரையில் தேசத்துரோஹிகளாகத் தான் இருப்போம். பரதேசச் சாமான்களின் மேல் வெறுப்புக் கொள்வது போலவே பரதேசக் கல்வி, நாகரீகம் முதலிய மற்றெல்லாவற்றிலும் நாம் வெறுப்புக்கொள்ள வேண்டும். அந்நிய நாட்டுச் சாமான்களை அடியோடு விலக்க வேண்டு மென்ற எண்ணம் நமது ரோமக்காலில்

ளன்றி நாம் அத்தபஸைச் சரிவரச் செய்வோமாகில், மற்ற விஷயங்களையும் விலக்கிவிட வேண்டு மென்பதை நாம் நன் கறிந்துகொள்வோம். அப்பொழுது தான் 'சுதேசி'யின் புதிய அவதாரத்தைக் காப்பாற்றுவதற்கு நமக்கு சக்தி யுண்டாகும். இதற்காக நாம் ஒரு சுப ஸங்கல்பம் செய்வோம்: அது யாதெனில், நாம் சுத்த சுதேசியின் ஸொரூபத்தை அறிந்துகொண்டு இன்று முதல் அதை உபாஸனை செய்வோ மென்பதே. (இன்னும் வரும்.)

பழவுணவு.

ஒரு வைத்தியரின் அபிப்பிராயம்

பழ வகைகள் உணவாக ஏற்படுவதனுல் பல நன்மைகள் உண்டாகின்றன என்று பலர் அநுபவ வாயிலாய் அறிந்திள்ளார்கள். பழ வகையிலுள்ள சாருனது நல்ல ஜீர்ணத்திற்கு வேண்டிய பாசக நீர் என்னும் ஒரு திராவக பதார்த்தத்தை வயிற்றில் உண்டாக்குகின்றது. வயிற்றில் இயற்கையாக இருக்க வேண்டிய திராவகம் இல்லாத காலத்தில் பழங்களின் சாருனது அப்பதார்த்தத்திற்குப் பதிலாக உபயோக மாகின்றது. இதனுல் ஜீர்ணத்திற்கு பழவகைகள் பெரிதும் இன்றியமையாதன வென்று ஏற்படுகின்றது. ஆகவே தேக சௌக்கியத்தை முன்னிட்டு ஆகாரத்தின் போது ஏதாவதொரு பழத்தை உட்கொள்ள வேண்டும்.

சூலை நோயால் பாதிக்கப் படுகிறவர்களுக்கும் மூத்திர வியாதியால் பாதிக்கப்படுகிறவர்களுக்கும் பழவகைகள் விரும்பத் தகாதன என்று சொல்லப்படுவது தவருன கொள்கையாகும். இதற்கு மாருக இப்பழங்களிலுள்ள சாருனது கெட்ட பதார்த்தங்களைப் போக்கி நன்மையை யுண்டாக்குகின்றன என்று வைத்திய சாஸ்திரிகள் கண்டு பிடித்துள்ளார்கள். ஆகவே மூத்திர வியாதியால் பாதிக்கப்படுவோர் பழங்களைச் சாப்பிட்டால் அவை தேகத்திலுள்ள கெட்ட பதார்த்தங்களைப் போக்கி மூத்திர வியாதியின் வேகத்தைக் குறைக்கும்.

கொட்டையுள்ள பழங்களைக் கொட்டை யெடுக்காது சாப்பிடுவது தீமையை யுண்டாக்குவதாக மாட்டாதா என்று கேட்கலாம். உதாரணமாக, திராட்சைப் பழக்கொட்டைகளையும் அதைப் போன்ற மற்றப் பழங்களின் கொட்டைகளையும் விழுங்கி விடுவதினுல் பாதகம் ஒன்றும் ஏற்பட்டுவிடுவதில்லை. இவைகள் தீமைக்குப் பதிலாக நன்மையை உண்டாக்குகின்றன. ஏனெனில் இக்கொட்டைகளில் உணவுக்கான சாரம் இருத்தலினுலேயே யாம். இதைக் கொண்டு கொட்டைகளை அதிகமாகவும் தின்று விடக்கூடாது. அப்படிச் சாப்பிட்டால் அது குடலுக்குக் கஷ்டத்தை யுண்டாக்கும். திராட்சையின் மேல் தோலிலும், கொட்டையிலும் சத்து அதிகமாய் இல்லாததினுல் அவைகளைச் சாப்பிடாது துப்பிவிடவேண்டும். பழ வகைகளைச் சாப்பிடுமுன் நன்ருகச் சுத்தி செய்து சாப்பிடவேண்டும். இன்றேல் அவை தீமையை யுண்டாக்கும். மா. ரெ.

21034

சூரிய விஞ்ஞான ஆராய்ச்சி

(ஸ்ரீமான் பா. ஆதிமூர்த்தி எழுதியது.)

அறிவின் துணையைக்கொண்டு விவேகிகள் ஆராய்ந்தறிந்து உபயோகிக்க வேண்டிய விஞ்ஞானங்களில் "சூரிய விஞ்ஞானம்" முதன்மை யானது. இந்த ஆராய்ச்சி முதன் முதல் உலகத்தில் இந்தியாவில் தான் செய்யப்பட்டது. இவ்வுண்மையைக் கீழ்நாட்டுக் கலையாராய்ச்சிகளைப் பரிசோதித்த பல ஐரோப்பிய புத்திமான்கள் ஒப்புக்கொண் டிருக்கிறார்கள்.

இந்தச் சூரிய விஞ்ஞான சாஸ்திரம் ஆராய்ச்சியால் அபிவிருத்தியடைந்து கொண்டிருந்த காலத்தில் நம் நாட்டு அறிஞர்கள் பல சிருஷ்டி தத்துவங்களுக்குச் சூரிய ஒளியே காரணம் என்று தெளிவுபடுத்திக் காட்டினார்கள். அன்றியும் ஜீவ தத்துவ ஆராய்ச்சிக்கே சூரிய விஞ்ஞான அறிவு மிகவும் அவசியம் என்று அறிந்திருந்தார்கள். பூர்வீக "நளந்தா" சர்வ கலாசாலையில் "சூரிய விஞ்ஞான" பண்டிதர்கள் பிரத்தியேகமாக நியமிக்கப் பட்டிருந்ததாகக் கூடச் சொல்லப்படுகிறது.

இத்தகைய ஆராய்ச்சி இந்தியக் கலைக்களத்தினின்றும் பிற்காலத்தில் எடுபட்டும் மறைந்தும் போனதாகத் தெரிகிறது. இவ் விஞ்ஞானம் மறுபடியும் தற்போது மேல் நாட்டு ஆராய்ச்சியின் உதவியால் உலகத்தில் அபிவிருத்தி யடையத் தொடங்கி யிருப்பதால் விவேகிகளின் கவனத் தைத் தற்போது கவரத் தக்கதாக விருக்கிறது.

ஆகவே இந்த அரிய விஞ்ஞானத்தைப்பற்றிச் சில வியாசங்கள் நமது "லக்ஷ்மி"யில் எழுதி வரலாம் என்று துணிந்து இந்த முதல் வியாசத்தை ஆரம்பித்தோம். இந்த முதல் வியாசத்தில் சூரிய விஞ்ஞான ஆராய்ச்சியின் அவசியத்தைக் கூறிப் பின் ஆராய்ச்சியைத் தொடர்ந்து ஆரம்பிக்க நினைத்திருக்கிறோம்.

அடியிற் கண்ட காரணங்களால் விஞ்ஞான ஆராய்ச்சியின் பொதுப் பெருக்கத்திற்குச் "சூரிய விஞ்ஞானம்" மிக அவசியமானதாக விருக்கிறது.

பதார்த்த உருவம் கட்டிப்பொருள்.

உலகத்திலுள்ள பௌதீத பதார்த்தங்களின் தோற்றமே விவேகிகளின் விசாரத்திற்கு முதல் ஆசர வாதலால் அந்தப் பூத பதார்த்தங்களின் தோற்றம் சூரிய வொளியினாற் றான் தோற்றத்திற்கு வருகிறது என்றால் சூரிய வொளியே அப் பதார்த்தங்களாக இருக்கிறது என்று நாம் யூகிக்கலாம். சூரிய ஒளி அப் பதார்த்தங்களில் படுவதற்கு முன் அப்பதார்த்தங்களின் நிலை எவ்வாறிருந்ததோ அதே நிலை

யில் சூரிய ஒளி பட்ட பின் இருப்பதில்லை. இவ்வுண்மையை மிக நுட்ப ஆராய்ச்சியால் அறியலாம்.

இக் காரணத்தால் உயிரின் உருவம் சூரிய ஒளிதான் என்று பெறுகிறோம்.

மஹா மாற்றம்.

மாற்றம் இன்றிக் கண்ணொளி, சூரிய ஒளி இவைகள் இருப்பினும் பதார்த்தம் என்ற நிலையில் இவ்வுலகத்தை நாம் பார்க்க முடியாது. மாற்ற மானது அசைதல் என்ற பதவியி லிருந்து முதலில் தொடங்கப் படுவதால் அசைவுக்குக் காரணம் உயிரன்றி யின்று. உயிர் வெப்ப மாகிய குணத்தை யுடைய தாதுவின் வேலையேயாகும். அந்தத் தாது சூரியனால் பதார்த்தங்களுக்கு எப்பொழுதும் கொடுக் கப்பட்டு வருவதாகும். இந்த வெப்பமாகிய உயிரினால் மாற்றம் அல்லது மகா மாற்றம் என்ற பதவிகள் ஏற்படுகின்றன. இப்பதவி களின் செய்கைகளுக்குச் சூரிய ஒளியே காரண மாகும்.

சூரிய ஒளி யற்ற போது அல்லது வெப்பம் என்ற உயிர் நிலையற்ற போது மாற்றம் என்பதைப் பார்க்க முடியாதாகையால் "மஹா மாற்றமும்" சூரியனாலேயே உண்டாக வேண்டும். இந்த மஹா மாற்றம் சூரிய சக்தியால் சேர்த்தல், பிரித்தல் என்ற மிகவும் அத்தியாவசியமான காரியங்கள் இரவும் பகலும் இடை விடாது செய்து வருவதால் இவ்வுலகில் வினையில் வீணும் பலனில் வீணும் ஒன்று மின்றி ஒவ்வொரு வினையும் மிகவும் அவசியம் அன்றி இன் றியமையாதன ஆகும் என்ற முடிவைப் பெற்று சிருஷ்டித் தொழில் நடந்து கொண்டே வருகின்றது.

சிருஷ்டி அல்லது படைப்பு.

சூரிய வொளி யானது படைத்தல் அல்லது பிரித்தல் என்ற செய்கைகளைச் செய்தல் வேண்டும் என்ற எண்ணத் துடன் பிரகா சிக்கவில்லை. அது தன் இயற்கையில் சரித்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிந்தோமானால் அழித்தலும் ஆக்கலும் நமக்குப் பேதமின்றித் தோன்றலாம். சிருஷ்டி சுபாவத்தைப் பொறுத்தது. அது வளர்ச்சி அல்லது மாற்றம் என்ற ரகசியத்தைக் கொண்டு சரிப்பதால் சாதாரண அறிவுக்குப் புலப்படுவது கஷ்டம்: அச் செய்கையை இரண்டு வகையில் பொருட் படுத்தலாம். இறத்தல், பிறத்தல் என்றவாறு.

சூரிய ஒளியே அல்லது சூரிய ஒளியின் உருவமான பிராணனே பதார்த்த மாற்றங்களுக்குக் காரண மாகையால் அம்மாறுதலே சிருஷ்டிக்கும் காரண மாகும். ஆகவே உயிர் என்பது ஜீவராசிகளிட மிருப்பது மட்டு மன்று. கல், மண் முதலிய சகலமும் உயிருள்ள வைகளே யாகும் என்று நாம் அறியவேண்டியது.

எப்படியெனில் நாம் தற்போது சூரிய ஒளியின் உதவியால் பார்க்கும் பதார்த்தம் என்ற கட்டி ஜல பதார்த்தங்களானது ஏற்கனவே சூரிய ஒளியால் தகிக்கப்பட்டு அங்ஙனம் ஒன்று சேர்ந்ததாகும். பதார்த்த மாறுதலின்றி ஒரு பதார்த்தம் "பதார்த்தம்" என்ற பதவியை அடைவதில்லை. பல அணுக்களும் கவர்ச்சித் திறத்தால் இழுக்கப்பட்டு ஒன்று சேர்ந்து உருகித்தான் கட்டிப் பதார்த்தங்களாகின்றன. இக்காரணத்தால் சூரிய ஒளியே பதார்த்தங்களின் உருவ அமைப்புக்கு மூல காரண மாகும்.

பார்வை அல்லது கண்.

பதார்த்தங்களையும் சூரிய ஒளியையும் நமது கண்ணொளியால் பார்க்கிறோமாகையால் கண்ணொளியின் ஒளிவிடும் "சக்தி" சூரிய ஒளியாலேயே பெற்றதாகின்றது. சூரிய ஒளியின் சேர்க்கையே கண்ணொளி யாகையால் சூரிய ஒளி யில்லாதபோது பதார்த்தங்களை நாம் பார்ப்பது சாத்திய மற்றதாகிறது. இக்காரணத்தால் சூரிய வொளியின் ஒரு பாகமே கண்ணொளி யென்று கூறுவது தவறாக மாட்டாது. ஆகவே கண்ணொளியின் உருவம் சூரிய வொளியின் பிரதிபிம்பமே யாகும்.

மனம் அல்லது நினைவு.

சூரிய வொளி பிரகாசிக்காதபோது உயிர் நிலையில் சம்பாதித்து வைக்கப்பட்ட சூரிய ஒளியின் வல்லமையால் மன நிலை எழுச்சியடைகிறது. எப்படி சூரியன் இல்லாத இரவில் கண்ணின் ஒளி மங்கித் தெரிகிறதோ அதுபோலவே இரவில் மனத்தின் நிலையும் மயங்கியே தெரிகிறது. இருட்டில் பயம் எப்படி உதிக்கின்றதோ அதுபோலவே மனம் சூரிய ஒளி யில்லாதபோது தத்தளிக்கின்றது. மங்கித் தாழ்ந்திருக்கும் மனோ நிலையும் சூரிய உதயத்தின் பின் எழுச்சி யுற்றுத் தெளிவடைகின்றது. ஆகவே மன நிலை சூரிய வொளியே.

உயிர் அல்லது பிராணன்.

உயிர் என்பது சூரிய ஒளியின் உருவமே யன்றி வேறு அல்ல என்று நமது பூர்வீக விஞ்ஞானிகளான ரிஷிகளும் தற்கால மேல் நாட்டு விஞ்ஞானிகளும் கூறியிருக்கிறார்கள். உபநிடதங்களில் கூறிய ஒரு வாக்கியத்தின் மொழிபெயர்ப்பு வருமாறு :—

* "சூரியன் இரண்டு கிரியைகளைச் செய்கிறான். ஒன்று உடலுக்கு வெளியிலிருந்து கொண்டு பதார்த்தங்களாகவும், சலனமாக

---

* இந்த உப நிடத மொழி பெயர்ப்பின் உண்மையை நாம் ஆராயும் போது இது தற்கால ஐரோப்பிய விஞ்ஞானிகளின் ஆராய்ச்சித் திறத்தால் எழுதப்பட்டுள்ள பல்லாயிரம் புஸ்தகங்களின் சாரமும் அடங்கியதே யாகும் என்று ஏன் கூறுதல் கூடாது.?

வும், அணுக்களாகவும், அக்கினி, ஜலவாயுவாகவும் தோற்றுவிக்கிறுன். இரண்டு. :—தேகத்தின் உள்ளே யிருந்து கொண்டு தேகமாகவும் இந்திரியங்களாகவும், புத்தி முதலியனவாகவும், அறிவு, யோசனே, கிரியை முதலியவைகளாகவும் வேலே செய்கிறுன். ஆக இரு வகை யாலும் தெய்வத்தின் பிரதி நிதியே யாவான். அவனே நம்மைக் காக்கு மாறு தொழுவோமாக."

ஜீவராசிகளும் அவைக ளல்லாத மற்றவைகளும் உயிருள்ளவை களாகவே யிருப்பதால் சூரிய ஒளியின் வல்லமையால் இப்பதார்த் தங்கள் தங்களது சிருஷ்டியைத் தாங்களே செய்து கொள்கின்றன. சூரிய ஒளி யின்றேல் சிருஷ்டி யில்லே என்க.

அழிவு அல்லது இல்லாமை.

அழிவு என்ற ஒரு நிலே இவ்வுலகில் எங்குமில்லே யென்பதே சூரிய விஞ்ஞான முறைப்படி எமது அபிப்பிராய மாகும். சூரிய சக்தியால் பதார்த்த மாற்றங்கள் ஏற்படும்போது மாறும் பதார்த்தத் தின் நிலேமையை நாம் அழிவென்று கூறுகிறேம். அது அழிவன்று ஒன்றிலிருந்து மற்றென்ருக மாறும் வினேயே யாகும். இதைச் சிருஷ்டியின் தொழில் என்று கூறுவது மேல். எப்படி யெனில் இயற்கையினிடத்தில் எந்த எண்ணுள்ள அணுக்கள் அமைந்தி இருக் கின்றனவோ அந்த எண்ணுள்ள அணுக்களுக்கு மேல் புதிய அணுக் களேத் தயார் செய்ய இயற்கைக்கு வல்லமை இயற்கை யாகவே யில்லே. அப்படி யில்லாதபோது புது மாற்றங்கள் நடக்குங்கால் அமைந்துள்ள அணுக்களேயே பயன் படுத்த வேண்டியதன்றி வேறு வழியில்லே இச் செய்கையும் புதிய சிருஷ்டி செய்ய வேண்டிய அவசியம் என்ற மனே பாவனேயைக் கொண்ட தன்று. அச்செய் கையும் ஏற்பட்ட அல்லது இயற்கையை யுடையதே யாகும். ஆகவே அழிவைச் சூரிய விஞ்ஞான சிருஷ்டி என்றே கொள்ளலாம். பொதுவாக ஒரு பதார்த்தம் மற்றெரு பதார்த்தமாக மாறும் போது ஒன்றை யழிவாகவும் மற்றென்றை படைப்பாகவும் கூறுவது பொருத்த முடையதன்று. இவ்விரு செய்கையும் பதார்த்தங்களினி டத்துள்ள சூரிய சக்தியால் நடப்பதால் சூரிய சக்தியே அப் பதார்த்தங்களாகவும் அவ்வினேகளாகவும் இருப்பது உண்மை என்று ஏன் கூறுதல் கூடாது.?

இங்ஙனம் பொது விதிகளேக்கொண்ட சூரிய விஞ்ஞான சாஸ்தி ரத்தை நமது முன்னேர்கள் நன்கு அறிந்திருந்தன ரென்று பார பட்ச மற்ற ஆராய்ச்சி வல்லவர்கள் கூறுகிறுர்கள். இவ்வபிப் பிரா யம் நமக்குக் குதூகுலத்தைத் தருவதாக விருப்பினும் அம்முன்னேர் களின் சந்ததியாராகிய நாம் மறந்ததை மறுபடி நினேக்காத குண முள்ளவர்களாக வாழ்வது மிகவும் வருந்தத் தக்கது.

சூரிய விஞ்ஞான ஆராய்ச்சி

நாம் வெகு காலத்திற்கு முன் தற்காலம் நம் நாட்டில் அபி விருத்தியாகி வரும் ஆங்கிலக் கல்வி எவ்வகையிலும் விஞ்ஞான அபி விருத்திக்கு அனுகூல மளிப்பதாக விருத்தியடையும் என்று நம்பி யிருந்தோம். இந்த எண்ணமானது தவறென்றும்; ஏதோ மிக அருமை யாக ஆசிரியர் ஜெகதீச சந்திர வசு போன்ற விஞ்ஞானிகள் இரண் டொருவர் உண்டானதை நீக்கிப் பெரும்பாலும் ஆங்கிலம் கற்றோ ரனைவரும் வயிற்றின் கொடுமையாலும் தேசாபிமான மின்மையாலும் தங்கள் கல்வியை வீணுக்கிக் கொள்கிருர்களென்றும் தெரிந்து கொண்டோம்.

ஆயினும் நற் கால வசத்திஞல் சமீபித்த சில வருஷங்களாகப் பல புதிய வித்தியா ஸ்தாபனங்கள் ஏற்பட்டு அபிவிருத்தி யடைந்து வருவதால் மறுபடியும் நம் நாட்டில் விஞ்ஞான விசாரம் ஓங்கி வளரக் கூடும் என்று நம்ப இட மிருக்கிறது. அவ்வித வித்தியா ஸ்தாபனங்களில் "காங்கேரி குரு குலமும், காசி விஸ்வ வித்தியால யமும், சாந்தி நிகேதனமும், குஜராத் வித்யா பீடமும், தமிழ்க் குரு குல வித்யாலயமும்" குறிப்பிடத் தக்கனவாகும். எதிர் காலம் நற்கால மாகவிருக்குமாஞல் நமது விஞ்ஞான விசாரணை மேல்நாட்டு ஆராய்ச் சியின் துணையைக் கொண்டு தற்கால ரீதியாக உச்ச நிலையை அடைய லாம் என்று நம்புவது வீணுகாது.

நமது சூரிய விஞ்ஞானமும் மேலே கண்ட காரணங்களால் விஞ்ஞான ஆராய்ச்சியின முதன்மை ஸ்தானத்தைப் பெறுவதாக விருப்பதால் இப்பயன் படும் பாகத்தைப்பற்றி நம்மவர்கள் நன்சறிந் திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். மறந்தும் மறைந்தும் போன இவ்வித்தையானது கேவலம் ஆராய்ச்சி மட்டான பலனை மட்டும் கொடுப்பதாகக் கருததல் கூடாது. சகல விதமான மனித வாழ்க்கையிலும், வித்தைகளிலும், விஞ்ஞான நூல்களிலும் "இச் சூரிய விஞ்ஞானம்" முதல் ஸ்தானத்தைப் பெறுவது போலவே நீண்டாயுள், தேகபலம், விவேகம், விஞ்ஞானம் இவைகளை அபி விருத்தி செய்வதில் மிகவும் முக்கியமும் இன்றியமையாததுமான நன்மைகளைச் செய்யக் கூடியது மாகும்.

சூரிய விஞ்ஞான அறிவிஞலுண்டாகும் நன்மைகள் பலவற்றை நினைத்தும் முக்கியமாக அறிவு, நீண்டாயுள் இவைகளை யடைய உதவி பெறலாம் என்ற எண்ணங் கொண்டும் இனிவரும் சில வியாசங் களை நமது லக்ஷ்மியில் எழுதி வர உத்தேசித்திருக்கிருேம்.

ஆகவே நேயர்கள் இவ்வியாசங்களைப் படித்து எம்மை உற்சாகப் படுத்துவார்களென்று நம்புகிருேம்.

சித்திரப் பத்தி

மண மற்ற மணம்.

1. அருணாசலம் :— இதோ பார். எனக்கோ ஒருவருமில்லை. இதெல்லாம் உன் குமாரத்தி வைத்து அநுபவித்துக் கொண்டிருக்கலாம். நீ யோசி.

சீதாராமன் :— நகைகளையும், பவுன்களையும் வெள்ளிச் சாமான்களையும்பார்த்துப் பிரமித்து விட்டான். பாவம்!“அவ்விடத்து.......இஷ்டம். போல்..........அதற்கு என்ன தடை?”

2. பால்குடி மாறாத பசலைப் பெண்ணைக் கொண்டு வந்து அறுபது வயதுச் சிறு கிழவனுக்குக் காட்டுகிறான் பாவி! தகப்பன்.

3

3. அதி பால்ய (கிழவன்) மணமகனுக்கும், பெரிய பெண்ணாகிய (பால் குடிமாறாத) மணமகளுக்கும் நல்ல முகூர்த்தத்தில் விவாகம் நடைபெறுகிறது. கிழவனுக்குக்கொண்டாட்டமாய்த் தான் இருக்கிறது.

4. கிழவன் சீக்கிரமாகவே, சொந்த ஊருக்கு (யமலோகத்திற்குப்) பயணப்படுகிறான். ஐயோ! பெண்ணின் கதி என்ன? சண்டாளத் தகப்பன் பண ஆசையால், தன் குழந்தையைப் பலி கொடுத்து விட்டான்!

4



5

5. விதவை:— துரையே! எனது புருஷனைச் சேர்ந்த பந்துக்கள் என் புருஷன் ஆஸ்திகளை யெல்லாம் கைப்பற்றிக் கொண்டு என்னைத் துரத்தி விட்டார்கள். அன்ன வஸ்திரத்திற்காவது தீர்ப்புச் செய்ய வேண்டும்.

கோர்ட்டார்: நீ பால்யமா யிருக்கிற படியால் உழைத்துச் சாப்பிடலாம். ஆகிலும் மாதம் 5. ரூபாய் தீர்ப்புச் செய்கிறோம்.

விடுதலை

இதை வாசிக்கும் நண்ப! உன் அருமை ஆயுளின் பொன் னிளமையை ஒரு ஆபீஸ் கட்டடத்தின் இருட்டறைகளில் கழிப்பது உன் கதியாயிருந்திருக்கு மாயின், உடல் தள்ளாடிப் போகும்வரை கூட அக்காராகிருக வாசம் உன்னை விட்டு பிரியாதிருந்திருக்குமாயின், விடுமுறை நாளென்பதையே நீ அறியாதிருந் திருப்பாயானல்—அப் பொழுது மட்டுமே என் உண்மை மனோநிலையை நீ அறிய முடியும்.

மின்சார சந்தில் நான் மேஜை வேலையை ஒப்புக் கொண்டு இப் பொழுது சுமார் அறுபது வருஷங்களாகிறது. 14-வது வயதில் பாட சாலை மாணவனின் ஏராளமான விளையாட்டுகளையும் அடிக்கடிவரும் விடுமுறை நாட்களையும் விட்டு ஒரு மண்டிக் கடையில் 8 அல்லது 9 மணிநேரம் தினப்படி பிரசன்னமாயிருப்பது, வாழ்க்கையில் என்ன கடுமையான மாறுதல்! ஆனல் காலம் யாவற்றையும் சரி யாக்குகிறது. சீக்கிரத்தில் நானும்—கூண்டில் அடைபட்ட காட்டு மிருகங்களைப் போல்—என் நிலையில் திருப்தி யடைய லானேன்.

வாரத்தில் ஒரு நாள் விடுமுறை எனக்கு உண்டு. ஆனல் அதைப் பூராவும் அனுபவிக்க என்னல் கூட வில்லை. வாரம் பூராவும் அடி மையிலும் தாழ்மையாய் உழைத்து வந்த, நான் விடு முறை இன் பத்தை நுகரும் சக்தியையே இழந்தேன். இதைத் தவிரக் கோடை கால ரஜா ஒரு வாரமும் உண்டு. அப்பொழுது என் சொந்த ஊரா கிய இருதய புரி சென்று, என் இளமை நண்பர்களாகிய வயல்களில் சுதந்திரமாய்க் காற்று வாங்குவது என் வழக்கம். இவ் விடுமுறை வாரத்தை எதிர் பார்த்துத்தான் நான் வருடம் பூராவும் உயிர் தங்கி யிருந்தேன். ஆனல் அவ்வாரம் வந்ததும், எதிர் பார்த்த சுகத்தை யும், சாந்தியையும் எங்கும் காண முடியாது. பொழுது போகா, ஏழு வீண் நாட்கள்! சுகம் அனுபவிக்கும் வழியைத் தேடுவதிலேயே அவை கழிந்து விடும். சாந்தியையும், சுகத்தையும் ருசிபார்க்க ஆரம்பித்ததும் அவ்வாரம் மறைந்து போய்விடும்! நான் மறுபடி என் மேஜையண்டை போய்ச் சேர்ந்து, இதை யொத்த வாரம் வர நடுவே 50 வாரங்கள் கழிய வேண்டுமே என்றெண்ணி ஏங்குவேன். ஆனல் எப்பொழுதாவது அது வந்தே தீருமென்ற எண்ணமே என் உள்ளிருந்த இருட்டிற்கு சிறிது வெளிச்ச மீந்தது.

என் வேலையைப் பார்ப்பதில் நான் ஒழுங்காகவே இருந்தேனுயி னும், வயதாக ஆக, வேலை பார்ப்பதில் நான் திறமை யற்றவன் என்ற ஒரு நினைவு என்னைப் பிடித்துக் கொண்டது. நாளாக ஆக அது விர்த்தியடைந்து அதன் குறிகள் என் முகத்தில் தென்படவும் ஆரம் பித்தன. என் ஆரோக்கியம் குறைந்தது. என் திறமையின்மை ஒரு சமயம் கண்டு பிடிக்கப்படும் என்று என் மனம் தன்னைஅறியாமலே பயப்பட்டது. பகலில் உழைப்பது போதாதென்று இரவிலும்

ஆபீஸ் காரியங்களைப் பார்த்து வந்தேன், தூங்கும் போது கூட, கணக்குப் பிசகிவிட்டதாகக் கனவு கண்டு திடீரென்று எழு வேன்..........வயதோ ஐம்பது ஆயிற்று. விடுதலையையோ காணேம். என் மேஜையுடனேயே நானும் மரமாக வளர்ந்து விட்டேன்.

முகத்தில் நன்குய்த் தென்பட்ட என் மனக்கவலையைப்பற்றி என் நண்பர்கள் வினவ ஆரம்பித்தனர். எனினும் என் யஜமானர்களின் நோக்கத்திற்கு அது உட்படாது என நம்பியிருந்தேன். ஆனுல் சென்ற மாதம் ஐந்தாந்தேதி—என்றும் மறக்க முடியாத நாள்—என் சிறிய யஜமான் என்னைத் தனியாக அழைத்து என் முகக் கோணலின் காரணத்தை வெட்டெனக் கேட்டார். என் சக்தி யின்மையை நான் ஒப்புக் கொண்டுவிட்டேன்! நான் வேலையை விட்டுச் சீக்கிரம் செல்ல வேண்டியிருக்குமெனவும் பகர்ந்தேன்! அவர் என்னை தைரியப்படுத்தி சில வார்த்தைகள் கூறிச் சென்ருர். அத்துடன் அச்சமாசாரம் நின்றது. ஆனுல் என் மனம்மட்டும், நான் முட்டாள் தனமாக நடந்து கொண்டதற்கு, என்னை அடிக்கடி சுட்டிக் காட்டிற்று. எனக்கு விரோதமாகவே நான் ஒரு கை கொடுத்து விட்டேன். என் உத்தியோக நீக்கு உத்திரவைத் தினப் படி எதிர் பார்க்கலானேன்.

இம்மாதிரி நிம்மதியின்றி ஒரு வருடம் செல்லச் சென்ற ஏப்ரல் மாதம் 12ம் தேதி (இரவு 8 மணி யிருக்கும்) என் வேலையை முடித்து வீடு திரும்பும் சமயம், பின் கட்டில் கூடியிருந்த மானேஜர் களிடமிருந்து எனக்கு ஒரு அகால அழைப்பு வந்தது. 'நம் முடிவு காலம் வந்து விட்டது,' நம் உதவி இனிக் கடைக்கு வேண்டாமெனச் சொல்லிவிடுவார்களெனவும் எண்ணிக் கொண்டே மெதுவாகப் பின் கட்டை அடைந்தேன். என் முகக்குறிகளை அறிந்த சிறிய எஜமான் புன்னகை புரிந்தார். அது எனக்குக் கொஞ்சம் ஆறுதல் அளித்தது. என் பெரிய எஜமான் என் நற்குணங்களைப் பற்றிப்புகழ்ந்துரைத்தார். (எவ்விதமோ அவைகளைக் கண்டுபிடித்தாரே!), எனக்கு இவ்வளவு வயதாகும் வரை வேலையில் இருக்கவேண்டியிருந்ததைப் பற்றியும் வருந்தினுர், பிறகு நான் மிகவும் ஏழையாதலினுல் என் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கு பென்ஷன் மண்டியிலிருந்தே அளிப்பதாகவும் சொல்ல, மற்ற இருவரும் தலையை அசைத்தனர் (என் இருதயம் பட பட வென்று அடித்துக் கொண்டே இருந்தது. ஆனந்தத்தினு லும் நன்றியினுலும் சூழப்பட்டிருந்த நான் என்ன சொன்னே னென்று எனக்குத் தெரியாது. ஆனுல் அவர்கள் சொற்படி நடக்க ஒப்பினதாகப் பின்னுல் அறிந்தேன். அவர்களுக்கு வந்தனம் அளித்து வீடு சென்றேன். மணி எட்டரை ஆயிருந்தது. அன்று முதலே என் ஊழியத்தை விட்டுச் சுதந்திர முடையவனுனேன்.

முதல் இரு நாட்களில் எனக்கு ஒன்றும் பிடிக்கவே யில்லை. என் மனம் மிகக் குழம்பி யிருந்தது. என்னை ஒரு சுகவாசி என்று எண்ணிக் கொண்டு அங்கு மிங்கும் அலைய லானேன். 40

வருஷ காலமாகக் கொடும் சில வரை காராகிருஹ வாசம் செய்தவனைத் திடீரென்று வெளியே விட்டு விட்டால் அவன் மனம் எந்த ஸ்திதியில் இருக்குமோ அதே நிலையில் என்மனம் நின்றது. என்னையே யான் நம்பக் கூடவில்லை. 'கால'த்தின் வரையைத்தாண்டிக் காலாதீதமான சாசுவத நிலைக்குள் நான் புகுந்தேன்.—தன்காலம் பூராவையும் தனக்கே உரிமை அடைவது ஒரு வித சாசுவதமே. எனக்குத் தேவையானதை விட அதிக காலம் எனக்கு அளிக்கப்பட்டிருப்பதாகவும் தோன்றியது. 'காலத்தில்' ஏழையாயிருந்த எனக்கு ஒரு புதையல் கிடைத்து விட்டது. என் சொத்தின் முடிவைக்கண்டறிய என்னால் முடியவில்லை. என் புதிய சொத்தைப் பரிபாலிக்க கணக்கர்களும், உதவிமனிதரும் தேவையாயிருந்தது.........இவ்வுணர்ச்சி யெல்லாம் இப்பொழுது போய் விட்டது. என் நிலைமையின் மேன்மையை நான் உணர்கிறேன்.

என்நாளும் எனக்கு விடுமுறை நாளே யாதலால், விடுமுறையே எனக்கில்லை யெனத்தோன்றுகிறது. பொழுதுபோகாதாயின் நடந்து என் காலத்தைக் கழிப்பேன். ஆனால் முன்பு அநித்ய விடுமுறை நாட்களில் செய்தது போல், தினம் 30 மைல் நடக்கமாட்டேன். நடப்பேன்; படிப்பேன் (அல்லது இப்பொழுது போல்) ஏதாவது கிறுக்குவேன். சுகத்தை நான் தேடுவதில்லை. அதுவே என்னிடம் வருகிறது.

எனக்கு வயது 50க்கு மேலாகிறது வாஸ்தவமே. ஆனால் மற்றவர்களுக்காக உழைத்த நேரத்தை அதிலிருந்து கழித்து விட்டால் நான் இன்னும் ஒரு வாலிபனே என்பது நன்கு விளங்கும்.—ஸ்வ ப்ரயோஜனமாக உழைத்த நேரமே நமதென்று கூற முடியும்; மற்ற நேரத்தில் நாம் வாழ்ந்தாலும், அந்நேரம் யாவும் பிறருடையதே—இனி நான் பூலோகத்தில் இருக்கக் கூடுவது பத்து வருஷங்களாயினும் அவை முன் 30 வருஷங்களுக்குச் சமானமே.

என் உத்தியோகத்தை விட்டு வெளிவந்ததும் என் மனம் ஒரு அபூர்வ நிலையில் நின்றது. சிறிது காலம் செல்வதற்குள், நான் வேலையை விட்டு வெகு காலமானது போல் தோன்றிற்று. சடைக் குமாஸ்தாக்கள் பலருடன் வருடம் பூராவும் தினம் எவ்வளவோ மணிநேரம் உழைத்து வந்தேனாயினும், அவர்களை விட்டுப் பிரிந்ததும் அவர்கள் எனக்கு இறந்தவராயினர். இதே மனோபாவத்தை இறந்த சிநேகிதனுக்காகத் துக்கிக்கும் போது, ஒரு கவி பின் வருமாறு விளக்கியிருக்கிறார். 'என் நண்பன் இப்பொழுது தான் என்னிடமிருந்து பிரிந்தான். துக்கப்படக் கூட இன்னும் நேரமில்லை. ஆனாலும் அவன் இறந்து ஆயிரம் வருஷங்க ளானாற் போல் எனக்குத் தோன்றுகிறது. நித்தியத்துவ நிலையில் காலத்திற்கு இடம் கிடையாது.'

இம் மனோபாவத்தைப் போக்கடிக்க, நான் என் மேஜை சோதரர்களையும், எழுதுகோல் சகாக்களையும் தரிசிக்க அடிக்கடி செல்வதுண்டு. ஆனால் அவர்கள் என்னை அவர்கள் எவ்வளவு மேன்மையாக வரவேற்ற போதிலும் முன்னிருந்த சகஜ சுபாவம் அவர்களிடம் உண்டாகவே யில்லை. நாங்கள் பழைய விளையாட்டுக்களையும், புராதன விஷயங்களையும் நினைப் பூட்டிக்கொண்டு சம்பாஷித்தாலும், அவர்கள் என்னிடம் ஒட்டாமல் பேசுவதாகவே எனக்குத்தோன்றிற்று, என் புராதன மேஜை, தலைப்பாகை மாட்டும் மூலை—யாவும்வேறொருவனுக்கு வசமாயின. சுமார் 36 வருஷ காலமாகக் கேலி, ஹாஸ்யம் இவைகளினால் என் உத்யோக வாழ்க்கையைக் கரடு முரடின்றிச் செய்த என் நண்பர்களை விட்டுப் பிரிவது சிறிது வருத்தமே ஈந்தது. —என் வாழ்க்கைதான் கரடு முரடா அல்லது யான் தான் பேடியோ—வருத்தபட இது சமய மல்ல.மனம் அவ்விதந் தான் சிற்சில சமயம் நடந்து கொள்ளும். வந்தனம்! என் அன்பர்களே! அடிக்கடி வந்து உங்களைக் காண்பேன்! மலையை ஒத்த ஆபீஸ் கட்டிடமே! உன்னிடமே என் வாழ் நாள் யாவையும் கழித்தேன். என் சரித்திரத்திற்கு நீயே தான் ஓர் ஆதாரம்!

காலம் மெல்ல மெல்லச் செல்கிறது. சாந்தியையும் அமைதியையும் கிட்டி வருகிறேன். இன்னும் பூராவும் அடைந்தபாடில்லை. ஆனால் என் நிலை மாறிவிட்டது. எங்கு வேண்டுமாயினும் யான் செல்வேன். மின்சாரசந்தில் வெகுகாலமாக என் பாத மிதியின் கீழ்த் தேய்ந்து மிருதுவான கற்கள், இப்பொழுது எந்த குமாஸ்தாவின் அயர்ந்து தளர்ந்த பாதங்களினால் மிதிபடுகின்றனவோ!—என் வாழ்க்கையில் என்ன ஆபூர்வ மாறுதல்! ஒரு விதத்தில் காலமே எனக்கு ஸ்தப்தமாக நிற்கிறது. பருவ காலங்களின் மாறுதலை யான் உணருவதில்லை. இன்ன கிழமை இன்ன தேதி என்பதைப் பற்றியும் யான் கவலை கொள்வதில்லை.

சுதந்திர ரஜா நான் பெற்றுவிட்டேன். உலகத்தில் வந்த வேலை எனக்கு முடிந்து விட்டது. இனி மீதியுள்ள நேரத்தை என் இஷ்டப்படி செலவழிக்கலாம். வந்தனம்! (ஒரு ஆங்கில வியாசத்தினின்று மொழி பெயர்க்கப்பட்டது.)

ரா. ராமகிருஷ்ணன்.

பிறர் குற்றம் காண்பதும் தன் குற்றம் மறப்பதும் மடமையின் லட்சணம்: ஸிஸ்ரோ.

தேச பக்தி இல்லாதவனுக்கு வேறெதிலும் பக்தி இருக்க முடியாது: பைரன்.

தியாகமே மெய்யான அறம். மாஜினி.

விடா முயற்சி செய்பவரிடம் விண்ணவர் விரைந்து வருவர்: ஜொராஸ்டர்.

"நடையுடை பாவனை"

(சர். டி. மாதவராவ் அவர்களால் எழுதப்பட்டது.)

உடை.

1. உடுப்பு. எப்பொழுதும் நேர்த்தியாகவும், சங்கடமின்றித் தரித்துக்கொள்ளக் கூடியதாகவும், கண்ணுக்கு லட்சணமாகவு மிருக்கவேண்டும்.

2. கிழிந்த அல்லது விகாரமாய் ஒட்டுப்போட்ட வஸ்திரத்தைத் தரிக்கக் கூடாது.

3. வஸ்திரம், தேகத்தைக் கணைக்கால் வரையில் மூடியிருக்க வேண்டும். கால்களின் பாகங்கள் வெளியில் தெரியக்கூடாது.

4. ஆங்கிலேயருடைய அல்லது மற்ற அந்நிய தேசத்தாருடைய மாதிரி உடை தரிக்கவேண்டாம்.

5. நம்முடைய தேசாச்சாரப்படி உடை தரிப்பதே நல்லது. மேலும் இம்மாதிரி உடைதான், உஷ்ண பூமியாகிய நம் தேசத்திற்கு விசேஷ சிலாக்கியத்தை உடையது.

6. தேகத்தின் பாகங்கள் தெரியக்கூடிய மிகவும் இலேசான வஸ்திரம் தரித்தலே கூடாது.

7. எதுவும் அதிகச் சுத்தமா யிருக்கவேண்டும்.

8. அதிக ஆடம்பரமாய் உடை தரிக்க வேண்டிய தில்லை.

9. கைக்குட்டைகள் எப்பொழுதும் சுத்தமாக இருக்கவேண்டும்.

10. சிறந்த வாசனைத் திரவியங்களை அளவுக்கு மிஞ்சி உபயோகிக்க வேண்டாம்.

11. வஸ்திரத்தை மூச்சு விடக் கூடாமலும், இடுப்பை இங்குமங்கு மசைக்கக் கூடாமலும் இறுக்கிக் கட்ட வேண்டாம்.

12. தங்களுக்கு உயர்ந்தவர்களைக் காணும்போது, வெற்றிலை பாக்கு மென்று கொண்டு போகக்கூடாது.

13. தலைப்பாகைக்குப் பின் குடுமி மயிரைத் தொங்கவிடக் கூடாது. (சென்னையில் இது விசேஷம்.)

14. தங்களுக்கு மேலான வர்கள் மத்தியில், தலைப் பாகையை எடுக்கக்கூடாது.

15. வெளியில் போகும்போது வெறுந் தலையாய்ப் போகக்கூடாது.

"காது மூக்கு குத்திக் கொள்வது."

இத்தேசத்தாருக்குள், முற்காலந் தொடங்கி வழங்கி வரும் சில துர் வழக்கங்கள் இன்னும் நடந்து வருகின்றன. நாகரீகமடைந்த பிறகு கூட அவைகளை அப்பியசித்துக் கொண்டு வருவது கூடா வொழுக்க மாதலின், தங்களா லியன்ற மட்டும் அவைகளைக் கொஞ்சம் கொஞ்சமாவது நீக்க முயல வேண்டும். இத் துர் வழக்கங்களில் "காது மூக்கு குத்திக் கொள்வது" ஒன்று. அனேகம் துவாரங்கள் காதில் செய்து நானுவிதமான நகைகளை அணிவது, முகத்தை விகாரப் படுத்து கிறதே

யொழியக் கண்ணுக்குக் கிஞ்சித்தாயினும் லட்சணமாகவே யில்லை. அப் பொத்தல்களைப் பார்த்தால் இப்பொழுதுதான் காது முழுமையும் கரையான் மொய்த்துக் கொண்டது போல் அல்லது செல்லரித்து விட்டதுபோ லிருக்கிறது. மூக்கைத் தான் விடுகிறார்களா? சில வேளை மூக்கில் மூன்று துவாரம் செய்கிறார்கள். மூக்கில் ஒரே துவாரம் தான் செய்ய வேண்டு மென்று ஓர் சட்டம் ஏற்படுத்தினாலாவது நலமாயிருக்கு மென்று தோற்றுகிறது. தென் பாகங்களில் சில ஸ்திரீகள் தம் தேகத்தின் சில பாகங்களை வேண்டுமென்றே நெருப்பில் காய்ச்சி, அம்மை குத்தினாற் போலத் தழும்புகள் செய்து கொள்ளுகிறார்கள். இது என்னவோ அழகாம்! நல்ல அழகு! மலையாளத்திலுள்ள நாயர் ஸ்திரீகள் தங்கள் காதுகளில் பிரமாண்டமாய்த் துவாரம் செய்து அதில் மரத்தினாலாவது தந்தத்தினாலாவது வட்டமாய்க் கெட்டி வளையங்களை அணிந்து கொள்ளுகிறார்கள் (ஆனால் இப்பொழு தில்லை.) அவைகளின் கனமோ அசாத்தியம்.

ஐரோப்பியாலிருந்து கதவுகளுக்காகக் கண்ணாடியில் செய்து அனுப்பப்படும் வட்டப் பிடிகளை சில ஸ்திரீகள் மேன்மையாகக் கருதி அவைகளைக் காதுகளில் புகுத்திக்கொள்கிறார்கள்!

பச்சை குத்திக்கோள்வது.

இது முற் காலந் தொட்டு வழங்கி வரும் நாகரீக மற்ற வழக்கங்களில் ஒன்று. அனாவசியமாய் தேகத்திற்கு நோவு உண்டாக்கிக் கொள்வதேன்? சில தமிழ்ப் பெண்கள் நெற்றியில் நீளமாய்ப் பச்சை குத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தால் ஒரு பச்சைப் பூரானை ஒட்டி வைத்தது போலிருக்கும். கைகளில் தேளைப்போல் ஒரு உருவம் செய்து கொள்ளுகிறார்கள். சிலர் பச்சை குத்துவது அழகை விருத்தி செய்கிறது என்று எண்ணும் பட்சத்தில் தங்களுக்கு எந்த உருவத்தில் பிரியமோ, அதனைக் காகிதத்தினால் செய்து வர்ணம் கொடுத்து அதைத் தங்கள் நெற்றியில் அல்லது கையில் ஒட்டிவைத்துப் பார்க்கட்டும்.

சுதேச ஸ்திரீகள் அனேகர், அதிலும் மகம்மதிய ஸ்திரீகள் எப்பொழுதும் தங்கள் பற்களைக் கறுப்புப் பொடியால் தேய்த்து வருகிறார்கள். இதைவிடக் கோரம் எங்கேயுமில்லை (சில சகோதரிகள் அளவுக்கு மிஞ்சி வெற்றிலை போட்டு, அழகிய முத்துப் போன்ற பற்களை தண்ணீரில் பாசி அடைவது போல் பல்லையும் பாசி அடையச் செய்கிறார்கள்) அழகிய பற்களைக் கறுப்பாக்கிக் கொள்வதேன். தேகத்திலும், முக்கியமாய் முகத்திலும், அளவுக்கு மிஞ்சி மஞ்சளை அப்பிக்கொள்ளுகிறார்கள். இதெல்லாம் அழகாம். கை கால் விரல்களிலும் மருதாணி இட்டுக்கொள்கிறார்கள். ஸ்திரீகளின் பேரில் குற்றம் சொல்வதில் பயனில்லை. எல்லாம் புருஷர்கள் செய்யும் சேஷ்டை தான். புருஷர்கள் இன்றைக்கு வேண்டாமென்றால் நாளைக்கே இத்துர் வாடிக்கைகள் பறந்து போம்.

தியாகத்தின் மேன்மை

ரெவரண்டு ஜே. எஸ். சான்ட்லர் என்பவர் எழுதிய சிறந்த கட்டுரை ஒன்று 'கிறிஸ்தவக் கல்லூரிப் பத்திரிகை'யின் 1889-ம் வருஷம் அக்டோபர் மாதத்துச் சஞ்சிகையில் காணப்படுகிறது. ந. ச.

* * * *

ஒருவன் புகழை அடைவதற்கு என்னென்ன வழிகள் இருக்கின்றன என்பதைப் பற்றி இங்கு நான் கூறப்போவதில்லை. இந்தப் புகழ், ஒருவனுடைய சக்திக்குத் தகுந்தவாறும், அவன் வாழ்க்கையில் ஏற்படும் சில சம்பவங்களாலும், அவன் பொறுப்பாளியல்லாத வேறு பலவற்றாலும் அவனை வந்தடைகிறது. சாதாரண சக்தியும், மிதமான வாழ்க்கைச் சுகங்களும் உள்ளவர் எப்படி அழியாச் செல்வாக்கைப் பெறலாம் என்பதைப்பற்றியே இங்குக் குறிப்பிடுகிறேன். தியாகத்தின் பயனாகவே ஒருவன் செல்வாக்கை அடையமுடியும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

* * * * *

பண்டைக்காலத்தில் கிரேக்கர்கள், தங்கள் சத்துருக்களால் வெல்லப்பட்ட பிறகும், செல்வாக்குடனிருந்தார்கள். எப்படி? எங்கெங்கு கிரேக்கர்களின் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டதோ. மகேதோனியாவிலாக, சின்ன ஆசியாவிலாக, மத்தியதரைக் கடலிலுள்ள தீவுகளிலாக, எங்கும் தங்கள் நாட்டுணர்ச்சியைப் பரப்பி வந்தார்கள். இதன் பயனாக, சின்ன ஆசியா, பாலஸ்தீனம், அலெக்ஸாந்திரியா முதலிய நாடுகள் உரோமர்களுடைய ஆட்சிக்குட்பட்ட பிறகும் அந்நாட்டு ஜனங்கள் கிரேக்க ஆசாரத்தையே பின்பற்றி வந்தார்கள், கிரேக்க மொழியையே பேசினார்கள்.

* * * * *

ஒவ்வொரு மனிதன் முன்னிலையிலும் ஒவ்வொரு பலிபீடம் இருக்கிறது. ஒருவன், அதன் மீது தன்னைத் தியாகம் செய்து, அத்தியாக ஒளி அங்கிருந்து வீசுமானால் மனித சமூகத்தை ஆட்டுவிக்கும் சக்திகளுள் ஒன்றாக அவன் ஆகிவிடுகிறான். ஒருவன், வசீகரமுள்ள முகமுடையவனாயிருக்கலாம்; மிகுந்த சாமர்த்தியமுடையவனாயிருக்கலாம்; பண்டிதனாயிருக்கலாம்; தன் சமூகத்தினரிடத்தில் அந்தஸ்துடையவனாயிருக்கலாம்; தன் தொழிலில் நிபுணனாயிருக்கலாம். இவனுக்குச் சொற்ப செல்வாக்கே இருக்கும். ஆனால் இச்செல்வாக்கு அநித்தியமானது. அவன் இறந்ததும் அவன் பெயர் மறைந்துவிடும். இதற்குக் காரணம் என்ன? அவன் எவ்வித தியாகத்தையும் செய்யவில்லை. சுயநலப் பிரியனாகவே அவன் வாழ்ந்தான். ஏதாவது ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவானாயின் சுயநலம் அவனைக் குறுக்கிடுகிறது; தன் சுகம், அந்தஸ்து, கௌரவம் முதலியவைகளைக் கவனிக்கிறான். பாபு கேசவ சந்திர சேனர், நிலையான செல்வாக்கையடைதற்குரிய தியாகங்களைச் செய்தார். ஆனால் தன் குமாரத்தியை

தியாகத்தின் மேன்மை

ஒரு சுதேச மன்னருக்கு மணம் புரிவிக்க விரும்பியதால், அவருடைய கௌரவமும் சுயநலமும் அவர் செல்வாக்கைக் குன்றச் செய்தன.

*　　*　　*　　*　　*

உலகத்தை இயக்குவிக்கும் சக்திகளிடையில் மனிதன் அற்பமானவன்; சமுத்திரத்தில் விழும் நீர்த்துளிபோல்வான் இத்தகையவன். தனக்கிருக்கும் அற்ப சக்திகளையும் தன்னை மேன்மைப் படுத்திக்கொள்ளும் பொருட்டே உபயோகித்துக்கொள்வானாயின், அவன் விரைவில் மறக்கப்படுகிறான். ஆனால் அதற்கு மாறாக, தன்னைத் தியாகம் செய்து, அதன் பயனாக ஏற்படும் பலத்தை நிரந்தரமான ஒரு சக்தியுடன் சேர்த்துவிடுவானாயின், அல்லது அழியாத ஓர் உண்மையை விளக்குவானாயின், அதனால் அவன் தனக்கப்பாற்பட்ட சக்தியுடன் ஐக்கியப் பட்டுவிடுகிறான். உலகத்தில் பலர், நல்ல ஒரு காரியத்திற்குத் தங்களை அர்ப்பணம் செய்துவிடக்கூடாத சுயநலமுடையவராய் இருக்கின்றனர். ஒருவன் நல்ல ஒரு காரியத்திற்கோ கெட்ட காரியத்திற்கோ தன் அனைத்தையும் ஒப்புக்கொடுத்து விடுவானாயின், அவன் அழியாப் புகழை அடைவான். ஆனால் பெரும்பாலோர் நல்ல காரியத்திற்காகத் தங்களை அர்ப்பணம் செய்துவிடுவதில்லை. இங்குத் தன்னல மற்ற தியாகத்தைப்பற்றிக் கூறும்போது, தன்னலத்தைப் பேணல், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளல் முதலியவைகளுக்கும் முற்கூறிய தன்னலமற்ற தியாகத்துக்கும் வேற்றுமை இருக்கிறதென்பதை அறிந்து கொள்ளல் வேண்டும். ஒருவன் களியாடல்களுக்கே தன்னை அர்ப்பணம் செய்து விடுவானாயின் அவன் தன் சுகத்தை நாடுகிறவனே யாகிறான். ஆனால், ஒருவன், தன் வாழ்க்கையை நடத்தும் பொருட்டுத் தன் முழுக்கவனத்தையும் அதில் செலுத்துவானாயின், அவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்பவனாகிறான்.

*　　*　　*　　*　　*

ஒருவன் தன் சுகத்துக்காக அல்லாமல், தன் நாட்டிற்கும் பிறர்க்கும் நன்மை செய்வதற்காகப் பணத்தைச் சம்பாதிப்பதிலேயே தன்னை அர்ப்பணம் செய்துவிடலாம். இத்தகையவர் பலர் தோன்றியிருக்கிறார். இவர்களால் பலர் நன்மை யடைந்திருக்கின்றனமையால் இவர்கள் நிலையான செல்வாக்கை யடைந்திருக்கிறார்கள். கைத்தொழில் அபிவிருத்திக்காகச் சிலர் தங்களை அர்ப்பணம் செய்துவிடுகிறார்கள். தங்கள் வாழ்க்கையை நடத்தும்பொருட்டே சிலர் இக்கைத்தொழிலில் இறங்கினர் என்பது உண்மைதான். ஆனால் இவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய அளவைவிட அதிகமான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். சில சாஸ்திர அறிஞர்கள், தங்களுடைய வருவாயையும், தேக நலத்தையும் கூடக் கவனியாமல், பல புதிய விஷயங்களைக் கண்டு பிடிப்பதில் தங்களை அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். இங்ஙனம் தங்களைத் தியாகம் செய்தவருள் ஸ்ரீமான் தாமஸ் எடிஸனையும் கூறலாம். அவர், தன் இளமை முதற்கொண்டே புதிய விஷயங்களைக் கண்டு பிடிப்பதில் ஊக்

கங்காட்டி வந்தார்; இதற்காகத்தன் முழுக் கவனத்தையும் செல வழித்தார். சொற்ப கல்விப் பயிற்சியோடு கூடிய அவர் ரெயில் வண்டிகளில் பத்திரிகைகள் விற்று வந்தார். ஒரு ரெயில் தொடரில், சிறிய ஆராய்ச்சிசாலை யொன்று அமைத்து பல ஆராய்ச்சிகளைச் செய்து வந்தார். இதன் பயனாக ரெயில்வண்டியே நெருப்புப் பற்றிக் கொண்டது. பிறகு தந்தி இலாகாவில் ஓர் உத்தியோகம் பெற்றார். இங்கே பல விதமான ஆராய்ச்சிகளைச் செய்தார். இதன் பயனாக, ஒரே கம்பியின் மூலம் பல செய்திகளை அனுப்புவதைக் கண்டுபிடித்தார். டெலிபோன், மின்சாரம், கிராமபோன் முதலியவைகளில் பல நூதன முறைகளை ஏற்படுத்தினார். இவைகளினால் ஜனங்களுக்குப் பல நன்மைகள் உண்டாயின. எடிஸனைப் போல் நாம் எல்லாரும் ஆராய்ச்சிக் காரராக இருக்க முடியாது. ஆனால், நம் சகோதரர்களுக்கு நன்மை தரும்படியான காரியத்தில் ஈடுபட்டு நம் அனைத்தையும் தியாகம் செய்யலாம்.

* * * *

சுமார் நானூற்று ஐம்பது வருஷங்களுக்கு முன்னர் கூடன் பர்க் என்பவன் மரக்கருவிகளைக் கொண்டு அச்சடிக்கும் முயற்சியில் ரகசியமாக ஈடுபட்டிருந்தான். இவனுடன் இரண்டு பங்குதாரர்கள் இருந்தார்கள். இவர்கள், தங்கள் முயற்சிகளை ரசியமாக வைத்திருக்க வேண்டுமென்ற நிபந்தனை இருந்தது. இவர்களில் ஒரு பங்கு தாரன் இறந்து போனான். இவன் சந்ததியார், மேற்படி ரகசியங்களைத் தங்களுக்கு வெளியிட வேண்டுமென்று கூடன் பர்க்கின்மீது வழக்குத் தொடுத்தார்கள். இதனால் அவனுக்கு ஏராளமான பொருள் நஷ்டம் ஏற்பட்டது. எனவே கூடன்பர்க் வேறோரிடத்திற்குச் சென்று ஜான் பாஸ்டு என்ற ஒரு வெள்ளி வேலை செய்வோனைப் பங்குதாரனாகச் சேர்த்துக் கொண்டான். அவன் கூடன்பர்க்குக்குப் பணம் கொடுத்து உதவியதோடு எல்லாவற்றையும் ரகசியமாக வைத்துக் கொண்டிருப்பதாகவும் உறுதி கூறினான். இவர்களிடம் வேலை செய்து கொண்டிருந்த குமாஸ்தா ஒருவன், இருவருக்கும் நாளா வட்டத்தில் பகைமை உண்டாக்கி விட்டான். இதனால் பாஸ்ட் என்பவன் தனக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்துக் கொண்டு தான் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்டான். கூடன் பர்க்குக்கு கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. எனவே, தன் சாமான்கள் அனைத்தையும் பாஸ்டிடம் ஒப்புவித்து விட்டான். அப்பொழுது பைபிள் புத்தசம் முக்கால் பாகம் அச்சிடப்பட்டு முடிந்திருந்தது. அதையும் கொடுத்து விட்டான். ஆயினும், கூடன்பர்க், தன் முயற்சியை விடமால், மீண்டும் தன் தொழிலை ஆரம்பித்து, தனக்கு விரோதிகளா யிருந்தவர்கள் அச்சிட்ட நூல்களைக் காட்டிலும் சிறந்த நூல்களை அச்சிட்டான். இதனால் இவனுக்கு அதிகப் பொருள் வருவாயில்லை. ஆனால் இத் தொழிலுக்கே இவன் தன்னைத் தியாகம் செய்துவிட்டான். சுமார் நானூறு ஆண்டுகள் வரை இவன் புகழ் அழியா திருந்தது.

* * * *

தியாகத்தின் மேன்மை

தேசத்தின் பொருட்டு எல்லா வற்றையும் தியாகம் செய்தல் மிகவும் மேலானதாகும். எந்த நாடும், அந்நாட்டிடை உதித்த தேசபக்தர்களின் இரத்தத்தினலன்றி முன்னேற்ற மடைந்ததில்லை. இத்தாலிய வீரனுகிய கரிபால்டி, தன் இளமைக் காலத்தில் கனவிலும் ரோமாபுரி முன்னேற்றமடைய வேண்டு மென்றே நினைத்துக் கொண்டிருந்ததாகவும், அதைப் பற்றியே பிரார்த்தனை செய்து கொண்டிருந்ததாகவும் கூறுவான். இத்தாலியர்கள் தங்கள் தாய் நாட்டின் பொருட்டு யுத்தம் செய்யப் போவதாகக் கேள்விப்பட்டானுயின், அதற்காகத் தன் உயிரைக் கொடுக்க வேண்டு மென்று தீர்மானித்து விடுவான். ஆனல் இவன் மாலுமித் தொழில் செய்து கொண்டிருந்தானுகையால் அநேக கஷ்டங்களை அநுபவிக்க வேண்டியிருந்தது. இவன் இயற்கையிலேயே அஞ்சா நெஞ்சு கொண்டவனுயிருந்தான். இளைஞனு யிருக்கும் போது ஒரு சமயம் ஒரு வண்ணுத்தி தண்ணீரில் முழுகிப் போகும் தறுவாயி லிருக்க அவளைக் கரையேற்றினுன். இவன் எண்ணம் பலித்தது. இத்தாலியின் பொருட்டு இவன் செய்த ஊழியங்களை யாரே அறியார்? அமெரிக்காவிலுள்ள பாஸ்டன் என்னுமிடத்தில் நடை பெற்ற ஒரு யுத்தத்தில், தளபதி வாரன் என்பவன் இறந்து போனுன். இறக்குந்தருவாயில் அவன் "என் தாய்நாட்டின் பொருட்டு நான் இறப்பது எவ்வளவு இனிமையா யிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே ஆவி துறந்தான். அதே யுத்தத்தில், தளபதி வாஷிங்க்டன், ஒரு நதிக் கப்பாலுள்ள சத்துருக்களின் இருப்பிடத்துக்குச் சென்று அவர்களுடைய ரகசியங்களை அறிந்து வருவதற்கு ஒரு தொண்டன் வேண்டுமென்று தெரிவித்தான். உடனே ஓர் இளைஞன் வந்து, தான் அவ்வேலையைச் செய்வதாக ஒப்புக்கொண்டு அப்படியே சத்துருக்களின் பாடிவீட்டுக்குச் சென்று எல்லா விஷயங்களையும் சேகரித்துக்கொண்டு திரும்பும் வழியில் கண்டு பிடிக்கப்பட்டுக் கைதியானுன். மறுநாள் இவன் தூக்கிலிடப்படும் சமயத்தில், "என் தாய் நாட்டிற்காக அர்ப்பணம் செய்ய எனக்கு மற்ருேர் உயிர் இல்லையே என்ற ஒரு வருத்தமே எனக்கு இருக்கிறது" என்று கூறினுன். இத்தகைய உறுதி கொண்ட பலர் அடங்கிய அச்சிறு சேனைக்குத் தளபதியாயிருந்த வாஷிங்டன், பல யுத்தங்களில் தோல்வி யடைந்திருந்த போதிலும், தேசத்தின் பொருட்டு அரிய தியாகங்களைச் செய்திருக்கிறுன். அமெரிக்கா ஐக்கிய நாடுகள் உள்ளவரை அவன் பெயர் அழியாது. இப்பொழுதும் அவனுடைய பிறந்த நாள் ஒவ்வொரு வருஷமும் கொண்டாடப்படுகிறது.

*　　　　*　　　　*　　　　*

மேற்கூறிய எல்லாவற்றையும் விடச் சிறந்தது மனித சமூகத்தின் நன்மைக்காகத் தியாகம் செய்வதேயாகும். மேற் கூறப்பட்ட தியாகங்களினுல் குறித்த, ஓர் அளவுக் குட்பட்ட வகுப்பாருக்கோ, தேசத்தாருக்கோ நன்மை உண்டாகிறது. ஆனல் இந்தத் தியாகத்தினுல் ஏற்படும் நன்மை அளவுகடந்து நிற்கிறது. உரோமர்கள், கோத்தர்களை

ஜயித்து விட்டு வெற்றிக் கொண்டாட்டங் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். பல வித பந்தயங்கள் நடை பெற்றன. சிலம்பக்காரர்கள், தங்கள் திறத்தைக் காட்டத் தோன்றினார்கள். இந்தச் சிலம்புச் சச்சரவு மிகக் கொடுமையானது. இச்சமயத்தில் வயோதிகமான, சிற்றுடை அணிந்த, தலையிலும் காலிலும் ஒன்றுமில்லாத ஒருவன் அவர்களிடையே தோன்றி, இந்தக் குரூரமான, உயிரைப் போக்க வல்ல விளையாட்டை ஒழிக்குமாறு வேண்டிக் கொண்டான். அப்பொழு திருந்த உற்சாகத்தில், ஜனங்கள் இவன் வார்த்தைகளைக் கவனிக்கவே யில்லை; "சிலம்பக்காரர்களே! ஆகட்டும்" என்று அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். சிலம்பக்காரர்கள்; இந்த வயோதிகத் துறவியை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தங்கள் சச்சரவில் ஈடுபடத் தொடங்கினார்கள், ஆனால் இவன் சிறிதும் பின்னிடையாமல் அவர்கள் ஒருவருக் கொருவர் மோதிக் கொள்ளாதபடி இடையே நின்றான். "அவனைத் தங்கள் வாளால் வெட்டி வீழ்த்தியதும் ஜனங்கள் அவன் நன்றாக இறந்து போகும் வரை, அவன்மீது கல்லெறிந்தார்கள். பிறகு விசாரித்ததில், இவன் ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாட ஆசியாக்கண்டத்தி லிருந்து ரோமாபுரிக்கு வந்தவனென்று தெரிய வந்தது. இவன் உயிர் துறந்ததின் பயனாக, சிலம்பச் சச்சரவே உரோமா புரியிலிருந்து ஒழிந்தது.

* * * *

இங்ஙனமே மனித சமூகத்தின் நன்மைக்காகவே தங்கள் ஆயுள் முழுவதும் உழைத்த பிரான்சு தேசத்தானாகிய ஒபர்லீனையும், இங்கிலாந்து தேசத்தானாகிய வில்பர்போர்ஸையும் நாம் மறக்க முடியாது. ஒபர்லீன் என்பவன் ஸ்ட்ராஸ்பர்க் சர்வகலாசாலையில் தன் படிப்பை முடித்துக் கொண்டு ஏழு வருஷம் வரை, ஸ்ட்ராஸ்பர்க்கிலேயே, ஒரு வைத்தியன் வீட்டுப் பிள்ளைகளுக்குப் போதகாசிரியனாக இருந்தான். பிறகு கிறிஸ்தவ மதப் பிரசாரக னானான். இவன் வசித்த ஆல்சேஸ் ஜில்லா, கரம்பு நிலங்களைக் கொண்டதாயும், சரியான பாதைகள் இல்லாததாயும் இருந்தது. ஜனங்கள் ஏழைகளாயும் அறியாமையில் ஆழ்ந்து கிடந்தும் இருந்தார்கள். விவசாயத்தைப் பற்றி இவர்களுக்கு ஒன்றுமே தெரியாம லிருந்தது. சுமார் அறுபது ஆண்டுகள் ஒபர்லீன் இவர்களிடையே உழைத்தான். இவ்வுழைப்பினால் ஏற்பட்ட பயன் என்ன? நல்ல பாதைகள், வாராவதிகள், குடியிருக்க வசதியான வீடுகள் முதலியன கட்டப் பட்டன. பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப் பட்டன.

* * * *

கௌதம புத்தரைக் கவனிக்கலாம். அரச போகத்தைத் துறந்து ஏன் எங்கணும் அலைந்தார்? அரண்மனையி லிருந்தால், அவரால் என்னென்ன நன்மைகள் ஏற்படுமோ அதைவிட ஆயிரமடங்கு அதிகமான நன்மைகள், அவ்வரச போகத்தைத் துறந்த பிறகு அவரால் ஏற்

பட்டன. மனித சமூகத்தின் நன்மைக்காகவே, அவர் தன்னை அர்ப்பணஞ் செய்துவிட்டார்.

* * * *

ஆனால் இவைகள் எல்லாவற்றையும்விடக் கடவுளுக்குத் தன் அனைத்தையும் ஒப்புக்கொடுத்து விடுவதே சிறந்த தியாகமென்று எனக்குத் தோன்றுகிறது. மேலே கூறப்பட்ட ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குறையைக் கூறலாம். ஆனால் ஆண்டவனுக்கு நம்மை ஒப்புக்கொடுப்பதில் எவ்வித குறையும் கூறமுடியாது. அவன் சன்னிதானமாகிற பலி பீடத்திலேயே நம்மைத் தியாகம் செய்யவேண்டும். இதுவே சிறந்த தியாகம். ஆண்டவனிடத்தில் செலுத்தப்படும் அன்பு வரம்பில்லாதது. கடவுள் நமக்குச் செய்திருக்கும் எண்ணிறந்த உதவிகளுக்குக் கைம்மாறாக நாம் எதைத்தான் செய்யக்கூடாது ?

* * * *

சிலருடைய உருவமும், தேக வனப்பும் அமைப்பும் சேர்ந்து, பலரை அவர் வசமாக்கி விடுகின்றன. நெப்போலியன் போனபார்ட் இத்தகைய கம்பீர புருஷர்களுள் ஒருவன். இவன் வீரர்கள், இவனிடத்தில் பக்தி விசுவாசத்துடன் உண்மையாக உழைத்து வந்தார்கள் ; தங்கள் உயிரையே இவன் பொருட்டு அர்ப்பணம் செய்தார்கள். கோல்ட்ஸ்மித்தும், இத்தகைய வசீகர புருஷர்களில் ஒருவன். இவனிடத்தில் ஈடுபடாதார் எவரு மிலர்.

* * * *

மேற் கூறப்பட்ட பல வகைத் தியாகங்கள் யாவும் ஆண்டவன் பணிக்கு உட்பட்டனவே யாகும். கடவுள் பணி செய்வது பிற துறைகளில் உழைப்பதற்கு முரண்பா டாகாது. ஆண்டவன் வடிவா யிலங்கும் இவ்வுலகத்தில் செய்யப்படும் பணிகள்யாவும் அவன் பணியேயாம். சகோதரர்களே ! உதாரணங்கள் நமக்கு உபயோகப் படாவா ? இவைகளை நாம் முன்மாதிரியாகக் கொள்ளக் கூடாதா ? அவைகளை நாம் அநுபவத்தில் கொண்டுவர முயற்சி செய்யலாகாதா ? மேற் கூறப்பட்டவரிற் சிலருக்கு இருந்த வசதிகள் நமக்கு இல்லாமலிருக்கலாம். ஆனால் அவர்களுடைய தியாக உணர்ச்சியை நாம் கைக் கொள்வோமாக. அதனால் எண்ணரிய நன்மைகளைச் செய்து அழியாத செல்வாக்கைப் பெறலாம்.

பத்திராதிபர் குறிப்பு

தர்ம ஸ்தாபனச் சட்டம் :—இச்சட்டம் சென்னைச் சட்டசபையில் கனம் பனகால் ராஜாவால் கொண்டுவரப் பட்டு, நிறைவேறி, ராஜப் பிரதி நிதியின் அங்கீகாரமும் பெற்று விட்டது. அதற்காக ஏற்படப் போகும் பஞ்சாயத்துக்கு ஸ்ரீமான் (ஸர்) டி. சதாசிவய்யர் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார்: இது நன்றே. நமது அய்யரவர்கட்கு பிராமணர், பிராமணரல்லாதார் என்ற வேற்றுமை சற்றுமில்லை. சமரச ஞானி.

***

இச்சட்டத்தால் தர்ம ஸ்தாபனங்களுக்கு நன்மை ஏற்படுமென்று டாக்டர் வரதராஜலு நாயுடு, ஸ்ரீமான்கள், தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரி, நரசிம்மாச்சாரி, திரு. வி. கலியாண சுந்தர முதலியார், ஈ. வி. ராமசாமி நாயகர் முதலிய பல பிராமண, பிராமண ரல்லாத பிரமுகர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். காலஞ் சென்ற டாக்டர் மணி அய்யரும் ஆதரித்ததாகத் தெரிகிறது. ஸ்ரீமான் சத்திய மூர்த்தியை தலைமையாகக் கொண்ட சிலர், இச் சட்டம் "மதவுரிமை"யை அழித்து விட்டதாக ஆட்சேபிக்கிறார்கள்.

***

எது எப்படி யிருப்பினும், நமது தேவாலயங்கள், மடங்கள், தர்ம ஸ்தாபனங்கள் நன்கு கவனித்துப் பரிபாலிக்கப்படல் வேண்டும். பொது மக்கள் இவ்விஷயத்தில் சிந்தை செலுத்தல் அவசியம். எவ் விஷயத்தை உத்தேசித்து தர்மச் சொத்துகள் நமது முன்னோர்களால் வழங்கப்பட்டனவோ அவ்விஷயத்திற்காக அவை உபயோகமாக வில்லை. அநாவசிய—அநாரீக—அநியாயமான காரியங்களுக்காகப் பணத்தை வாரி இறைக்கிறார்கள்.

***

மடங்களுக்கு ஏராளமான சொத்துண்டு. வருட வருமானத்தி லிருந்து ஒரு பங்கு வித்தியாபி விர்த்திக்காக இதுவரை செலவிட்டிருந்தால் எத்தனை கல்லூரிகள், பாடசாலைகள் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும்? இன்று மடாதிபதிகளை ஒருவரும் குறை கூறாதிருப்பர ன்றோ?

***

மடாதிபதிகள் தர்ம சொத்து ரக்ஷகர்கள். கிரஹஸ்தர்களுக்கு வழிகாட்டியா யிருந்து, தர்மத்தையும் மதத்தையும் ரக்ஷித்து; தெய்வ பக்தியை வளர்த்து மெய்ஞ் ஞானத்தை வளர்க்க வேண்டியவர்கள் அவர்கள் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்யாமையால், அவர்களைச் சீர்திருத்த ஓர் சட்டம் ஏற்பட்டிருக்கிறது.

***

பத்திராதிபர் குறிப்பு

மடாதிபதிகளே! உங்களைத் தெய்வப் பிரதி நிதிகளாகத் தமிழ் நாடு பல்லாண்டுகளாக வணங்கி வந்திருக்கிறது. இனியும் வணங்கப் பின் வாங்காது. தர்மத்திற்காகச் சொத்துகளை உங்களிடம் ஒப்புவித்து விட்டு விண்ணுலகம் சென்றவர்களின் விருப்பப்படி நடக்க வேண்டியது உங்கள் கடமை யென்பதை மறந்து விட்டீர்கள்! அதனால் தான் சட்டம் வந்தது. எழுங்கள்! எழுங்கள்!! உண்மைத் தெய்வப் பிரதி நிதிகளாக விளங்குங்கள். இச்சட்டத்தால் சில உரிமைகளை இழந்துவிட நேரிட்டாலும் உங்கள் செய்கையால் ஜனங்களின் ஆதரவைப் பெற்று திரும்பவும் பெறலாம். உண்மைத் துறவிகளாக விளங்குங்கள். தேச நன்மையையும் தமிழ் மக்களின் முன்னேற்றத்தையுமே கருதுங்கள்.

***

பிராமண பிராமணரல்லாதார்:—இவ் விஷயமாய் நமது அபிப்ராயத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று சில நேயர்கள் விரும்புகிறார்கள். நமது "லக்ஷ்மி" ஓர் மாதப் பத்திரிகை. தமிழ் நாட்டிலுள்ள வாரப் பதிப்பு, தினசரிப் பத்திரிகைகளெல்லாம் எழுதி வருகின்றன. உலகிலுள்ள மானிடர்களுக்குள் ஒற்றுமையும், சமரசமும், சகோதர உணர்ச்சியும், உண்மையான அன்பும் வளர்ந்துவர வேண்டுமென்பதே எமது நோக்கம். நமது "லக்ஷ்மி" சகல சமயத்தாருக்கும், ஜாதியாருக்கும், பொதுவானது. அவளுடைய எல்லை தமிழ் நாடு மட்டு மல்ல; தமிழக மெங்கும்.

***

பிராமணர்—பிராமணரல்லாதார் விஷய மானது மிகக் குறுகிய நோக்க முடையது. அன்பினால் தான் சமரஸமும், சமத்துவமும், பெருமையும் ஏற்படும். உலகம் மிகப் பெரிது. சகல ஜீவப் பிராணிகளுக்கும் இவ்வுலகம் சொந்த மானது. பிறப்பினால் உயர்வு தாழ் வென்பதில்லை. சர்வ சக்திமானான கடவுள், மனிதர்களுக்குள் பிறப்பிலாவது, இறப்பிலாவது, எதாவது வித்தியாசம் ஏற்படுத்தி யிருக்கிறாரா? சகலரையும் சமமாகப் பாவிக்க வேண்டும். உண்மையான சகோதர உணர்ச்சி உண்டாக வேண்டும். அன்பே சிவம்; அன்பே மதம்; அன்பே வேற்றுமைகளைப் போக்கி ஒன்றுமையை வளர்க்க வல்லது! அன்பு வளர்ந்தால் இந்த வேற்றுமை தென்னாட்டை விட்டு நீங்கு மென்பது நிச்சயம்,

***

தமிழ்க் குருகுலம்:- -சேரமாதேவியிலுள்ள குரு குல விஷயமாய் இதுகாறும் ஒருவித முடிவும் ஏற்படாம லிருப்பது வருந்தத் தக்கதே. ஸ்ரீமான். வ. வெ. சு. ஐயரும் டாக்டர் வரதராஜுலு நாயுடும் ஒன்று பட்டு ஒருவித முடிவு உடனே செய்யவேண்டு மென்று நாம் பெரிதும் விரும்புகிறோம். இந்த வாதம், தென்னாட்டில் மட்டுமல்ல, சமுத்திரம் தாண்டி ஐக்கிய மலாய் நாடு

களிலும் பரவிப் புகைந்து வருவதைப் பார்க்க உண்மையான தமிழன் எவனும் வருந்தாமலிருக்க முடியாது. உடனே இத்தீயை அணைக்கத் தமிழ் நாட்டுத் தலைவர்கள் முயற்சி செய்வார்களாக. தமிழ்க் குருகுலம் விரிந்த நோக்கத்துடன் தமிழ் நாட்டில் சிறந்து விளங்க வேண்டுமென்பதே நமது விருப்பம்.

***

ஸ்திரீ மாஜிஸ்டிரேட்டுகள் :—சென்னை நகரத்திற்கு கௌரவ மாஜிஸ்ரேட்களாக மூன்று மாதர்கள் நியமிக்கப்பட்டதைச் சந்தோஷத்துடன் தெரிவிக்கிறோம். இவர்கள் ஸ்ரீமதி (லேடி) சதாசிவய்யர் ஸ்ரீமதி வி. பாண்டுரங்க ராவ், ஸ்ரீமதி ஸ்டான்போர்டு. சென்னையில் ஸ்திரீ நியாயாதிபதி நியமிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். அன்னார்களின் சித்திரப்படம் மற்றொரு பகுதியில் வெளியாயிருக்கிறது. நாமும் நமது நீதிபதித் தாய்மார்களுக்கு நல்வரவு கூறுகின்றோம்.

***

வைக்கம் ஸத்தியாக்ரஹம் :—வைக்கத்துப் பாதைகளில் தாழ்ந்த வகுப்பினரும் நடமாடுவதற்கு அநுமதி கொடுக்கவேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானம் திருவிதாங்கூர்ச் சட்டசபையில் ஒரு வோட்டுக் குறைவால் தோற்றுப்போய் விட்டது. தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சார்ந்த அங்கத்தினர் ஒருவர் இதற்கு பாதகமாய் கவர்ன்மெண்டுடன் வோட்டு கொடுத்தாராம்! வோட்டு எடுக்கும் சமயத்தில் இவர் தாழ்த்தப்பட்டு—அவமதிக்கப்படும் வகுப்பைச் சார்ந்தவரென்பதை மறந்து விட்டார் போலும். இவ்விஷயமாய் ஜாதி ஹிந்து ஜதா கால்நடையாக வைக்கத்திலிருந்து திருவனந்தபுரம் வந்து மகாராணியாருக்கு ஒரு மகஜர் சமர்ப்பித்ததை எவரும் மறந்திருக்க முடியாது. எனினும நமது அங்கத்தினர் மறந்தது விந்தையே! ஈழவர்கள் ஒரு கூட்டம் கூடி ஷெயாருடன் ஒத்துழையாமையைக் கைக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித் திருப்பதாகத் தெரிகிறது. இனி ஸத்தியாக்ரஹப் போராட்டம் பூரணமாய் ஆரம்பித்து, இக்கொடிய தீண்டாமையை ஒழிக்க முன் வர வேண்டும். ஆயிர வருஷ மானாலும் வைதீகப்பேய் பேச்சினால், நாட்டைவிட்டு ஒழியாது. ஸத்தியாக்ரஹமே ஒப்புயர்வற்ற மருந்து. தென்னாட்டில் ஒவ்வொரு குக்கிராமத்திலும் ஸத்தியாக்ரஹப் போர் ஆரம்பிக்கப் படல் வேண்டும். வெறும் பேச்சினாலும், கடற்கரைக் கூட்டத்தாலும் காரிய மாகாது. தீண்டாமையை ஒழித்து, வங்காளக்குடாக்கடலில் அமிழ்த்திவிட்டு, மற்றக் காங்கிரஸ் நிர்மாண வேலைகளைத் தலைவர்கள் கவனிப்பார்களாக. எல்லாக்காரியமும் செய்துகொண்டு போகலாமென்றால் ஒன்றும் ஒரு முடிவுக்கு வராது. ஒரு காரியத்தை ஒரே காலத்தில் செய்யவேண்டும், அதைச்சரிவர செய்து முடிக்க வேண்டுமென்பதை நாம் மறக்கக் கூடாது. காந்தியடிகளும், இவ்விஷயமாய் வைக்கத்திற்கு விஜயம் செய்வாரென்று எதிர் பார்க்கப் படுகிறது.

தமிழ்நாட்டு பிராமணரல்லாத காங்கிரஸ் தலைவர்களால் தான் இக்காரியம் அநுகூல மாகலாம். தமிழ் நாட்டு (பிபின்) பாலரான டாக்டர் நாயுடு அவர்களும் வைக்கம் வீரரான ஈ. வி. ராமசாமி நாயக்கரவர்களும் இவ்விஷயமாய்க் கவனித்த லவசியம்.

***

புத்த கயா :—கயா ஓர் புராதன நகரம். இது தான், இரண்டாயிர வருஷங்களுக்கு முன் "புத்த பகவான் தபஸ் செய்த புண்ணிய ஸ்தலம். இங்கு ஒரு அழகான ஆலய மிருக்கிறது. இதன் படத்தை முதல் பக்கத்தில் காணலாம். இந்த ஆலயம் புத்தமதம் க்ஷீணித்துவந்த காலமுதல், ஹிந்துக்கள் வசம் இருந்து வருகிறது. இப்பொழுது, இக்கோயிலை பௌத்தர்களிடம் ஒப்புவிக்கும்படி ஒரு இயக்கம் தோன்றியிருக்கிறது. அவர்கள் வசம் ஒப்புவித்து விட வேண்டுமென்பதை நாமும் விரும்புகிறோம்.

மதிப்புரை.

கண்ணகியின் சாபம் :—இது சிறந்த தமிழ் நூலாகிய சிலப்பதிகாரத்தை நாடக ரூபமாய் இனிய தமிழ் நடையில் அழகாய் எழுதப்பட்டது. பதிவிரதா சிரோமணியான கண்ணகியின் சரித்திரத்தை மனம்போனபடி யெல்லாம் நாடக மேடைகளில் நடிப்பது பதிவிரதா தர்மத்தையே ஏளனம் செய்வது போலாகும். இக்குறையை நீக்க ஸ்ரீமான் பி. எஸ். முருகேச முதலியாரவர்கள் முன்வந்து, இந்நூலை வெளியிட்டதற்கு நாம் மெச்சுகிறோம். தமிழ் நாட்டு நாடகாபிமானிகளும் முதலியாரவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இந்தச் சரித்திரத்தை இது காறும் முதனூலைத் (சிலப்பதிகாரத்தை) தழுவி நாடகமாக நடித்த கூட்டத்தார் ஒருவருமில்லை யென்று இந்நூலாசிரியர் கூறுகிறார். இளைஞர்களால் பொழுது போக்குக்காக நடத்தப்படும் சபைகளுக்கும், நாடகக் கம்பெனியார்களுக்கும் இந்நூல் இன்றியமையாதது. சென்னையிலுள்ள ஜெய விலாச சபையார் இந்நாடகத்தைச் சமீபத்தில் நடிக்கப்போவதாய்த் தெரிகிறது. இதன் விலை அணா எட்டே. வேண்டுவோர் மானேஜர், தபாற் பெட்டி 99, சென்னை என்று எழுதிக் கொள்ளவும்.

குறள் நானூறு:—தமிழ் நாட்டில் "திருக்குறளை" அறியாதவர்கள் இராரென்பது திண்ணம். திருக்குறள் புராதன நூலாகியும் எக்காலத்திற்கும் எல்லா மதத்தாருக்கும் பொருத்த முடைய விஷயங்களும், தத்துவங்களும் மலிந்திருக்கின்றன. திருக்குறளிலிருந்து நானூறு சிறந்த குறள்களைப் பொறுக்கி எடுத்துத் தெளிவான உரை,

அரும்பதவுரை, இங்கிலீஷ் மொழி பெயர்ப்புகளுடன் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. உயர்ந்த பதிப்பு—பாக்கட் சயிஸ். ஆங்கிலம் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவர் கையிலும் இந்தத் தமிழ் வேதம் கட்டாயமிருத்தல் அவசியம். விலை அணா நான்கே.

பஞ்சாமிர்தம் ஆபீஸ்,
மைலாப்பூர், சென்னை.

ஞான ரகசிய சிந்தாமணி:—இது ஸ்ரீமான் ராம சுப்பிரமணிய நாவலரவர்களால் எழுதப்பட்டது. வேதாந்த நூல்களை ஆராய்ச்சி செய்ய விரும்புவோருக்குப் பயன் படுமாறு எளிய நடையில் முழுத்தத்துவத்தையும் திரட்டி வெளியிடப் பட்டிருக்கிறது. தமிழறிவுடையோர் ஒவ்வொருவரும் இதனை வாங்கிப் படிக்க விரும்புகிறோம். நல்ல பதிப்பு. முத்துப்போன்ற எழுத்து. விலை அணா எட்டே. வேண்டுவோர் பின்வரும் விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

ஸ்ரீமான் ராமசுப்பிரமணிய நாவலர்,
பத்மநாபபுரம், (திருவிதாங்கூர்.)

திருப்போசை வெண்பா:—ஸ்ரீமான் கார்த்திகேயப் புலவர் இயற்றியது. விலை அணா நான்கு. கிடைக்குமிடம் மு. சபாரத்தினம் ஐயர் அவர்கள், யாழ்ப்பாணம்.

"வஞ்சி கேசரி":—இது ஒரு வாரப் பத்திரிகை. திருவனந்தபுரத்திலிருந்து 5-2-25 முதல் வெளி வருகிறது. இதன் பத்திராதிபர் பண்டிதர் எஸ். முத்துசுவாமிப் பிள்ளையாவார். திருவிதாங்கூர் சமஸ்தானத்திலுள்ள தமிழர்களுக்காக உழைக்கக்கூடிய ஓர் பத்திரிகை அவசிய மென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? நாலைந்து வருஷங்களாக வஞ்சி நாட்டுத் தமிழர்களுக்காகப் பாடுபட்டு வந்த "பொது நலம்" போதுமான உதவி யில்லாமலும், தமிழர்களிடம் பத்திரிகாபிமான மில்லாமலும் சமீபத்தில் திடீரென மறைந்தது. இச்சமயத்தில் "கேசரி" தோன்றியது சாலவும் நன்றே. ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளிலுள்ள சிறு குக்கிராமங்களில் கூட பல பத்திரிகைகள் செவ்வனே நடை பெற்று வருகின்றது. நம் நாட்டிலோ ராஜதானிப் பட்டணங்களில் வெளியிடும் தினசரிப் பத்திரிகைகளுக்குக் கூட சந்தாதார்கள் ஐயாயிரத்திற்கு மேலில்லை. நமது "கேசரி"யைத் தமிழர்கள் முக்கியமாய் வஞ்சி நாட்டுத் தமிழர்கள் ஆதரிக்கப் பின் வாங்க மாட்டார்களென்று நம்புகிறோம். "கேசரி"யின் கீர்த்தியும், பெருக்கும் வஞ்சி நாட்டுத் தமிழ் மக்கள் கையில் தானிருக்கிற தென்பதை உணர்வார்களாக. நாமும் "கேசரி"க்கு நல்வரவு கூறுகிறோம்.

உலகப் போக்கு

உலகப் பிரயாணம் (உலகத்திலே பெரிய கப்பல்.)

இம்மகா பெரிய கப்பலின் மொத்த நிறை 27,200 டன் ; நீளம் 697 அடி. இக்கப்பலுக்கு மூன்று பெரிய தட்டுகள் உண்டு. இவ்வுலகப்பிரயாணத்தின் மகாத்மியத்தைத் தெரிந்து கொள்ள நியூயார்க்கில் சென்ற டிசம்பர் 4-ந் தேதி கப்பல் பிரயாண ஆரம்பத்தில் எடுத்துக் கொண்ட உணவுப் பொருள் களைக் கவனிப்பது அவசியம். மாட்டிறைச்சி போந்து 42,000. கன்றிறைச்சி போந்து 7,000; மாட்டு வால்கள் 3,000. மட்டிகள் 50,000 ; கோழிக் குஞ்சுகள் 17,000. வாத்துகள் 3,7000; வான்கோழி 800 ; காட்டுக் கோழிகள் 1,000 ; கவுதாரிகள் 200 ; புறுக்குஞ்சுகள் 18,000 ; காடைகள் 90,000 ; தித்திப்பு ரொட்டிகள் 5,400 ; உருளைக் கிழங்கு போந்து 120,000 ; பால் காலன் 6,500 ; பால் ஆடை காலன் 295 ; ஐஸ்கிரீம் காலன் 1,625 ; சீனிபோந்து 34,480 ; தேயிலை போந்து 2,750 ; காப்பி போந்து 4,600 ; ஜாம் போந்து 4,446 ; சிச்சிலிப்பாக்கு போந்து 2,100 ; நீர்விட்டான் முளை டின்கள் 1,500 பட்டாணிக் கடலை டின்கள் 2,500 ; அவரை டின்கள் 1,000 ; பசளைக் கீரை டின்கள் 1,000 ; பிஸ்கோத்து டின்கள் 2,628 ; மாவு பீப்பாய்கள் 500 ; பன்றி யிறைச்சி வற்றல் போந்து 17,000 ; முட்டைகள் 180,000 ; மதுபான வகையராக்கள் சொல்லப்படவில்லை. (இவ்வளவும் போதுமா !) கப்பல் சேரும் இடங்களிலெல்லாம் காணுமட்டும் உணவுப் பொருள் சேகரித்துக் கொள்ளப்படும்.

இந்தக் கப்பலில் நீந்தி விளையாடு வதற்கு இரண்டு குளங்கள் உண்டு, எந்தக்கப்பலிலும் இதுவரையில் இவ்வளவு பெரிய குளங்கள் வைக்கப்படவில்லை. மூன்று சிற்றுண்டிச் ,சாலைகளும், இரண்டு தேகாப்பியாசக் கூடங்களும் டென்னிஸ், கால்பந்து முதலிய விளையாட்டுகளுக்குப் போதிய வசதிகளும் ஏராளமா யிருக்கின்றன.

இக்கப்பல் தற்சமயம் பம்பாய்த் துறைமுகத்திற்கு வந்திருக்கிறது. சீக்கிரத்தில் கொழும்புத் துறைமுகத்திற்கு வரலாம்.

பிரிட்டனில் கலியாணங்கள்.

1923-ம் வருட இறுதியில் பிரிட்டனில் ஆண்களைக் காட்டிலும் பெண்மக்கள் தொகை 19,17,926க்கு அதிகமாய் இருப்பதாகக் கணக்கிடப்பட்டது. இது 1923-ம் வருடக்கணக்கைக் காட்டிலும் பெண்களின் தொகை 20,872க்கு அதிகமாகி யுள்ளதென்று காட்டுகிறது. ஜனத்தொகைக் கணக்கு அதிகாரியின் கணக்கின்படி 1923-ம் வருடத்தில் கிரேட்பிரிட்டனின் ஜனத்தொகை 47,747,100 என்றும் இதில் 24,832,513 மாதர்கள் என்றும் தெரிகின்றது. 1923-ம் வருடத்தில் 292,408 கலியாணங்கள் இங்கிலாந்திலும் வேல்ஸிலும்

நடைபெற்றன. இக்கலியாணங்களில் 1241 மாப்பிள்ளைகள் 21 வயதுக்குக் குறைந்தவர்களா யிருந்தனர். ஒரு மாப்பிள்ளை தமது வயது 93 என்று குறிப்பிட்டார். மிகவும் சிறு வயதில் கலியாணம் செய்து கொண்டவர்கள் 19 வயது ஆடவனொருவனும் 15 வய ச் சிறுமி ஒருத்தியுமாகும். வயதான 26-பெண்களும் கலியாணஞ் செய்துகொண்டார்கள். இவர்களில் ஒருத்தி 12 வயதான ஆடவனை மணந்துகொண்டாள். 36 வயதான மாது ஒருத்தி 70 வயதான ஆடவனை மணந்துகொண்டாள்.

ஒரு தாய்க்கு 23 பிள்ளைகள்.

லண்டனிலுள்ள குயின் சார்லட் ஆஸ்பத்திரியில் மிஸஸ் பேக்கர் என்னும் ஒரு மாது தனது 45-வது வயதில் 23-வது குழந்தையை ஈன்றாள். இதில் விசேஷம் என்னவென்றால் வருடத்துக்கு ஒவ்வொரு குழந்தையாக இதே ஆஸ்பத்திரியின் பிரசவ கூடத்தில் பெரும்பாலும் ஒரே யிடத்தில் குழந்தைகளைப் பிரசவித்ததுதான்.

உலகத்திலுள்ள யூதர்களின் தொகை.

"ஒப்சர்வேற்றர் ரோமானோ" என்னும் பத்திரிகையிலே வெளிவந்துள்ள புதியவோர் கணக்கின்படி உலகத்திலே எல்லா பாகத்திலும் 1 கோடியே 57 லட்சத்து 83 ஆயிரத்து 947 யூதர்கள் இருக்கின்றார்கள் எனத் தெரியவருகிறது. இவர்களுள் ஐரோப்பாவிலே வசிக்கும் யூதர் 1 கோடியே 15 லட்சத்து 74-ஆயிரத்து 868 பேர் அமெரிக்காவிலே வசிக்கும் யூதர் 34 லட்சத்து 96 ஆயிரத்து 225 பேர் ஏனைய பேரெல்லாம் ஏனைய கண்டங்களிலே சிதறுண்டிருக்கின்றார்கள்.

இந்தியாவின் ஜனத்தொகை.

ஐந்து வருஷத்தில் ஐந்து கோடி அதிகரித்துவிட்டதாக இந்திய ஜனசங்கியைக் கமிஷனரான மிஸ்டர் ஜே. டி. மார்ஷன் ஒரு கூட்டமொன்றில் பேசியிருக்கிறார். இதே மாதிரி பெரிகிக் கொண்டுபோனால் இன்னும் பத்து வருஷத்தில் 2½க் கோடி ஜனங்கள் அதிகமாய் விடுமாம்.

அமெரிக்காவின் ஆஸ்தி.

சென்ஸஸ் கணக்குப் பரிசோதகர்களின் திடப் பிரகாரம் அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் ஆஸ்தி 1922-ஸ்ரீ டிசம்பர்மீ 31 திகதி S. 320,000,803,862. அதாவது 32000 கோடியே 803,862 அமெரிக்கா டாலர்களாகும். ரூபாய் கணக்கில் 100 ஆயிரம் கோடிரூபாயாகும். 1912-ம் வருஷத்தில் மதிப்பிட்ட ஆஸ்தியைக் காட்டிலும் 100-க்கு 72 [பர்சென்டேக்கு] பங்குக்கு மேல் அதிகப்பட்டிருக்கிறது. இந்த மதிப்பு எல்லாவித சொத்துக்களையும் கணக்கிட்டிருக்கிறது. சரியான எஸ்டேட்டுகள், ரயில்பாதைகள், இயந்திரங்கள், டெலிபோன்கள், தந்திகள், பொதுஸ்தாபனங்கள், சொந்த சொத்துக்கள் எல்லாம் சேர்ந்தன.

சுத்தமான கதர் வேஷ்டிகள்

அழகான கரைகள் போட்டது

4 மு × 52" ஜோடி 1-க்கு ரூ. 3-2

4½ மு × 52" ஜோடி 1-க்கு ரூ. 3-8

5 மு × 52" ஜோடி 1-க்கு ரூ. 4.

லக்ஷ்மி ஸ்டோர்ஸ்,

தபாற் பெட்டி 222, சென்னை.

10-ரூபாய் பெருமான 80-மிகவும் உபயோகமுள்ள சாமான்கள் அடக்கம் செய்யப் பட்ட வர்த்தக அதிர்ஷ்ட பெட்டியின் விலை ரூபாய் மூன்றுதான்.

சாமான்களின் விபரம்—22 காரட் ரோல்ட் கோல்ட் இமிடேஷன் வைரமோதிரங்கள் 2. ஷை முழு செட் ஷர்ட் பொத்தான்கள், அதேமாதிரி கல்லிழைத்த சேப்டி புரூச் 1, உயர்ந்த பேனாகட்டைகள் 2. பென்சல்கள் 2, ஒரு டஜன் நல்ல நிப்புகள், ஜெர்மன் வெள்ளியால் தயாரிக்கப் பட்ட 14 கார்ட் நிப்புள்ள பவுன்டன் பேனா 1. இங்கிமாத்திரைகள் 12. நல்ல பேனா கத்தி 1. கத்திரிக்கோல் 1. கண்ணாடி 1. இங்கி புட்டி 1. சேப்டி பின்னுகள் 12. லீலா விநோத போட்டோ படங்கள் 10. நல்ல ஸ்பூன் 1. ஊசிகள் 12. சிறிய சிப்பிப் பொத்தான்கள் 12 முதயலின அடங்கிய அழகிய விலையுயர்த பெட்டியுடன் விலை ரூபாய் 3-0-0 தபால் சிலவு அணா 8-தனி. சிலநாளைக்கு மாத்திரம் மாதிரிக்காக அனுப்பப்படும்.

விலாசம் :—**ஓ. எம் ஸி. கம்பெனி,**

ஜெர்மன் ஏஜன்டுகள் 23-வது பீட் மதராஸ்.

ஜவாஹிருல் புர்:கான்

جَوَاهِرُالفُرْقَانْ فِي تَرْجَمَةِ القُرَانْ

(குர் ஆன் ஷரீபின் தமிழ் மொழி பெயர்ப்பும் அதன் விரிவான வியாக்கியானமும் ஒருங்கே கூடியது.)

11-அங்குல நீளமும் 8-அங்குல அகலமும் கொண்ட 160 பெரிய பக்கங்களுள்ள முதல் வெளியீட்டின் கிரயம் ரூ. 1-8-0. இதுவரை 750 பிரதிகள் வெளியாய்விட்டன. இன்னும் சில பிரதிகளே எஞ்சியிருக்கின்றன. பெரிய நூல்! அரிய வியாக்கியானம்! இன்றே எழுதுங்கள்!! ஏமாந்துபோகவேண்டாம்!!!

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ், தபாற்பெட்டி 15, சென்னை.

எ. எஸ். சுகந்த

மூக்குத் தூள்.

இந்த சுகந்த மூக்குத்தூள் ஒவ்வொருவருக்கும் முக்கிய மானது. இதில் ஒரு சிட்டிகை யெடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக யின்பமான சுகந்த வாசனையைத்தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96-வியாதிகளை கண்டிக்கும். இந்த தூள் எக்காலமும் கெடாது. எந்த கம்பெனிகளிலாவது மருந்து ஷாப்புகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கை கவனித்து வாங்கவும்.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு

106, சவுக்கார் பேட்டை,

தபால் பெட்டி நெ. **1201**, மதறாஸ்.

நாகராஜு படை மருந்து

இந்த தைலம் எல்லாவித அஸாத்தியமான கடியைப் போக்கக் கூடியது அநேக பிரசித்த மருந்துகளால் தயார் செய்யப் பட்டு மிகவும் பிரசித்தி பெற்றது அநேக வருஷங்களாக இருக்கும் படை சிறங்கு சொரி சிறங்கு யானைச் சிறங்கு முதலிய சர்ம வியாதிகளை இரண்டு வேளையில் குணப்படுத்தி சர்மத்தை சுத்தம் செய்யும் இதை தேய்ப்பதால் எரிச்சல் உண்டாகாது சர்மம் கருக்காது புண்ணாகாது.

1 டின் 1-க்கு 6 அணா.

3 ,, ,, 1 ரூபா.

நாகராஜு அண்டு கோ,

பெரம்பூர் பேரெக்ஸ், வேப்பேரி போஸ்டு,

சூளை சென்னை.

டாக்டர் ஜீ. பி. என்பவரின்

சுகந்த மூக்குத்தூள்

ரிஜிஸ்டெர்ட்



டிரேட்மார்க்

இதில் விலையுயர்ந்த பல வாசனை சரக்குகள் சேர்ந்துள்ளன,

இதை உபயோகித்தால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைக் குத்தல், உள்பட கண்டத்திற்கு மேற் பட்ட சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. கெடுதியென்பது யாதொன்றும் நேரவே நேராது. சாதா மூக்குத்தூளை 10, 15 தடவை உபயோகிப்பதை விட இந்தத் தூளை ஒரேயொரு தடவை உபயோகிக்கலாம். காலணு சாதா மூக்குத்தூளுடன் இந்தத்தூள் இரண்டொரு சிட்டிக்கை மாத்திரம் கலந்தால் தூள் முழுதும் சுகந்தமாய் விடுவதுமல்லாமல் தன் சுபாவ குணமும், காரமும் மாறவே மாறுது இதைப்பற்றி அநேக நற்சாட்சிப் பத்திரங்களும், தங்கப் பதக்க பரிசுகளும் கிடைக்கப் பெற்றிருக்கின்றோம். மொத்த வியாபாரிகளுக்கு விலை சகாயம் செய்யப் படும்.

புட்டி ஒன்றுக்கு விலை அணு 4.

தந்தி விலாசம் :—“ மெடிகேட் ”

குரு பசவா அண்டு கம்பெனி லிமிடெட்,

தபாற் பெட்டி 510, பார்க் டவுன், சென்னை.

உங்கள் உருவப்படம்

உங்கள் சிறிய போட்டோவை அனுப்புங்கள்.

ஆச்சரியபடும்வண்ணமாய் பெரிதாகத் தயாரித்து அனுப்புவோம்.

உயர்ந்த வேலைப்பாடு, குறைந்த சார்ஜு, அழகிய பார்டர்
அட்டை உள்பட 15'' × 12'' புரோமைட் ரூ. 5.
வர்ணங்களுடன் கூடியது ரூ. 7-8.
ரூ. 2 அட்வான்ஸுடன் ஆர்டர் அனுப்பவும்.

சர்மா சகோதரர், - - வேப்பேரி, சென்னை.

இமிடேஷன் வைாக்கல் போத்தான் நான்து இனும்.

குடும்பாஞ்சனம்

தலைவலி, கைகால் பிடிப்புகள், ஜலதோஷம், வீக்கம்
மற்ற எல்லா வியாதிகளுக்கும் கைகொண்ட மருந்து.
எல்லா விடங்களிலும் கிடைக்கும்
விலை புட்டி 1-க்கு அணா. 7 V. P. Extra.

குடும்ப ஔஷதம்.

எல்லாவித சிரங்கு, சொரி, கால் விரல்களில் உண்டாகும் சேத்துப்புண்ணுகள் இதுகளுக்கு ரொம்பவும் உபயோகமானது. விலை புட்டி 1-க்கு அணா. 8.

படை மருந்து.

எச்சை படை, மேக படை, மற்ற எல்லா படைகளுக்கும் உபயோகமானது. விலை புட்டி 1-க்கு அணா. 8.

AMARAVATHY AGENCY, P. T., MADRAS.
அமராவதி ஏஜன்ஸி, **P. T., MADRAS.**

தென்னாட்டின் தலைமை பெற்றுப் பிரகாசிக்கும் தமிழ் நாவல் எது?

தலைவாங்கி — — அபூர்வசிந்தாமணி!

இது யாவராலும் நன்கு மதிக்கப் பெற்ற ஓர் அற்புதமான செந்தமிழ் நாவல். இதில் ஸ்திரீ, புருஷ, பாலக, பாலகிகளுக்கு இன்றியமையா அநேக அதியற்புத விஷயங்களும், பல நீதிகளும் ஒருங்கே யமைந்திருக்கின்றன. படிக்கப் படிக்கப் பரமானந்தத்தையும் கேட்கக் கேட்க இன்பத்தையும் தரும்படி மிகத் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றது. கதாநாயகி தன் ஆசான் உபதேசித்த மூன்று கேள்விகளினால் தொளாயிரத்து தொண்ணூற் றொம்பது அரசகுமாரர்களைக் கொன்று வீரப்பிரதாபத்துட னிருக்கையில், மெய்யழக னென்னும் ஓர் அரசிளங்குமரன் அவ் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிந்து கொள்ளப் பல தேயங்கள் சென்று ஆங்காங்கு நூனக்குற்ற இடையூறுகளினின்றும் நீங்கிக் கடைசியில் அபூர்வ சிந்தாமணியை ஜெயிப்பது மிகவும் விந்தையாயிருக்கும். தற்காலத்திய விருப்பத்திற் கேற்பச் சில அலங்கார நடைகளும் இதில் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இதுவரையில் 15 பதிப்புகள் அச்சிடப்பட்டு செலவழிந்திருப்பதே இதன் மேன்மைக் கோர் அத்தாட்சியாகும். இதன் விலை ரூபா. 1 0 0

(28-2-25)க்குள் ஷை புத்தகம் தருவிப்போருக்கு எமது கம்பெனி 1925-ம் வருடத்திய காலண்டர் பஞ்சாங்கம் ஒன்று இலவசமாய் அனுப்பப்படும்.

எமது விலாசம் :—

ஸ்ரீ பாரதி புத்தக சாலை,

சூளை போஸ்ட், சென்னை.

புத்தகத்திலும் ஓர் புதுமை!

அதிர்ஷ்டமுள்ளோர்க்கே இந்நூல்

உலக இரகஸ்யம்.

VALE ADVERTISING SERVICE

VALE ADVERTISING SERVICE

அறிவு புகட்டும் படங்கள், அதி ரமணியமான 150 விஷயங்கள், 350 பக்கங்கள் கொண்ட புதினக் களஞ்சியம். விலையோ ஒரே ரூபாய். வெகு மலிவு. போட்டோ எடுக்கும் விதமும் ஸ்பிரிட் போட்டோகிருபியும் விளக்கமாய்ச் சொல்லியிருக்கிறது.

உனக்கு வேண்டியதும் நீ பார்க்க வேண்டுமென்று அநேக நாள் தேடிய சாஸ்திரமும் இதுவே.

	ரூ.	அ.		ரூ.	அ.
சரீரமர்ம சாஸ்திரம்	1	0	இல்லர் இன்ப ரகஸ்ய விளக்கம்	0	8
ரதிமதன சிங்கார ரகஸ்யம்	1	0	காதற்கவி வெண்பா	0	4
தலையணை மந்திரோபதேசம்	1	0	இருகொலை இரகஸ்யம்	0	6
			வனிதையின் உபாயம்	0	6
சத்திய காமன்	0	12	தங்கமாளிகை ரகஸ்யம்	0	12
காதலும் மையலும்	1	8	வாழாமுடி	0	12
காதலா கருணையா	0	14	விமலன்	0	4
மாயசுந்தரி	0	12	பாரிஸ் காதல் போட்டோக்கள் நெ. 1. டஜன்	4	8

கேட்லாக் வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

5-ரூபாய்க்கு குறையாது புஸ்தகம் வாங்கினால் 8 அணா விலையுள்ள காலண்டர் இனாம். உடனே ஆர்டர் கொடுக்கவும்.

லக்ஷ்மணபிரசாத் அண்டு கோ,

(டிபார்ட்மெண்ட் எல். எம்.) புதுச்சேரி.

உங்களுக்கு எது வேண்டும்?

நேர்த்தியான தங்க கிலிட் கையி லணியும் கடியாரம்.



இது வெகு அருமையாய் அமைக்கப்பெற்ற கடியாரம். இது வெகு உறுதியானது. நீடித்து உழைப்பது. சரியான மணி நேரத்தைக் காண்பிக்கக் கூடியது. இவ்வித நம்பிக்கையானதும், வாங்குவோருக்கு மனத்திருப்தியைக் கொடுப்பது மாகிய கடியாரம், இந்தக் குறைந்த விலைக்கு உலகில் அகப்படுவது அரிது. இதன் டயலில் ரேடியம் பதித்திருப்பதால், இருட்டிலும் பகலைப்போலவே தெளிவாய் மணி பார்க்கக்கூடும். மூன்று வருட உத்தரவாதம். ரவுண்ட் ஷேப் தங்க டையல் கடியாரம் ரூ. 7. சாதா அலாரம் டைம்பீஸ் ரூ. 5

உயர்ந்த "பீ" டைம்பீஸ்.



பெயர்பெற்ற கம்பெனியாரால் செய்யப்பட்டு வந்திருக்கிறது. இதற்கு சமானம் கிடையாது. விலை குறைக்கப்பட்டது.

மூந்துங்கள்! மூந்துங்கள்!!

"பீ" டைம்பீஸ் விலை ரூ. 2-8.

காலத்திற்குச் சரியான மணியைக் காட்டும்.

விலாசம்:—வீ. எஸ். வாச் கம்பனி,
தபால் பெட்டி 105, மதராஸ்.

தங்கடைல் உள்ள விசித்திர பட்டைகள் தீர்த்த கீல் வளையமுள்ள ரிஸ்லெட் கெடியாரங்கள்.

வெகு ஆச்சரியம்! வெகு நயம்!! முந்துங்கள்!!!

இக்கெடியாரத்தில் மணிகாட்டும் டைலின் பேரில் பளப்பளப்பான (பொன்) தங்ககில்ட் உள்ளது. எத்தனை வருஷமானாலும் டைலின் பேரில் உள்ள தங்கநிரம் போகாமலே இருக்கும். கெடியாரத்தின் சுற்றியுள்ள பிசிலின்மேல் ஆச்சரியப்படக் கூடிய பலவிதமான விசித்திர பட்டைகள் தீர்த்துள்ளது. இருபக்கமும் உள்ள வளையங்கள் இரண்டும் எப்பக்கமும் திருப்பக்கூடிய அழிகிய அற்புதமான கீல் வளையங்களுள்ளது. இதன் பெருமை வாங்குகிறவர்களுத்தான் தெரியும். இதைப்பார்க்கும் ஒவ்வொருவரும் இதை வாங்காம லிருக்கமாட்டார்கள். கெடியாரம் வெகுகாலம் போகும்படி உயர்தர சாமான்களால் செய்யப்பட்டது. சரியான காலமும் காட்டக் கூடியது. ஆயிரக்கணக்காய் செலவாகிறது. சீக்கிரம் முந்திக் கொள்ளுங்கள்- இதில் பலமாதிரியான தினுசுகள் உண்டு. நெ. தங்கடைலும் பொன்கில்ட் விசித்திரபட்டைகள் தீர்த்த கீல் வளையமுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 1-க்கு 8—8—0.

இன்னும் அநேக விதமான கெடியாரங்களும் கிடைக்கும். பெரிய கேட்லாக்கு வேண்டியவர்களுக்கு அனுப்பப்படும்.

விலாசம்:—யூனிவர்சல் வாட்ச் கம்பேனி,
நே 47-48, ராட்டன் பஜார் ரோட், மதராஸ்

எந்த ஜாதியாருக்கும், எந்த நாட்டாருக்கும், எவ்
வயதினருக்கும், எப்பாலாருக்கும், எக்
காலத்திற்கும், எவ்விடத்திற்கும்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

உயர்ந்த மருந்தென்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள்; மருத்துவர்கள் மதிக்கிறார்கள்; வைத்தியர்கள் புகழ்கிறார்கள். நீங்கள் உபயோகித்துப் பாருங்கள். 16 நாளைக்கு உபயோகிக்கக்கூடிய 32 மாத்திரைகள் விலை ரூபாய் ஒன்றே. ஐந்து டப்பிகள்: நாலு ரூபாய்க்குக் கிடைக்கும்.

வைத்திய சாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, மதராஸ்.

அச்சுவேலைகள்

வேகு அழகாகவும் சுத்தமாகவும்
செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிடவேண்டிய விவரங்களுக்கு
எழுதவும்.

மானேஜர்:—வேஸ்ட் அண்டு கோ.,

மவுண்ட் ரோட் : : சென்னை.

அகஸ்தியர் ஆபிஸ்

1925.] ஒலூத்திய காலண்டர் [1925.

பிரதிதினம் ஒருநாள் கிழிக்கக்கூடியது

விலை அணு 6.

தபால் லசெவு வேறு.

துரைசாமி & கம்பெனி,

58, பெரியண்ணமுதலி'தெருவு,

மிண்ட் போஸ்ட்,

மதராஸ்.

சகலமான மோட்டார் சாமான்கள் கிடைக்குமிடம்!

எங்களிடம் விளக்குகள், டன்லப், மிச்சலின், காண்டினன்டல், குட்ரிஜ் டைர்கள், எண்ணைகள் மற்றும் மோட்டாருக்கு வேண்டிய சகல சாமான்களும் சகாய விலைக்குக் கிடைக்கும். ஒரு முறை பரிக்ஷித்தால் உண்மை விளங்கும்.

THE MOTOR TRADING CO.,

Importers of Motor & Cycle Accessories,

24, Errabalu Chetty Street, - - MADRAS.

18-காரட் கோல்ட் பிளேட் கேஸ் :பொன்கில்ட் டயல்

ரவுண்ட் ஷேப் ரிஸ்லேட் கெடியாரம்.

பக்கத்தில் கீல்வளைவுமுள்ள பொன்கில்ட் இதனுடைய டயல்களில் பார்ப்பவர்களுக்கு வெகு ஆச்சரியத்தையுண்டு பண்ணும், இது பார்வைக்கு ரூ. 100 அல்லது அதற்கு மேலும் மதிப் புள்ளதாய் தோன்றும். உயர்ந்த சாமான்களால் செய்தது. சரியானகாலம் காட்டும். நெடுங்காலம் போகும். ஆண் பெண் இருபாலர்களும் உபயோகிக்கலாம். குறைந்தவிலை ரூபா 6-8. உலகப்பிரசத்தி பெற்ற "ரீ" டயம் பீஸ் ரூ 2-4. பாக்கிட் சிகார்லைட் ரூ. 1.

கிங் வாச் டிபோ, தூளை போஸ்ட், மதராஸ்.

சர்வபடை சங்காரன்

எல்லா வித நாள்பட்ட படைகளையும், சொறி, சிரங்குகளையும் காயப் புண்களையும் சர்ம ரோகங்களையும் உடனே போக்கி குணத்தைத் தரும். விலை அணா 10.

எஸ். ராதா கம்பெனி, 246, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

உடைந்த கண்ணாடிகளை ஒட்டவைக்கும்
சுதேசித் திராவகம்

உங்களுடைய ஒரு ரூபாய் உங்களுக்கு அநேக ரூபாய்களைக் கொண்டு வரும். இது வரையிலும் வெளிவராதது. வெகு அபூர்வமாகவும் நூதனமாகவும் கண்டு பிடிக்கப்பட்டது. எவ்விதமான உடைந்த கண்ணாடிச் சாமான்களையும் ஒட்டவைப்பதில் சிறந்தது. நூற்றுக் கதிகமான உடைந்த சாமான்களை ஒட்ட வைப்பதற்குப் போதுமான ஒரு அவுன்சு புட்டி விலை ரூபாய் ஒன்றே.

சித்தகல்ப மகரத்வஜம்

அகில இந்திய ஆயுர்வேத மகாசபைகளில் 1919, 1920, 1921, 1922, 1923, 1924-ம் வருஷங்களில் நற்சாக்ஷிப் பத்திரங்களும், தங்க மெடல்களும் பெற்றது. என்னாட் பட்டதாயினும் எப்படிப் பட்டதாயினும் எல்லாவித வியாதிகளையும் போக்கக்கூடிய ஓர் அபூர்வமான அமிர்தம்.

ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது.

60 மாத்திரைகள் கொண்ட பட்டி ஒன்று ரூ. 10 தான்.

பர்மாவுக்கு சோல் ஏஜெண்டுகள் :—

ஜி. ஜி. அண்டு ஸன்ஸ்,
60, மேர்ச்சண்டு வீதி, ரங்கூன்.

புதுமாதிரியான பெண்டுலம்
டயம்பீஸ்கள்

இது வெகு அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும். ஒருநாளைக் கொருமுறை சங்கிலியை இழுத்துக் குண்டை மேலுக்கு ஏற்றி விடவேண்டியது சரியான காலம் காட்டும். இதன் விலை ரூ 3-8.

உலகப் பிரசித்திப் பெற்ற "பீ" டைம்பீஸ் ரூ. 2-8.

கோள்ட் பிளேட் கேஸ் கையில் கட்டும் ரிஸ்லெட் கெடியாரம் இரவில் மணிபார்க்க ரேடியம் உள்ளது ரூ. 7.

நீயுட்டன் அண்டு கம்பெனி,
வேப்பேரி போஸ்ட், மதராஸ்.

எங்களிடம் எலக்டிரிக் ரகங்கள் 1000 கணக்காய் இருக்கின்றன.

30 நாளைக்கு விலை குறைவு.

ஷர்டில் வெள்ளி பொத்தான் மேல் பல்பு எரியும். இதன் காந்தி கண்ணை கூசும் 25 அடி வரை தெரியும். படிக்கலாம். அவ்வளவு ஜோதி உள்ள பல்பு பொத்தான் கேஸ்பாட்டிரி சேர்ந்தது ரூ. **2.**



கோட் பட்டன் ஹோலில் போட்டு விட்டு நடக்கலாம். மேற் சொல்லியபடி வெளிச்சம் உண்டாகும். எல்லாம் சேர்த்து பட்டன் ஹோல் லைட் ரூ. **2.**

புஸ்பவிளக்கு என்றால் பெண்கள் ஜடையில், மார்பில், ஆண்மக்கள் கோட், டை, மார்பட்டை இவைகளில் தரித்துவிட்டால் மேற்சொல்லிய ஜோதி புஷ்பம் உள்புரம் காட்டும். பார்ப்பவர் புஷ்பத்தில் எப்படி எலக்டிரிக் வந்தது என்று ஆச்சர்ய படுவார்கள். ரோஜா, சாமந்தி, மல்லிகை, அலரி, கஸ்தூரி புஷ்பம் எது தேவையானாலும் எலக்டிரிக் ஓயர் புஷ்பம் பாட்ரி உள்பட ரூ.**2.** ஸ்பிரிங் டாப் சிகார் விளக்கு ரூ.**1-8.**

சாதாரமானதுகள் அநேகவிதம் 6 அணா முதல் 12 அணா வரை.

தணி கல் டஜன் அணா 6.

பாகெட் சர்ச்லைட் அல்லது ஆண்ட்லாம்பு. இதன் காந்தி 120 அடி கண்ணினால் காண கூசும் படியான 2½ இன்சு பூதகண்ணாடி உள்ளது. சுவரில், சைகளில் மாட்டலாம். கையில் பிடித்து போகலாம். பாகெட் லாம்பை காட்டிலும் 4 பங்கு வெளிச்சம் தரும். கலர் கோமேதகத்தை போன்று பலவிதமாய் தோன்றும். பாகெட்டில் அடங்கும் 4½ volt, பாட்டிரி 3½ volt பல்பு உள்பட லைட் 1-க்கு ரூ. **2-12.** தபால் கூலி அணா **9.**



S. I. E. Emporium,

Mount Road Window,

MADRAS.

காலண்டர் காட்லாக் வேணுமானால் ½ அணா ஸ்டாம்பு அனுப்பவேணும். வியாபாரிகளுக்கு இனாம்.

சுதாரச

இந்த ரஸாயனத்தை இரண்டு தடவை சாப்பிட்டால் கனோரியா என்னும் நீர்ச்சுருக்கு வியாதியை ஆச்சரியமாய்க் குணப்படுத்தும்; மூத்திரத்துடன் கடுப்பு, பொறுக்க முடியாத எரிச்சல், வெள்ளை, சசல நீர் ரோகங்களும் பச்சையாகவோ வெள்ளையாகவோ கீழ் வடிதல் முதலிய வியாதிகளை நிவர்த்தி செய்து மூத்திரத்தைக் குளிர்ச்சியாக இறங்கச் செய்யும். தொடர்ச்சியாக ஒரு வாரம் சாப்பிட்டால் பிறகு எப்போதும் இவ் வியாதி அணுகாது என்பது திண்ணம். ஸ்திரீகள் கஷ்டப்படும் சுக்லமேக வியாதிக்கு தேவாம்ருதம் போன்றது. மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

ஒரு புட்டி விலை ரூபா 3. வி. பி. தபால் செலவு வேறு.

ஆயுர்வேத மெடிகல் ஸ்டோர்ஸ், 49, தருவப்பன் தெரு,
சென்னை.

---

18 காரட் ரோல்டு கோல்டு

கோல்டன் டைல் அமைத்த ரீஸ்லெட் கெடியாரம் நெ. 60.

பலவிதமான விசித்ர வேலைகள் செய்த பொன்கிலிட்டு கேஸ் ரீஸ்லெட் கெடியாரங்கள். பளபளப்பான பொன் கிலிட்டிலும் பார்ப்பவர்களை ஆச்சரியப்படுத்தி ரூபா. 100 மதிப்புள்ளதாய் தோன்றும். உயர்ந்த சாமான்களால் செய்தது. சரியான காலம் காட்டும். நெடுநாள் உழைக்கும். (கையில் கட்டும் சங்கிலி இனாம்.)

நெ. 60 கெடியாரம் 4 மூலையுள்ளது ரூ. 8, நெ. 61 கெடியாரம் 8 மூலையுள்ளது ரூ. 8-8, நெ. 62 கெடியாரம் ரவுண்டுஷேப் ரூ. 7.

லண்டன் ஸ்விஸ் வாட்சு கம்பெனி,
வி. பி. சார்ஜ் வேறு. P. B. 328, மவுண்ட்ரோட், மதறாஸ்.

சு தே சி

கம்பளிப் போர்வை

நைஸானது கம்பளிநூல்

கரைகள் கிடையாது **குளிருக்கு அடக்கமானது.**

நெ. 1	6 மு x 3 வீதி	போர்வை 1க்கு	ரூ.	8 8 0
நெ. 2	,,	,,	,,	7 8 0
நெ. 3	,,	,,	,,	7 0 0
நெ. 4	,,	,,	,,	6 0 0

கே. எஸ். முத்தையா & கோ.,

தபால் பெட்டி 99 : : சென்னை.

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்கமானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது.

1	ஜெ.	விலை	ரூ. 11	முதல்	15	வரை.
2	,,	,,	10	,,	11	,,
3	,,	,,	8½	,,	10	,,

கம்பளிச் சட்டை.

முறுக்கு கம்பளி நூலால் செய்யப்பட்டது. குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்து கொண்டால் சீதளம் அண்டாது. தோட்டங்களில் இருப்பவர்களுக்கு அவசியமானது. கிரே கலர்.

விலை ரூபா 4-8.

உசத்தி வெள்ளை ரூ. 12 முசல் 18 வரை.

TRAVELLING RUGS.

நயமான கம்பளி, நல்ல குளிரில் போற்றிக் கொள்ள உதவும். கலர் கிரே, கறுப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகலம் ரூ. 5.

கம்பளி ஆசனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ. 1, 1½.
உசத்தி ரூ. 3½ முதல் 5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் 2½ முழம் அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 8.

மடி தாவளி.

இது அசல் கம்பளியால் நெய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள் ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக்கொள்ள உபயோகமுள்ளது.

5	முழம்	24	இஞ்சு அக.	ரூ.	2		10	முழம்	40	இஞ்சு அக.	ரூ.	7
6	,,	24	,,	,,	2½		16	,,	40	,,	,,	12
7	,,	29	,,	,,	3		18	,,	40	,,	,,	14
8	,,	40	,,	,,	5½							

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் அவுஸ், - - காசி.



PERFUME SPRAY.

பன்னீர்

தெளிக்கும் கருவி.

சாதாரணமான எந்த
வித பாட்டில்களிலும்
வைத்து உபயோகிக்கலாம்.

விலை 1-க்கு
ரூ. 2-4.



"Collapsible" Key Ring.

A Key Ring that does not buldge the pocket,

Price As. 3 each.
Dozen Rs. 2.

திருநெல்வேலி நூல் துண்டுகள்.

புது மாதிரி நெசவு. நீடித்து உழைக்கும்.
3 மு. துண்டு 1-க்கு அணா 14.
4 மு. ,, 1-க்கு ரூ. 1.

K. S. MUTHIAH & CO., Tinnevelly.

Printed at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.